66

# பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள்

ஆசிரியர் :

ரா. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., எல்.டி., பி.ஓ.எல்.,

தமிழ்த்துறைத் தலைவர், மதுரைக் கல்லூரி,

மதுரை.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

பதிப்பாசிரியர் :

பேராசிரியர் : ஆ. கார்மேகக்கோன்

மதுரை.

Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAN,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

வெளியிடுவோர் :

ஆ. கார்மேகக் கோன்

தல்லாகுளம் :: மதுரை

பதிப்புரிமை] [விலை ரூ. 1-12-0

கல்லூரிப் பதிப்பு
இரண்டாம்பதிப்பு—ஏப்ரல் 1957

பிரிமியர் ஆர்ட் பிரஸ் சென்னை-7

# முகவுரை

பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்களில் தட்சசீலம், நாளந்தா முதலியவை மிகவும் தொன்மை வாய்ந்தவை. பன்னூறாண்டுகட்கு முன்னரே மறைந்து போன இக்கழகங்களின் வரலாற்றை இற்றைக்கு 35 ஆண்டுகட்கு முன்னர் இந்திய அரசாங்கத்தின் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா டைரக்டராயிருந்த சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞரும் வேறு சில வரலாற்று ஆசிரியர்களும் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். பன்னூறாண்டுகட்கு முன்னர் இப்பல்கலைக் கழகங்களில் வந்து தங்கிக் கல்வி கற்று இவற்றின் செய்திகளை நேரில் அறிந்தவர்களான பாஹியான், யுவான்சுவாங், இத்சிங் முதலிய சீனதேசப் பெரியோர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புக்களும், இப்பல்கலைக் கழகங்கள் இருந்த இடங்களை அகழ்ந்து கண்ட உண்மைகளும், இவற்றின் வரலாற்றிற்கு ஆதாரமாகும். இச் செய்திகள் எல்லாம் நம் நாட்டுச் சரிதப் பேரறிஞர்கள் நன்கறிந்தவையாயினும், இவற்றின்வரலாறு இதுகாறும் தமிழ் மொழியில் வரன்முறையாக வெளி வந்ததில்லை. ஆதலால் மேற்குறித்த ஆசிரியர்களின் குறிப்புக்களையும் சாசனக் குறிப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டு புனைந்துரை ஒரு சிறிதுமின்றி இந் நூல் தமிழ் மொழியில் எழுதப்பெற்றுள்ளது.

அன்றியும் பண்டைப் பல்கலைக் கழகங்களோடு ஒப்ப எண்ணத் தகுந்த தமிழ்ச் சங்கங்களின் வரலாறும் பிற கல்விக் கழகங்களின் வரலாறும் அவற்றில் பயிலப்பட்ட பல கலைகளும், அச் சங்கங்கள் ஆற்றிவந்த பணியும் இதில் ஓரளவு விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. பண்டைப் பல்கலைக் கழகங்களைப் போல இக்காலத்தில் பணி புரிந்து வரும் சாந்திநிகேதனம், காசி இந்து பல்கலைக் கழகம்

ஆகியவற்றின் பெருமையும் ஓரளவு இதில் உரைக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் இவற்றோடு ஒப்பு நோக்கித் தெளிந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்துடன், இக் காலத்தில் தமிழ் நாட்டில் தலை சிறந்து விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் ஆகிய இவற்றின் சுருக்கமான வரலாறும், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் வரலாறும் இதில் குறிக்கப் பட்டுள்ளன.

இந்நூலைப் படிக்கும் மாணவர்கள் பண்டைப் பல் கலைக் கழகங்களின் சுவை நிரம்பிய வரலாற்றை அறிவ தோடு, அக்கால மாணவர்களின் சிறந்த வாழ்க்கை முறைகளை யறிந்து, அவற்றைத் தங்கள் வாழ்க்கைக்கு முன்மாதிரியாக அமைத்துக் கொள்ளவும் இந்நூல் உதவும் என்பது எனது துணிபு.

இந்நூலை வெளியிட வேண்டுமென்று விரும்பிக் கல்வி நூல் வெளியீட்டாளரான **பேராசிரியர் திரு. ஆ. கார் மேகக் கோனார்** அவர்களை நான் வேண்டியபோது, அன் னார் எனது வேண்டுகோளை உவப்புடன் ஏற்றுக்கொண்டு இதனை வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் இதன் கையெழுத் துப் படிகள் முழுவதையும் படித்துப் பார்த்து, இன்றி யமையாத பல திருத்தங்களைச் செய்து இதனைப் பலவகை யிலும் அழகுறப் பதிப்பித்த பதிப்பாசிரியராகவும் இருப் பது இவ்வெளியீட்டிற்குப் பெருமை தருவதாகும். இந் நூலை வெளியிட்டு எனது விருப்பத்தினை நிறைவேற்றிய இப்பேராசிரியர்க்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

மதுரை,
30—1—1956

**ஆசிரியன்.**

# உள்ளுறை


| எண். | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | ... | 5 |
| 2. | தட்சசிலம் | ... | ... | 19 |
| 3. | நாளந்தா பல்கலைக் கழகம் | ... | ... | 34 |
| 4. | விக்கிரமசீலம் முதலியவை | ... | ... | 53 |
| 5. | தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள் | | ... | 63 |
| 6. | தமிழ்ச் சங்கங்கள் | ... | ... | 75 |
| 7. | புதுமையில் பழமை | ... | ... | 94 |
| 8. | முடிவுரை | ... | ... | 113 |



நாளந்தாவில் புதையுண்டிருந்து எடுக்கப்பெற்ற
புத்த தேவரது வெண்கலப் படிமத்தின் தோற்றம்

# பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள்

## நூன்முகம்

நம் இந்தியாவின் வரலாற்றில் பண்டைக் காலம் கல்வியில் மிகச் சிறப்புற்று இருந்த காலமாகும். வரலாற்று அறிஞர்கள், ஏறத்தாழக் கி. மு. 200 முதல் கி. பி. 1200 வரை உள்ள பண்டைக் காலத்தைப் பற்றி ஆராய்ந்து பல செய்திகளை வெளியிட்டிருக்கின்றனர்கள். அக் காலத்தில் நம் நாடு இலக்கியம், இலக்கணம், சமயம், நுண்கலைகள், தத்துவம், விஞ்ஞானம், மருத்துவம், அரசியல், பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருந்தது. அதே சமயத்தில் இத்துறைகளுள் மற்ற உலக நாடுகள் பெரும்பாலன, மிகப் பிற்போக்காக அநாகரிக நிலையிலேயே இருந்தன. எகிப்து, ரோம், கிரீஸ், மெஸபட்டோமியா, சீனு, முதலிய சில நாடுகள் மட்டும் நாகரிகத்தில் ஓரளவு முன்னேற்றம் பெற்றிருந்தன. மேற்கூறிய காலத்தை இந்திய வரலாற்றில் ஒரு சிறப்பான காலம் என்று கூறின் அது சிறிதும் தவருகாது.

பண்டைக் காலத்தில் நமது நாடு இத்தகைய உயர் நிலையில் இருந்ததற்குக் காரணம் இங்குப் பரவியிருந்த கல்வியின் சிறப்பே என்று கூறலாம். அக்கல்வி, சிறப்பாகப் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பரிஷத்துக்கள்,

*சங்கங்கள் என்பவற்றிலும், பொதுவாக வீடுகள், ஆசிரமங்கள் இவற்றிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தது. பண்டைப் பல்கலைக் கழகங்களில், மலைமேலிட்ட விளக்குப் போலப் புகழொளியை வீசி விளங்கியவை **தட்சசீலம், நாளந்தா, விக்கிரமசீலம், காசி** என்பவை. இவற்றுள் தட்சசீலமே மிகவும் பழைமையானது. அது சுமார் கி. மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே மிகச் சிறந்து விளங்கியது. தட்சசீலத்தோடு ஒத்த பழைமை வாய்ந்தவை தமிழ் நாட்டில் நிலவிய முதலிடைச் சங்கங்கள். நாளந்தா பல்கலைக் கழகம், தட்சசீலத்தைப் போல் தொன்மையுடைய தல்லவெனினும், இரண்டொரு நூற்றுண்டுகளே பிந்தித் தோன்றியதாக இருக்கக்கூடும். ஏனெனில், புத்தர் அங்குச் சென்று சமயக் கல்வி முதலிய பல பொருள்களைப் பற்றி அங்கிருந்த பேராசிரியர்களோடு விவாதித்ததாகக் கூறப்படுகின்றது. புத்தரது காலமோ கி. மு. 6-ஆம் நூற்றுண்டு. எனவே, அது அப்பொழுதே புகழ் பெற்ற கல்வி நிலையமாய் இருந்தது என்று ஊகித்தல் பொருந்தும். எனினும் அது மிகப் புகழுடன் விளங்கிய காலம் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு முதல் 12-ஆம் நூற்றுண்டு வரையே ஆகும்.

அதே காலத்தில், †கன்னோசி, புருஷபுரம் முதலியவையும் கல்விக்குப் பெயர் பெற்ற இடங்களாகத் திகழ்ந்

---


*சங்கங்களுள் மிக்க பழைமையும் பெருமையும் வாய்ந்தவை தமிழகத்தில் நிலவியிருந்த முச்சங்கங்கள்.

†கன்னோசி (Kanouj) இப்போது உத்தரப்பிரதேசத்தில் (U. P.) உள்ளது. புருஷபுரம் (Peshawar) பாகிஸ்தானத்தின் எல்லைப்புற மாகாணத்தில் (N. W. F. P.) உள்ளது.

தன. இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன்னர், தமிழ் நாட்டில் தமிழ்க் கல்விக்கு உறைவிடமாய் இருந்த இடம் மதுரையே. அங்குப் பன்னூறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த மூன்றும் தமிழ்ச் சங்கம் தமிழ் மொழியைச் சிறந்த முறையில் பேணி வளர்த்து வந்தது. அதில் தலை சிறந்த புலவர் பலர் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்து சிறந்த தமிழ் நூல்களை இயற்றி வெளியிட்டு வந்தனர். அச்சங்கம் பாண்டிய அரசர்களால் வழி வழியாகப் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. சேர சோழராகிய மற்றப் பெருவேந்தரும், சில சிற்றரசர்களும், வள்ளல்கள் முதலியவர்களும் தத்தம் அவைக்களங்களில் தமிழ்ப் புலவர்களைப் போற்றியும், அவர்களைக் கொண்டு தமிழ் நூல்களை இயற்றுவித்து வெளியிட்டும் வந்தனர்.

இங்குத் தொகுத்துக் கூறிய இச்செய்திகள் எல்லாம் மேல் வகுத்துக் கூறப்படும்.

கல்வியில் பேரார்வமுடையவர்க்கு இத்தகைய கல்வி நிலையங்களின் வரலாறு சீரிய சுவை பயக்குமென்பது கருதிப் பண்டைப் பல்கலைக் கழகங்களின் வரலாறு ஒருவாறு இச் சிறு நூலில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. இதைப் படிக்கும் மாணவர்கள் நம் பண்டைய கல்விப் பெருமையை உணர்ந்து கல்வியில் ஊக்கம் கொண்டு நன்னெறி போற்றி ஒழுகுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.




பண்டை இந்தியாவில் பல்கலைக் கழகங்கள்
இருந்த இடங்கள்

# 1. தோற்றுவாய்

இந்தியாவின் வரலாற்றில் சாதாரணமாகப் 'பண்டைக் காலம்' என்பது, சுமார் கி. மு. 2000 முதல் கி. பி. 650 வரை ஆகும்; 'இடைக் காலம்' என்பது கி. பி. 650 முதல் 1800 வரை என்றும் கூறலாம்; பின்பு உள்ளது 'பிற்காலம்' எனப்படும்.

**பண்டைக் காலத்தின் முதற் பிரிவு :**

முதலிற் கூறிய பண்டைக் காலப் பகுதியில் சகாத்தங்கள் என்னும் இரண்டு பெரிய காலப் பிரிவுகள் காணப்படுகின்றன. முதற் பிரிவு கி. மு. 2000 முதல் கி. மு. 200 வரை; இரண்டாவது பிரிவு, கி. மு. 200 முதல் கி. பி. 650 வரை. முதற் காலப் பிரிவில் வட இந்தியாவில் பெரும்பாலும் சமயச் சார்பான நூல்களும் இசைப் பாடல்களும் உயர் நிலையில் இருந்தன. அப்போது தான் அங்கு வேத கீதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள் முதலியவை தோன்றின. உபநிடதங்களைப் படிக்கும் எவரும், அக்காலத்தில் இந்தியருடைய சிந்தனை, அறிவு முதலியவை எவ்வளவு உயர் நிலையை அடைந்திருந்தன என்பதை எளிதில் அறிந்து வியப்படைவர்.

இக்காலத்திலோ, இதற்கு இன்னும் முன்போ, தமிழ் நாட்டில் முதல் இடை என்னும் இரண்டு தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாகத் தொன்னூல் உரைகளில் கூறப்படுகின்றது. அச்சங்கங்களில் தோன்றிய நூல்களில் இடைச் சங்கத் தொடக்கத்தில் தோன்றியதென்று கருதப்படும்

தொல்காப்பியம் என்னும் பெரும் பனுவல் இன்றளவும் நின்று நிலவுகின்றது. ஏனைய நூல்களைப்பற்றிப் பெயரளவில்மட்டும் இன்று நாம் அறிய முடிகிறது. அந் நூல்கள் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் இயற்றப்பட்ட பாட்டுக்களுள் சில பாட்டுக்கள் மூன்றும் சங்கத் தொகை நூல்களில் தொகுக்கப்பெற்றிருக்கின்றன என்று தெரிகிறது. முதலிரண்டு சங்கங்களை அடுத்து வந்த மூன்றும் சங்க நூல்களின் சிறப்பைக் கொண்டே அவற்றிற்கு முன்பு இருந்த நூல்களின் பெருமையை நாம் உய்த்துணரலாம். ஆகவே தமிழ் மொழியும், தமிழரது அறிவும் சிந்தனையும், பண்டைக் காலத்தின் முதல் சகாத்தத்திலேயே மிகவும் உயர் நிலையில் இருந்தன என்பது தெளிவு.

**பண்டைக் காலத்தின் இரண்டாம் பிரிவு :**

பண்டைக் காலத்தின் இரண்டாம் பிரிவு தொடங்கும் முன்பே, இந்தியா முழுவதிலும் புத்த ஜைன சமயங்கள் பரவி நிலைத்திருந்தன. புத்த மதத்தை நிலை நாட்டிய கௌதம புத்தரும், ஜைன மதத்தைத் தோற்றுவித்த வர்த்தமான மகா வீரரும் கி. மு. 6-ஆம் நூற்றுண்டில், ஏறக்குறைய ஒரே காலத்தில் இருந்தவர்கள். அவர்கள் தோற்றுவித்த மதங்கள் விரைவில் எங்கும் பரவி, வட நாட்டு வேதகாலக் கல்வி, சமயம், தத்துவம், கலை, ஆகியவற்றின் வேரை அசைத்து விட்டன. வேத மொழியாகிய பண்டை வட மொழியும் வழக்கழிந்து, ‘பிராகிருதம்’ என்னும் கொச்சை (திருத்தாத) மொழியாக மாறி விட்டது. அம்மொழியிலேயேதான் பௌத்த ஜைன நூல்களும் பிரசாரங்களும் செய்யப்பட்டு வந்தன. எனினும் அக்காலத்திலும் இந்தியக் கலைகளும் விஞ்ஞா

னத் துறைகளும், மிகவும் முன்னேற்றமான நிலையில் இருந்தன. அக்காலத்திலே தான் வட இந்தியாவில் தட்சசீலம் என்னும் இடத்திலிருந்த பல்கலைக் கழகம் மிகவும் புகழுடன் ஓங்கி இருந்தது. அது இந்து சமயக் கல்விக்கும் கலைக்கும் சிறப்பிடமாய் இருந்தது. வைதிக மதத்திற்குப்* புறம்பான மதத்தவரும் அப்பொழுது அங்குச் சென்று கல்வி பயின்றனர்.

**வைதிக மறுமலர்ச்சி :**

பௌத்த ஜைன மதங்கள் பரவி வரும் வேகத்தைக் கண்ட வைதிக மதத்தவர்கள் மீண்டும் பெருமுயற்சி செய்து, அவைகளுக்கு எதிராக, வைதிக மதத்தில் ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கினார்கள். அம் மறு மலர்ச்சி இயக்கத்தின் ஒரு பகுதியாக, வழக்கழிந்த வேத கால மொழிக்கு ஈடாக, '**சம்ஸ்கிருதம்**' என்னும் ஒரு புது மொழி உண்டாக்கப்பட்டது. கடினமாய் இருந்த வேத மொழியை எளிமைப் படுத்தியும், வழக்கிலிருந்த பிராகிருத மொழியைச் சீர்படுத்தியும் இப் புதுமொழி உண்டாக்கப்பட்டது. சம்ஸ்கிருதம் என்ற சொல்லுக்குச் 'செப்பம் செய்யப்பட்டது' என்பது பொருள். சம்ஸ்கிருதத்தின் விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகள் மிகச் சிறந்திருந்தன. மகா **கவி காளிதாசர்** அக்காலத்தில் வாழ்ந்தவரே. கணிதம், வான நூல், கட்டிடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, முதலியவை அக்காலத்தில் ஓங்கி இருந்தன. அப்போதுதான் கிழக்கிந்தி

---

*வைதிக மதம் என்பது இந்துக்களின் நான்கு வேதங்களை அடிப்படையாகக் கொண்ட மதம்; அதாவது இந்து மதம் என்று இப்பொழுது கூறப்படுவது.

யாவில் பீகார் மாகாணத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் சிறப்புற்றிருந்தது. அது பௌத்த மதச் சார்பான கல்விக்கும் சம்ஸ்கிருதக் கல்விக்கும் முக்கிய இடமாய் இருந்தது.

**மூன்றும் தமிழ்ச் சங்கம் ;**

பண்டைக் காலத்தின் இரண்டாம் பிரிவிலேதான் தமிழ் நாட்டில் தலை சிறந்த மூன்றும் தமிழ்ச் சங்கம் நிலவி இருந்தது. அதன் காலம் சுமார் கி. மு. 300-க்கும் கி. பி. 200-க்கும் இடைப்பட்டதாகும் என்று ஆராய்ச்சியாளர் முடிவு கூறியிருக்கின்றனர். அக்காலத்திலேதான் தமிழரின் அரும் பெருங் கருவூலங்கள் என்று கருதத் தகுந்த சிறந்த **சங்க நூல்கள்** இயற்றப்பட்டன. அக் காலத்தில் தமிழ் நாட்டிலும் புத்த ஜைன மதங்கள் பரவியிருந்தன. அக்காலத்தின் இறுதிப் பகுதியில் இயற்றப் பெற்ற **சிலப்பதிகாரம்** என்பது மிகவும் சிறந்த ஜைன மதச் சார்பான நூல். **மணிமேகலை** என்பது உயர்ந்த புத்த மதச் சார்பான நூல். இவைகளுக்குச் சிறிது பின்னர்த் தோன்றிய **நாலடியார்**, **பழமொழி நானூறு** முதலிய சில நூல்களும் சமண சமயப் புலவர்கள் இயற்றியவைகளே, தமிழில் உள்ள **எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும், பதினெண் கீழ்க் கணக்கு நூல்களிற் சிலவும் சங்க நூல்கள்** என்றும், **சிலப்பதிகாரம், மணிமேகலை** ஆகிய காப்பியங்களும் பதினெண் கீழ்க்கணக்கில் எஞ்சிய சிலவும் **சங்கமருவிய நூல்கள்** என்றும் கூறப்படும். இந் நூல்களிலிருந்து அக்காலத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் இலக்கியம், பலதிறப்பட்ட கலைகள், ஆகியவை மிகச் சிறப்புற்றிருந்தமை நன்கு தெரியும்.

**பண்டைக் காலத்தில் பெண்கள் நிலை :**

பண்டைக் காலத்தின் மேற்கூறிய இரு பிரிவான காலங்களிலும் இந்தியா முழுவதிலும் கல்வியிலும் சிந்தனையிலும் சிறந்த பெண்பாலார் பலர் இருந்தனர். வட இந்தியாவில் **மைத்திரேயி, கார்க்கி** முதலிய வேதகாலப் பெண்மணிகளும், தமிழகத்தில் **ஔவையார், காக்கை பாடினியார்** முதலிய சங்ககாலப் பெண்மணிகளும், மக்களது **அறிவு வாழ்க்கையில்** பெரும்பங்கு கொண்டவர்கள். பெண் கல்வியும் அப்போது சிறப்புற்றிருந்தது. பெண்பாலார் பலவித உரிமைகளுடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஆடவர்களுக்கு அறிவு நிலையில் குறைந்தவர்களாய் இருக்கவில்லை. ஆடவர்களும் அவர்களை நன்கு மதித்து வந்தார்கள்.

**இடைக்காலத்தின் முதற்பிரிவு:**

கி. பி. 7-ம் நூற்றுண்டு முதல் முகமதியர் இந்தியாவில் நுழைந்து, நமது கல்வி, கலை முதலியவற்றை அழிக்கத்தொடங்கிய 12-ஆம் நூற்றுண்டின் இறுதிவரை உள்ள இடைக்காலப் பகுதியின் முதல் பிரிவில் கூட, இந்தியாவின் கல்வி நிலை மிக உயர்ந்ததாகவே இருந்தது. அக்காலத்தில் கன்னோசி, காசி, புருஷபுரம் (பெஷாவர்), காஞ்சி என்னும் இடங்கள் இந்து சமயச் சார்பான கல்வி, கலைகள் முதலியவற்றிற்குச் சிறந்த கேந்திரங்களாய் இருந்தன. கி.பி. 9-ஆம் நூற்றுண்டு முதல் 12-ஆம் நூற்றுண்டு வரை நாளந்தாவும் பௌத்த சமயக் கல்விக்கு மிகப் பெயர் பெற்ற இடமாய் இருந்தது. அதனருகிலேயே அக்காலத்தில், **விக்கிரமசீலம், ஜகத்தாலம், ஓதண்டபுரி** என்னும் இடங்களில் பௌத்த சமயக் கல்விக்காக வேறு

சில பல்கலைக் கழகங்களும் தோன்றி உயர்ந்த தொண்டு புரிந்து வந்தன.

**பண்டைக் காலத் தொடக்கக் கல்வி :**

புத்தர் காலத்தில் (கி. மு. 6-ஆம் நூற்றாண்டு) சிறுவர்களுக்கான ஆரம்பக் கல்வி நிலையங்கள் பல இருந்ததாக நாம் அறிகிறோம். புத்தரும் அத்தகைய பள்ளி ஒன்றிற்குச் சென்று எழுத்து, கணக்கு முதலியவற்றைக் கற்றார். அதற்கு முன்பே அவர் அரண்மனையில் அவற்றை ஓரளவு கற்றிருந்தார். எனினும், உலக வழக்கை ஒட்டி அவரும் தொடக்கப் பள்ளிக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அப் பள்ளிகளில் சிறுவர்களுக்கான நீதி நூல்களும், பஞ்ச தந்திரம் போன்ற நீதிக் கதைகளும் கற்பிக்கப்பட்டன. அப் பள்ளிகள் மரத்தின் அடியிலோ பந்தல்களிலோ நடத்தப்பெறும். வகுப்பில் சிறந்த மாணவர்களைச் சட்டாம்பிள்ளைகளாக்கும் வழக்கம் அப்பொழுது இருந்தது. அச் சட்டாம்பிள்ளை, ஆசிரியருக்கு உட்பட்டு, மற்றப் பிள்ளைகளுக்குப் பாடங் கற்பித்து, வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்டி வருவான். ஆசிரியர் ஊரில் இல்லாதபோதும் அவன் அவ்வாறே பள்ளியைக் கவனித்துக்கொள்வான். மற்ற மாணாக்கர் அவனை மரியாதையாகவே நடத்துவர். பள்ளிகளில் சட்டாம்பிள்ளையை நியமிக்கும் முறையை நம்மிடம் மேனாட்டவர் கண்டறிந்து, தம் பள்ளிகளிலும் அவ்வாறே இப்பொழுதும் செய்து வருகின்றனர்.

**உயர்தரக் கல்வி :**

மிகவும் பழங்காலத்தில், இப்பொழுது உள்ளதைப் போல் உயர்தரக் கல்விக்கென்று தனியாகக் கல்வி நிலையங்

கள் இல்லை. ஒரு முனிவர் அல்லது பெரியவர் தம் வீட்டிலோ அல்லது காட்டில் உள்ள ஆசிரமத்திலோ, சில மாணவர்களுக்கு நூல்களை வாய் மொழியாகப் போதிப்பார். பெற்றோர்கள் தம் மக்களைத் தக்க ஆசிரியரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பார். அல்லது மாணவர்கள் தாங்களே தக்க ஆசிரியரை நாடிச்செல்வார்கள். ஆசிரியர்கள் மாணவர்களைத் தம்பால் சேர்த்துக் கொள்ளுமுன்பு, அவர்கள் தம்மிடம் கற்கத் தகுதியுடையவர்களா என்றறியச் சில கேள்விகள் கேட்டுச் சோதிப்பார்கள். அச் சோதனையில் வெற்றி பெற்றவர்களையே அவர்கள் தங்களிடம் மாணவர்களாக இருக்க ஏற்றுக்கொள்வார்கள். மாணாக்கர் ஆசிரியர்களுடனே சில ஆண்டுகள் தங்கியிருந்து, அவருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு கல்வி கற்பார்கள். ஆசிரியருக்கு ஊதியம் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை. மாணவர்கள் தாங்களே விரும்பிக் கொடுப்பதை அவர் மனமுவந்து பெற்றுக்கொள்வார். அத்தகைய காணிக்கை அல்லது கையுறையை, மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்துக் கொண்ட பிறகு எப்பொழுதாயினும் கொடுக்கலாம். இத்தகைய கல்வி முறையைக் ‘ குருகுல வாசம் ’ என்று கூறுவார்கள்.

இவ்வழக்கம் நம் தமிழ் நாட்டிலும் மிகவும் பழங்காலத்திலேயே நிலவி இருந்தது என்பதற்குப் புறநானூற்றுப் பாடல் ஒன்று சான்று பகர்கின்றது. “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே,” என்னும் பாண்டியன் நெடுஞ்செழியன் பாட்டே அது. ஆசிரியருக்குத் துன்பம் வந்தபோது உதவி செய்தும், மிக்க பொருளைக் கொடுத்தும், அவருக்

குத் தொண்டு செய்வதை வெறுக்காமல் கல்வி கற்க வேண்டும் என்பது இவ்வடிகளின் பொருள்.

இத்தகைய குருகுலக் கல்வி நிலையங்களில் அறநூல்கள், மறைகள், புராணம், இதிகாசம், இலக்கணம், கணிதம், சோதிடம், தருக்கம், மொழிநூல், வானநூல், படைக்கலப் பயிற்சி முதலிய பலவும் கற்பிக்கப்பட்டு வந்தன. அவற்றில் அந்தணர், அரசர் முதலிய எவரும் கல்வி கற்கலாம்.

**கல்லூரிகள் :**

இவை எல்லாவற்றையும் விட வட இந்தியாவில் வேதியர்களைக் கொண்டு நடத்திவந்த "பரிஷத்துக்கள்" என்னும் கல்லூரிகளே சிறந்த உயர்தரக் கல்வி நிலையங்களாய் இருந்தன. அவை இக்கால மேனாட்டுக் கல்லூரிகளைப் போல மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு ஏற்ற முறையில் அமைந்திருந்தன. இத்தகைய ஒவ்வொரு பரிஷத்தையும் பெரும்பாலும் இருபத்தொரு பிராமணர்கள் நடத்துவார்கள். சிலவற்றில் இவ்வெண்ணிக்கைக்குக் குறைந்தவர்களும் உண்டு. அவர்கள் தத்துவம் சமயம், சட்டம் முதலியவற்றில் வல்லவர்களாய் இருப்பார்கள். அக்கல்வி நிலையங்கள் நகரங்களுக்கு அப்பால் அமைதியான இடங்களில் நடைபெற்றன. அவற்றில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி, உணவு, உறையுள் முதலியவை வழங்கப்பட்டன. இச் செலவுகளுக்காக அரசர்கள் அல்லது பெருஞ் செல்வர்கள், அக் கல்லூரிகளுக்கு மானியங்கள் கொடுத்து வந்தார்கள்.

**மாணவர் வாழ்க்கை :**

இக்கல்வி நிலையங்களில், படிக்கும் மாணவர்கள் ஆடம்பரமற்ற, எளிய வாழ்க்கையே வாழவேண்டும் என்னும் ஒழுங்கு இருந்தது. அரச குடும்பத்தவராயினும் பெருஞ் செல்வராயினும், அவர்களுக்கு விதிவிலக்கோ, தனித் தயவு காட்டலோ இல்லை. எல்லாரும் ஆசிரியருடைய கட்டளைப்படி கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் நடந்துகொள்ளவேண்டும். அதிகாலையில் எழுந்திருந்து ஆசிரியரையும் கடவுளையும் வணங்குவதும், குறைவாகவே உண்பதும், நாள்தோறும் தவறாது குளித்து உடலினைத் தூய்மை செய்வதும், பாயிலோ தரையிலோ படுப்பதும், உண்ணும்போது பேசாமல் உண்பதும், எளிய ஆடைகளையே உடுப்பதும், ஆசிரியர் இடும் பணிகளைச் செய்வதும், அக்கால மாணவர் வாழ்க்கையில் முக்கிய ஒழுங்குகளாகும். மாணவர் யாவரும் மணமாகாத இளைஞர்களாகவே இருப்பார்கள். எவ்விதமான கெட்ட நடவடிக்கைக்கும் ஒழுக்கக் குறைவிற்கும் அங்கு இடமில்லை. இங்ஙனம் இளமையில் அவர்கள் மிக உயர்ந்த ஒழுக்கத்துடன் நடந்து பழகிக் கொண்டதால், அது அவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் மிகப் பயன்பட்டது. கல்வியை முடித்துக்கொண்ட மாணவன் ஆசிரியரது உத்தரவு பெற்றுத் தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்று, மணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துவான். வாழ்க்கையில், தான் கற்றவற்றை ஒழுங்காகக் கடைப்பிடித்து ஒழுகுவான்.

**இந்தியக் கல்வியின் சிறப்பியல்புகள் :**

இந்தியர்களுக்குக் கல்வியின் மிக உயர்ந்த குறிக்கோளாவது ஆன்ம வளர்ச்சியே. ஆகவேதான் பள்ளியில்

ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் வற்புறுத்தப்பட்டன. "சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ, நன்றின்பால் உய்ப்பதறிவு" என்ற திருக்குறள்படி, மனத்தைக் கட்டுப் படுத்தி, அதை நல்ல நெறியில் செலுத்துவதற்கே ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வந்தார்கள். அதுவே கல்வியின் இலட்சியம். தூய வாழ்க்கை வாழ்வதற்கு அடிப்படையான பயிற்சி, குருகுலப் பள்ளிகளில் அளிக்கப்பட்டு வந்தது. ஆசிரியரே அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டி, மாணவர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினர். ஆகையால் மாணவர் தம்மை அறியாமலே, அவரது வாழ்க்கையைப் பின்பற்றி வாழத் தொடங்குவர். இதனால் ஆசிரியருக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பு இருந்தது. அவர் யாவராலும் மிகவும் நன்கு மதிக்கப் பட்டு வந்தார். மாணவர்கள் அவரைத் தெய்வமாகவே கருதும் வழக்கம் இருந்தது. அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தம்முன் (தமையன்) எனப்பட்ட ஐம் பெருங் குரவர்களுள் அவர் ஒருவர். 'எழுத்தறிவித் தவன் இறைவனாகும்,' என்பதும் இதுபற்றியே யாகும்.

**கல்விப் பயிற்சி :**

அக்காலத்தில் முதலில் மனப்பாடம் செய்யும் பயிற்சியே முக்கியமாக வற்புறுத்தப்பட்டு வந்தது. இதனால் மாணவர்களுக்கு ஆரம்பம் முதலே சரியான உச்சரிப்பு, நினைவாற்றல், மனத்தை ஒருமுகப்படுத்தல் முதலிய சீரிய பயிற்சிகள் உண்டாகும்; தோத்திரப் பாடல்கள், நிகண்டுகள், அறவுரைகள், முதலியவை முதலில் மனப் பாடம் செய்யப்படவேண்டும். இறைவனுடைய கட்டளைக்கும் ஆசிரியனுடைய ஆணைக்கும் கீழ்ப்படியவேண்டு மென்பதும்,உழைப்பைப் புறக்கணிக்கக் கூடாதென்பதும்

பள்ளி வாழ்க்கையில் அறிவுறுத்தப்பட்டன. ஒவ்வொருவருடைய ஆற்றல்களையும் அவரவர்க் கேற்ற துறைகளில் செலுத்தி, அவர்களை வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாகச் செய்வதற்கு ஏற்ற பயிற்சி, அப் பள்ளிகளில் அளிக்கப்பட்டது.

## பாடம் சொல்லும் முறை :

அக்காலத்தில், பாடம் சொல்லும் முறை, கல்லூரிகளில் இக்காலத்தில் இருப்பதுபோல, வெறுஞ் சொற்பொழிவுகளாய் இல்லை. ஆசிரியரும் மாணவரும் யாதொரு தடையும் இன்றிக் கற்றவற்றைப்பற்றித் தமக்குள் மனம் விட்டு விவாதிப்பார்கள். மாணவர்கள் எத்தனை கேள்விகளை வேண்டுமானாலும் கேட்கலாம். ஆசிரியர் அவற்றுக்கெல்லாம் தக்க விடையளித்து மாணவர்களின் ஐயங்களைப் போக்குவார். பாடம் சொல்லுதல் என்பது பெரும்பாலும் கேள்வி கேட்பதும் விடையளிப்பதுமாகவே இருக்கும். விளக்கம் வேண்டும் பகுதிகளை ஆசிரியர், மக்கள் வாழ்க்கையிலிருந்தே பல செய்திகளை அல்லது எடுத்துக்காட்டுகளைக் கூறி விளக்குவார். மாணவரது அறிவாசையைத் தூண்டி, ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்ப்பதே, பாடம் சொல்லுவதன் நோக்கமாகும்.

## கற்பதில் மாணுக்கர் கடமை :

மாணுக்கர் ஆசிரியரிடம் பாடங் கேட்டபின், தாமே தனித்திருந்து அப்பாடத்தை மீண்டும் படித்து, படித்தவற்றைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் ; சிந்தித்துத் தாமே ஐயங்களைத் தெளியவேண்டும். தெளியாத பொருள்கள் இருப்பின், மீண்டும் ஆசிரியரிடம் செல்லும்போது அவற்

றைக் கேட்டுத் தெளியவேண்டும். ஒன்றை மற்றொன்றாக மாறுபட உணரும் திரிபுணர்ச்சி ஏற்படாமலிருக்க, அவர்கள் பலகாலும் பல செய்திகளைப் படிக்கவும் கேட்கவும் வேண்டும். கற்ற பொருள்களைப் பற்றி விடாது, வாழ்க்கையில் கொண்டொழுக வேண்டும். இவை மாணவரின் கடமைகளாகும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நீதிகளையும் ஒழுங்குகளையும் உயர்ந்த குறிக்கோள்களையும் கதைகள் மூலமாகப் புகட்டுவார்கள். பஞ்சதந்திரம், இதோபதேசம் என்னும் நீதிக் கதைகளும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும் இதற்காகப் போதிக்கப்பட்டு வந்தன. இத்தகைய கதைகள், மாணுக்கர்களுக்கு மிகவும் சுவையூட்டி அவர்களை மகிழ்விக்கும்.

**மனப் பயிற்சி :**

மாணவரது அறிவை வளர்ப்பதற்கு, அவ்வறிவின் வேராகி மனத்தைப் பண்படுத்த, கடவுட்பற்று, பிரார்த்தனை, தியானம், நல்லொழுக்கம் முதலியவை மிகவும் வற்புறுத்தபட்டன. இக்கால மேனுட்டு முறைப்படி, புலன்களின் திறமையை வளர்க்கும் முறையை நம் முன்னேர்கள் கைக்கொள்ளவில்லை. புலன்கள் வாயிலாக மட்டும் உண்மை யறிவைப் பெறவும் மனத்தைப் பண்படுத்தவும் முடியாது என்று அவர்கள் கருதினர்கள். மனத்தைத் தனியாகவே, மேற்கூறிய முறைகளில் பண்படுத்திய பிறகு அறிவை விளங்கச் செய்வதே அவர்களது கல்விப் பயிற்சி முறையாகும்.


**மாணவ ஆசிரிய உறவு :**

மாணவர்களும் ஆசிரியரும் ஒரு குடும்பம் போல் அன்புடன் மனமொத்து வாழ்ந்து வந்தார்கள். இரு

திறத்தாரும் மற்றவருடைய நலத்தைப் பேணுவதிலேயே கருத்தாயிருந்தனர். இதை நாம் பின்வரும் செய்தி ஒன்றுல் நன்கு தெரிந்துகொள்ளலாம். நாள்தோறும் பாடத்தைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும், ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து "கடவுள் எங்களைக் காப்பாராக; நாங்கள் இன்புற்றிருப்போமாக; நாங்கள் நற்செயல்களையே செய்வோமாக," என்று சொல்லி இறைவனை வழுத்துவார்கள். ஆசிரியர் தாம் கற்ற எதையும் மறைக்காமல் மாணவர்களுக்குத் தெளிவாய் அறிவுறுத்த வேண்டுமென்னும் நியதி இருந்தது. மாணவன் ஆச்சிரமத்தில் கல்வியை முடித்து வீட்டுக்குச் சென்று பெற்ருேருடன் வாழத் தொடங்கும்போது, ஆசிரியர் அவனுக்குப் பின்வரும் அறிவுரையை வழங்குவார்; "உண்மையே பேசு. அறத்தின்படி நட. கற்றதை மறவாதே. உடலைப் பேணு. உலக இன்பங்களை வெறுக்காதே. தாய் தந்தையரைத் தெய்வமாகக் கருது. விருந்ினரைப் பேணு."

**தொழிற் கல்வி:**

பண்டைக் காலத்தில் கல்லூரிகளில் பலவகைக் கைத்தொழில்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆசிரியராதற்குரிய போதனைப் பயிற்சி, போர்வீரராதற்குரிய படைக்கலப் பயிற்சி, வணிகருக்குரிய கணிதம், கடிதம் எழுதும் முறை, மருத்துவப் பயிற்சி, அரசர்க்குரிய ஆட்சிமுறைப்பயிற்சி முதலிய பலவகைத் தொழிற் பயிற்சிகள் அக்காலத்தில் அளிக்கப்பட்டுவந்தன.



புதைந்திருந்த தட்சசீலப் பல்கலைக் கழகக் கட்டிடத்தின் ஒரு பகுதி.

# 2. தட்சசீலம்

**பழைமை :**

நம் நாட்டில் மிகப் பழங்காலத்திலே தோன்றிப் பல நூற்றாண்டுகள் உயர் நிலையிலிருந்த பல்கலைக் கழகம் தட்சசீலம் என்பது. அது கி. மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே மிக முக்கியமான கல்விக் கேந்திரமாய் விளங்கியது. ஆகவே, அதற்கும் பல நூற்றாண்டுகள் முன்பே அது தோன்றியிருக்க வேண்டும். வால்மீகி ராமாயணத்திலேயே அதன் பெருமை கூறப்பட்டிருக்கிறது. தட்சசீலம் சட்டக் கல்விக்குப் பெயர் பெற்றது என்று அந்நூல் கூறுகிறது. இராமன் தம்பி பரதன், தன் இரு மக்களாகிய தட்சன், புட்கலன் என்பவர்களை முறையே தட்சசீலம், புட்கலாவதி என்னும் இடங்களில் அரசராக நியமித்தான் என்றும் அது கூறுகிறது. தட்சசீலம் என்று அந் நகருக்குப் பெயர் வரக் காரணம் இதனால் அறியப்படும். தட்சன் ஆண்டதால் அது தட்சசீலம் எனப்பட்டது. மகாபாரதத்திலும் அதைப்பற்றிய குறிப்பு உளது. ஜனமேஜயன் என்னும் அரசன் அதை வென்றான் என்பதும், அவன் அங்குப் பாம்புகளையெல்லாம் கொல்ல யாகம் நடத்தினான் என்பதும் அதில் கூறப்பட்டிருக்கின்றன. தௌமியர் என்னும் முனிவர் அங்கு மூன்று சீடர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்ததாகவும் பாரதம் குறிப்பிடுகிறது. அரசர்கள்கூட அங்குக் கல்வி பயின்றார்களாம். அங்குக் கற்றுத் தேர்ந்த மாணவர்கள் கல்வியிலும் விவாதத் திறமையிலும் மிகவும் சிறந்தவர்கள் என்றும் மகாபாரதம் கூறுகிறது. இவ்விரு இதிகாசக்

கதைகளும் நடந்த காலம் சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டாத காலம். அக்காலத்திலேயே தட்சசீலம் பெயர் பெற்றிருந்த இடமெனின், அதன் பழைமையைக் கூற எவரால் முடியும் ?

மற்றும் புத்தருடைய பழம் பிறவிக் கதைகளைக் கூறும் புத்த ஜாதகம் என்னும் நூல், தட்சசீலம் கல்விக் கேந்திரம் என்றும், புகழ் பெற்ற பேராசிரியர்கள் உள்ள இடம் என்றும் கூறுகிறது. ஜைனர்களுடைய முதல் தீர்த்தங்கர அவதாரமாகிய **ரிஷபதேவர்** என்னும் தீர்த்தங்கரர் அங்குப் பல ஆயிர வருடங்களுக்கு முன்பு போயிருந்ததாக ஜைனர்கள் கூறுவார்கள்.

**ஆராய்ச்சி முடிபுகள் :**

இந்திய அரசாங்கத்தின் கட்டளைப்படி 1913 முதல் 1934 வரை 21 ஆண்டுகள் தட்சசீலம் இருந்த இடத்தில் அகழ்ந்து செய்யப்பட்ட விரிவான ஆராய்ச்சிகளின் முடிபுகள் இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவ்வாராய்ச்சிகளை நடத்தியவர், புகழ்பெற்ற சர் ஜான் மார்ஷல் என்னும் நிபுணர். அவர் நம்முடைய ஆராய்ச்சிகளைப்பற்றி மூன்று பெரிய நூல் தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றார். அவற்றில் அவர் கூறி யிருப்பதன் சுருக்கமே பின்வருவது.

இந்திய சரித்திரத்தில் வடமேற்குப் பகுதியைப்பற்றி இதுவரை அறியாத செய்திகள் பலவற்றை இப்புதிய ஆராய்ச்சியால் நாம் அறிகிறோம். சுமார் 1000 வருட காலத்தின் சரித்திரம் இப்பொழுது இதனால் நமக்குக் கிடைத்திருக்கின்றது. அப்பகுதி, ஒருவர் பின் ஒருவராக வந்த பல அந்நிய நாட்டினருடைய ஆட்சியில்

இருந்தது. கி. மு. 6-ம் நூற்றுண்டில் வந்த பாரசீகர், பிறகு வந்த கிரேக்கர் (கி. மு. 4-ஆம் நூற்றுண்டு), கி. மு. 3-ம் நூற்றுண்டு வரை இருந்த மௌரியர், கி. மு. 2-ஆம் நூற்றுண்டில் வந்த பாக்டிரியர், கி. மு. முதலாம் நூற்றுண்டில் வந்த சித்தியர், கி. பி. முதல் நூற்றுண்டில் வந்த குஷாணர், பிறகு வந்த ஹூணர் முதலிய பலருடைய சின்னங்கள் அவ்விடத்தை அகழ்ந்தபோது கிடைத்திருக்கின்றன.

**புதை பொருள்கள் ;**

வெவ்வேறு வமிச அரசர்கள் அங்கு எழுப்பிய நகரங்கள், நாகரிகத்தின் சின்னங்கள் முதலியவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கோட்டைகள், அரண்மனைகள், வீடு, கோயில்கள், மடங்கள், ஸ்தூபிகள் முதலியன அங்குப் புதைந்து கிடக்கின்றன. அங்குத் தோண்டியபோது படைக்கலங்கள், ஆபரணங்கள், நாணயங்கள், சிற்ப உருவங்கள், கல்வெட்டுக்கள்,முதலியவை கிடைத்தன. இவையெல்லாம் தட்சசீலம் பன்முறை படையெடுப்பாளரால் அழிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் கட்டப்பட்டது என்பதைக் காட்டுகின்றன. கி. பி. 3-ஆம் நூற்றுண்டில் படையெடுத்து வந்த வெள்ளை ஹூணர்கள் அதை இறுதியாக அடியோடு அழித்துவிட்டார்கள். இடையிடையே பூகம்பங்களும் தோன்றி அதை அழித்து விட்டன. பிறகு அந்நகரம் கட்டப்படவே இல்லை. பின்னர் அதன்மீது கனமாக மண்மூடிப்போய், அது பூமிக்குள் புதைந்து விட்டது. இப்படிப் பன்முறை கட்டப்பட்டு அழிந்த அந்நகரங்கள் ஒரே இடத்தில் இல்லை. அவை வெவ்வேறு இடங்களில், சுமார் 12 சதுர மைல் பரப்பில், பரந்து கிடக்கின்றன.

**பாழ்பட்ட நகரங்கள் :**

தட்சசிலம் இருந்த இடத்தில் இப்பொழுது மூன்று பெரிய மேடுகள் இருக்கின்றன. அவை மூன்றும் சுமார் 12 சதுரக் கல் பரப்பில் அடங்கியிருக்கின்றன. மௌரியர்களுக்கு முன் காலத்தையும் மௌரியர் காலத்தையும் சேர்ந்த நான்கு நகரங்கள் ஒரு மேட்டில் இருக்கின்றன. அம்மேட்டின் பெயர் **பீர்மேடு** (Bhir Mound) என்பது. இந்நகரங்கள் இருந்த காலம் சுமார் கி. மு. 1500 முதல் கி. மு. 180 வரை என்னலாம். இந்நகரங்கள் அந்நியப் படையெடுப்பாளரால் அழிக்கப்பட்ட பிறகு வேறு இடத்தில் புது நகரம் அமைக்கப்பட்டது, அது பழைய இடத்திற்குச் சற்று வடக்கே தோன்றியது. அதை மூடியுள்ள மேடு **சிர்காப்** (Sirkap) எனப்படும். அவ்விடத்தில் அதைக் கட்டியவர்கள் சாகர்கள், பார்த்தியர்கள், முதலாம் காட்பைசஸ் என்னும் குஷாண அரசன், முதலானோர். அதன் காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. அதுவும் அழிக்கப்பட்ட பிறகு, இறுதியாகச் **தட்சசீலம்** (Sirsukh) என்னுமிடத்தில் கனிஷ்கர் என்னும் குஷாண அரசர் மற்றொரு புது நகரத்தை உண்டாக்கினார். இது உண்டாக்கப்பட்ட காலம் கி. பி. முதலாம் நூற்றாண்டு. இவையே அன்றிப் பல பௌத்தத் தூபிகளும் ஜைன விகாரங்களும் இங்குமங்குமாகக் காணப்படுகின்றன. இவையெல்லாம் சேர்ந்தே பொதுவாகத் **தட்சசீலம்** எனப்படும்.

**கர்ண பரம்பரைச் செய்திகள் :**

தட்சசீலம் என்பதற்குச் செதுக்கப்பட்ட கற்களால் ஆகிய நகரம் என்பது பொருள். புராணங்களில் பெயர் பெற்ற தட்சகன் என்னும் பாம்பரசனது பாறை என்று

இதற்குப் பொருள் கூறுவாறுமுளர். பரதன் மகன் தட்சன் ஆண்டதால் இது இப்பெயர் பெற்றது என்பதே நன்கு பொருந்தும். புத்தரின் அவதாரமாகிய போதி சத்துவர், தமது தலையை ஒரு பிராமணனுக்குத் தான மாக வெட்டிக்கொடுத்த இடமாகையால் இது இப்பெயர் பெற்றது என்று பாஹியான் என்னும் சீன யாத்திரிகர், இந் நகருக்குப் பெயர் தோன்றிய காரணத்தைக் கூறி இருக்கிறார்.

## இருக்குமிடம் :

தட்சசிலம், முன்பு காந்தார ராஜ்யத்தின் தலைநகராய் இருந்தது. அது இப்போது இருக்கும் இடம், பஞ்சாப்பில் அதே பெயருடைய புகைவண்டிச் சந்திப்பு நிலையத்தி லிருந்து சற்றுத் தொலைவாகும். இராவல்பிண்டி நிலையத்தி லிருந்து வடமேற்கே 20 மைல் சென்றாலும் அவ்விடத்தை அடையலாம். கல்கத்தாவிலிருந்து பி ஷ ா வ ா ரு க் கு ச் செல்லும் பெரிய சாலையும், காஷ்மீரத்திலிருந்து பிஷாவா ருக்குச் செல்லும் பெரிய சாலையும் சந்திக்கும் இடத்தி லிருந்து அது ஏழு கல் தொலைவில் இருக்கிறது. சிந்து நதியும் அதன் துணை நதியாகிய ஜீலம் நதியும் பாயும் பிர தேசத்திற்கு இடையில் அவ்விரண்டும் சங்கமமாகும் இடத்தில், மூரிமலையின் அருகில் அவ்வூர் உள்ளது. பண் டைக் காலத்தில் அங்கு மூன்று முக்கிய வியாபார மார்க் கங்கள், கிழக்கிருந்தும், மேற்கிலிருந்தும், வட மேற் கிலிருந்தும் சந்தித்தன. அதனாலே தான் அங்கு மீண்டும் மீண்டும் அவ்வளவு பெரிய நகரம் தோன்றியது. அக் காலத்தில் பெரிய வியாபார மார்க்கங்கள் கூடும் இடத் திலே தான் பெரிய நகரங்களும் தோன்றும். அந்நகரம்

அப்பெயருடைய ராஜ்யத்திற்குத் தலைநகராய் விளங்கியது.

**கிரேக்கரும் மௌரியரும் :**

இந்தியாவின் மீது கி. மு. 327—ல் படையெடுத்த கிரேக்க அரசனான மகா அலெக்ஸாந்தர் என்னும் வீரன், தட்சசீலத்தை ஆண்டுவந்த அம்பி என்னும் அரசனை வென்று, அதைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அப்பொழுது அது தத்துவக் கலைக்குச் சிறந்த இடமாய் இருந்ததை அவன் அறிந்தான். அலெக்ஸாந்தர் இந்தியாவை விட்டுச் சென்றவுடன், அவனுடைய பிரதிநிதியாகத் தட்சசீலத்தை ஆண்டுவந்த செலூகஸ் நிகேட்டர் என்பவனைச் சந்திரகுப்த மௌரியன் என்னும் பேரரசன் வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். அதன் பிறகு அவன் பெயரனான அசோகரும், அங்குத் தம் தந்தை பிந்துசாரனுடைய ராஜப்பிரதிநிதியாய் ஆண்டு வந்தார். அசோகருக்குப் பிறகு அவருடைய மகன் குணாளனும் அங்கு ஆண்டான். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எல்லாம் தட்சசீலம் ஒரு சிறந்த பல்கலைக் கழகமாய் விளங்கியிருந்தது.

**பல்கலைக் கழகம் :**

இராமாயணம், பாரதம், ஜாதகக் கதைகள் முதலியவற்றில் தட்சசீலம் ஒரு பெரிய பல்கலைக் கழகமென்று கூறப்பட்டிருக்கின்றது. கி. மு. 7-ம் நூற்றாண்டிலேயே அங்கு, ராஜகிருகம், காசி, மிதிலை, உஜ்ஜயினி முதலிய இடங்களிலிருந்து மாணவர்கள் வந்து படித்ததாகக் கூறப்படுகிறது. அங்கு எக்கலையிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இருக்கு, யஜூர், சாமம் ஆகிய மூன்று வேதங்கள்,

கணிதம், மருத்துவம், சோதிடம், ஓவியம், சிற்பம், விக்கிரக அமைப்பு, வில்வித்தை, ஆசிரியப் பயிற்சி முதலிய பாடங்கள் அங்குக் கற்பிக்கப்பட்டன. மொத்தம் 16 கல்வித் துறைகள் அங்கிருந்தன. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பேராசிரியர் தலைமை தாங்கி நடத்தி வந்தார். மருத்துவக் கலைக்கு அது மிகவும் புகழ்பெற்ற இடமாய் இருந்தது. பொதுவாக வைதிகக் கல்வி (நான்கு இந்து வேதங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி)க்கு அஃது இணையற்ற நிலைக்களமாய் இருந்தது.

**சில புகழ்பெற்ற மாணவர்கள் :**

இப் பல்கலைக் கழகத்தில் படித்துத் தேர்ந்து பெரும் புகழுடன் வெளிவந்த மாணவர் பலராவர். போதிசத்துவர்கள் கூட இங்கு வேதங்களையும் வில்வித்தைகளையும் கற்றுத் தேர்ந்ததாகப் புத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. சம்ஸ்கிருத வியாகரணத்தை (இலக்கணத்தை) இயற்றிப் புகழ்பெற்ற பாணினி என்பவரும் இங்குப் பயிற்சி பெற்றவரே. சந்திரகுப்த மௌரியருக்கு அமைச்சராயும் சூழ்ச்சித் துணைவராயும் இருந்தவரும் அர்த்த சாஸ்திரம் என்னும் புகழ்பெற்ற பொருளாதார நூலை எழுதியவரும் ஆகிய சாணக்கியர் அல்லது கௌடில்யர் என்பவர் கூட இங்குப் படித்தவர் என்று கூறப்படுகின்றது. புத்தர் காலத்தில் வாழ்ந்த கோசல நாட்டரசன் மகன் பிரசேனஜித்து என்பவனும் இங்குக் கல்வி கற்றான். மகத நாட்டரசரான பிம்பிசாரன், அஜாதசத்குரு, என்பவர்களின் நோயைத் தீர்த்து அவர்களது அரண்மனை மருத்துவராய் இருந்த ஜீவகர் என்பவர் இங்கு ஆத்திரேயர் என்பவரிடம் அவ்வருங்கலையைக் கற்றார். அவரே

புத்தரது உடல் நோயையும் தீர்த்தவர். அவர் இங்கு ஏழு வருடங்கள் பயின்று, இறுதியில் ஒரு சோதனையி லும் சிறப்புற்றுத் தேறினுர். அச் சோதனை யாதெனின், தட்சசிலத்தைச் சுற்றி 15 மைல் வட்டத்திலுள்ள எல்லாத் தாவரங்களினுடைய தன்மையையும் ஆராய்ந்து கூற வேண்டுமென்பதே. அவர் அப்படியே நான்கு நாட்கள் எல்லாத் தாவரங்களையும் நுணுகி ஆராய்ந்து, அவற்றின் நோய் தீர்க்கும் தன்மையைப் பற்றித் தம் ஆசிரியரிடம் கூறினுர். அங்கிருந்த ஒவ்வொரு தாவரமும் ஏதேனும் ஒரு நோய் தீர்க்க உதவும் என்பதை அவர் கண்டறிந்து கூறினுர், இதனுல் அவரது ஆசிரியர் மிகவும் மகிழ்ந்து அவருக்கு நற்சான்றிதழ் கொடுத்து அனுப்பினுர்.

**கல்விக் குழு அமைப்பு :**

தட்சசிலத்தில் இருந்த ஆசிரியர்கள், இக் காலத்தில் பல்கலைக் கழகங்களில் இருப்பது போல, ஒரு கல்லூரி அல்லது கல்வி நிலையத்தில் வேலை செய்பவர்கள் அல்லர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் ஒரு கல்வி நிலையத்தை நடத்துவர். பண்டிதர்கள் ஒன்று சேர்ந்து பரிஷத்து என்னும் சபையைக் கூட்டுவார்கள். ஒவ் வொரு கலை அல்லது பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அல்லது பண்டிதர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பரிஷத்து அமைப்பார்கள். அது ஒரு கல்லூரி போலவே வேலை செய்யும். உதாரணமாக, வான நூல், சோதிடம், உழவு, கணிதம், வியாபாரம், மருத்துவம், வில்வித்தை முதலிய படைக்கலப் பயிற்சிகள், சிற்பம் முதலியவற்றில் தேர்ந்த பண்டிதர்கள், தனித் தனியே ஒவ்வொரு பரிஷத்தைக் கூட்டி அதன் மூலம் கல்வி கற்பிப்பார்கள்.

**ஆசிரியர்களது பெருமை :**

இவ்வாசிரியர்களைப் பற்றிப் பண்டை நூல்கள் பேசும் போதெல்லாம், அவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள் என்றும் கற்றுத் தேர்ந்தவர்கள் என்றும் கூறும். அவர்கள் தத்தம் கல்வித் துறையில் இணையற்றவர்களாய் இருந்தார்கள். அத்துறையில் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை என்று கூறலாம். இவ்வாசிரியர்களுடைய புகழைக் கேள்வியுற்றுத்தான், இந்தியாவின் நெடுந் தொலையிலுள்ள பகுதிகளிலிருந்தும், மாணவர்கள் அங்குப் படிக்க வந்தார்கள். ஆசிரியர்களுடைய பெருமையை அறிந்து, அத்தகையவர்களிடம் நாம் கற்க வேண்டும் என்ற பேரவாவினாலேயே மாணவர்கள் அங்கு வருவார்கள். ஆசிரியர்களுடைய புகழ், மாணவர்களைக் கவர்ந்தது. தட்சசீலத்தில் இருந்த சில ஆசிரியர்கள், தம்மிடம் ஐந்நூற்றுவருக்கு மேற்பட்ட மாணவர்களை வைத்துக் கற்பித்து வந்ததாகத் தெரிகிறது. இஃது அவர்களுடைய கல்வியின் திறமையையும் புகழின் பெருமையையுமே காட்டுகின்றது. இவ்வாறாகத் தட்சசீலம் இந்தியா முழுவதிலும் தன் அறிவின் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தது.

**மாணவர் வயது :**

அங்குக் கற்பதற்கு வரும் மாணவர்கள் ஏற்கனவே வேறு இடங்களில் நன்கு கற்றவர்களாய் இருப்பார்கள். ஆகவே, உயர்தரக் கல்வி அல்லது சிறப்புக் கல்வி பெறுவதற்காகவே அவர்கள் அங்கு வருவார்கள். ஆதலால், அங்கு வரும்போது அவர்களுக்கு வயது சுமார் 16 இருக்கும். இது, இக்காலத்தில் பல்கலைக் கழகக் கல்வி பெறு

3

தற்குரிய வயதாகவே அமைந்திருப்பது வியக்கத்தக்கது. இவ்வயது வரையில், அவர்கள் ஓரளவு அடிப்படையான பொதுக் கல்வியைப் பெற்ற பின்னரே, பல்கலைக் கழகத்தில் அளிக்கப்படும் சிறப்புக் கல்வி பெறுதற்கு உரியவர்களாவார்கள். முற்காலத்திலும் தட்சசீலத்தில் இதே கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது கருதத்தக்கது. பிறகு அங்கு ஆறு ஆண்டுகள் முதல் எட்டு ஆண்டுகள் வரை, அவர்கள் தத்தம் விருப்பத்திற்கேற்ப இருந்து படிப்பார்கள். குறைந்தது ஆறு ஆண்டுகளாவது அங்குப் படிக்கவேண்டும்.

**மாணவர் வகையும் கல்வியும் :**

தட்சசீலத்தில் வைதிக மதத்தைச் சேர்ந்த எம்மரபினரும் கல்வி கற்றனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள் கூட அப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றுர்கள். அதில் எவ்வருணத்தாரும் எக் கல்வியையும் பெற அனுமதிக்கப்பட்டனர். இன்னுர் இன்ன கல்வியைத்தான் பயில வேண்டுமென்னும் வரையறையோ, கட்டாயமோ அங்கு இல்லை. பரம்பரைத் தொழில்களைத் தான் கற்க வேண்டும்மென்னும் நியதியும் இல்லை. உதாரணமாகப் பிராமணர்கள் அங்கே வில் வித்தை, மாந்திரிக வித்தை முதலியவற்றையும் கற்றதாகக் கூறப்படுகிறது. எல்லா வருணத்தவரும் வேதங்களைப் படிக்கலாம். அதற்கு ஒருவிதத் தடையும் இல்லை. வேதக் கல்வியே அங்கு மிக முக்கியமாகவும் புகழ் பெற்றதாகவும் இருந்ததால், அதை எல்லா மாணவர்களும் பயின்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. கிரேக்கரது ஆட்சிக் காலத்தில் அங்குக் கிரேக்க மொழியும் கிரேக்கச் சிற்பக்

கலையுங்கூடக் கற்பிக்கப்பட்டனவாம். தட்சசீலத்தில் தோண்டி யெடுக்கப்பட்ட புதை பொருள்களில் கிரேக்கச் சிற்பங்கள் அகப்பட்டிருப்பது இதற்கு ஒரு சான்றாகும்.

**மாணவர் வாழ்க்கை :**

மாணவர்கள் அப்பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கூட்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் அங்கிருக்கும் வரையில் தங்கள் உணவு, உடை, ஆசிரியர், ஊதியம் முதலான செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்குச் சக்தியில்லாத மிகவும் ஏழை மாணவர்களும் அங்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால், அவர்கள் பொருளுக்குப் பதிலாகப் பணிகளைச் செய்யவேண்டும். ஆசிரியருக்கும் பல்கலைக் கழகத்திற்கும் தொண்டு செய்து, பொருட் செலவில்லாமல் இலவசமாகப் படிக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். மாணவர்கள் யாவரும் மிக எளிய வாழ்க்கையையே மேற்கொள்ள வேண்டும். எளிய பழக்க வழக்கங்களையே பின்பற்ற வேண்டும். அவர்களுக்கு உணவு உடை முதலியவற்றிற்காக மிகக் குறைந்த செலவே அனுமதிக்கப்பட்டது. அதற்குமேல் அதிகமாக அவர்கள் தங்கள் கையில் பொருள் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது என்னும் சட்டம் இருந்தது. அரச குமாரர்கள் கூட இவ்விதிக்கு உட்பட்டே நடக்கவேண்டும். ஒரு முறை ஓர் அரச குமாரன் ஓர் ஏழை மாணவனது உண்கலத்தை உடைத்து விட்டான் ; அதன் விலையை அவன் அம் மாணவனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று ஆசிரியர் கூறினார் ; ஆனால் அவ்வரச குமாரனோ, தன்னிடம் அப்பொழுது பொருள் இல்லாததால், தான் அரசனான பிறகு தன்னிடம்

அதன் விலையைப் பெற்றுக்கொள்ளுமாறு அம்மாணவ னிடம் கூறிவிட்டான். இதிலிருந்து, அரச குடும்பத்தினர் கூட, அங்கிருக்கும்போது எத்துணைச் சிக்கனமாகவும் ஒழுங்குக்கு உட்பட்டும் வாழப் பயிற்சியளிக்கப்பட்டார் கள் என்பதை நாம் அறிகிறோம். செல்வர் என்பதற்காக அவர்களுக்கு அங்குத் தனிச் சலுகை ஒன்றும் இல்லை. கல்வி மிகவும் முன்னேறியுள்ள இக்காலத்திற்கூட, இத் தகைய கண்டிப்பான ஒழுங்கை நாம் காண்பது அரி தாய் இருக்கிறது.

**செயல்முறைக் கல்வி :**

தட்சசீலப் பல்கலைக் கழகத்தில் நூற்கல்வி மட்டு மன்றிச் செயல்முறைக் கல்வியும் அளிக்கப்பட்டதென்பது முன்னரே கூறப்பட்டது. வேதங்களைக் கற்கும் மாண வர்கள், வேத வேள்விகள் சம்பந்தமான பல இயற்கைப் பொருள்களையும், அவற்றின் தன்மைகளையும், கணித முறையினையும் அறிந்து கொள்ளவேண்டும். வான நூல், சோதிட நூல், ஓவியம், சிற்பம், மருத்துவக்கலை, படைக் கலப் பயிற்சி (போர்ப் பயிற்சி), இசை முதலியவை அனைத்தும் செயல் முறைக் கல்வியே ; வெற்று நூற் கல்வி யல்ல. இவை மாணவர் தாமே தம் சொந்த அனுபவத் தால் கற்கவேண்டுபவை. உதாரணமாக மருத்துவக் கலையில், உயிர்களின் உட்புற உடலமைப்பு. மருந்துக்கு உதவும் தாதுப் பொருள்கள், தாவரங்கள், பிராணிப் பொருள்கள் மருந்துகளைச் செய்யும் முறைகள், நோய் களை அறிந்து தீர்க்கும் முறைகள், இரண சிகிச்சை (புண்களை அறுத்து மருந்திடுதல்) முதலிய பல செயல் முறைச் செய்திகளை மாணவர்கள் தங்கள் சொந்த அனுப வமாகவே அறிந்து கொள்ளவேண்டும். **ஜீவகர்,** இக்

கலையை அங்கு ஏழு ஆண்டுகள் பயின்றார் என்பதிலி ருந்து, இக்கலை எவ்வளவு விரிவாகவும் நுணுக்கமாகவும் கற்பிக்கப்பட்டதென்பதை நாம் அறியலாம். இக்காலத் திற்கூட நம் நாட்டில் வைத்தியக் கல்விப் பயிற்சிக் காலம் நான்கு ஆண்டுகளே என்பதை நோக்கும்போது, இது நமக்கு வியப்பாய் இருக்கிறது. வேறு கலைகளும் அங்கு இவ்வாறே பெரும்பாலும் மிக விரிவாக, செயல்முறைக் கல்வியாகவே கற்பிக்கப்பட்டிருந்தன.


### பிற மதக் காலம் :

தட்சசீலப் பல்கலைக் கழகம் தோன்றியது முதல் சில நூற்றாண்டுகள், அது முற்றிலும் இந்து மதச் சார்பான கல்வி நிலையமாகவே இருந்தது. அங்கு இந்து வேதங் களே சிறப்பாகக் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆனால், புத்த மதமும் ஜைன மதமும் தோன்றிப் பரவிய பின்னர், அம் மதங்களைத் தழுவிய மன்னர்கள், அவற்றைச் சார்ந்த கல் வியை அங்குப் புகுத்தினார்கள். அம் மதங்கள் அங்குப் புகுந்ததன் அடையாளமாக விகாரங்களும் ஸ்தூபிகளும் தோன்றின. புத்தர், போதிசத்துவர் ஆகியோர் அங்கு வேதங்களைக் கற்றார்கள் என்று கூறப்படுவது, அப்பல் கலைக் கழகத்தின் பழமையைக் காட்டுவதோடு, அப் போதே அது புத்த மதச் சார்பான இடமாக மாறத் தொடங்கிவிட்டது என்பதையும் காட்டுகின்றது.

### மறைவு :

இத்தகைய பெரும்புகழுடன் சுமார் 1000 ஆண்டு களுக்கு மேல் நிலவியிருந்த அப் பல்கலைக் கழகம், கி. பி. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் அந்நியப் படையெடுப்பாள

ரால் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அப்போது முத லில் வந்த யூஹிசி என்பவர்கள் தட்சசிலத்தை அநேகமாக அழித்துவிட்டார்கள். பிறகு வந்த ஹூணர்கள் மேலும் அதைத் தரைமட்டமாக்கி, இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டார்கள். குஷாணர் ஆட்சிக்கால இறுதியா கிய கி. பி. 250-ஆம் ஆண்டு வரை தழைத்திருந்த தட்ச சீலம், ஹூணர் படையெடுப்பால் மண்ணோடு மண்ணாகி மறைந்துவிட்டது பெரிதும் வருந்தத்தக்கது. கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் பாஹியான் வந்தபோது அப்பாழ் டைந்த இடத்தைத்தான் அவர் கண்டார் என்று கூறப் படுகின்றது. அப்பொழுது அதன் பெருமை அடியோடு மறைந்துவிட்டது.



புதைந்திருந்த நாளந்தா பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதி.

# 3. நாளந்தா பல்கலைக் கழகம்

**தட்சசீலத்திற்குக் காலத்தாற் பிந்தியது :**

தட்சசீலத்திற்குக் காலத்தால் சில நூற்றாண்டுகள் பிந்தியது நாளந்தா பல்கலைக் கழகம். தட்சசீலம் ஆதியில் புத்த ஜைன மத சம்பந்தமான கல்வியை அளிக்க வில்லை. அது தோன்றிப் பல நூற்றாண்டுகள் வரை, வைதிக சமயக் கல்வியையே அளித்து வந்தது. ஆனால், நாளந்தாவோ, அது தோன்றிய காலம் தொட்டே, வைதிக மதத்திற்குக் காலத்தால் பிற்பட்ட புத்த சமயக் கல்வி யையே சிறப்பாகப் போதித்து வந்தது. அதே சமயத்தில் அங்கு ஓரளவு வைதிகக் கல்வியும் கற்பிக்கப்பட்டு வந்தது. ஆகவே, நாளந்தா, தட்சசீலத்தை விடக் காலத்தால் பிற் பட்டது என்பது தெளிவு.

**அதன் தொன்மை :**

எனினும், நாளந்தா தோன்றிய காலம் எது என்பது இன்னும் நமக்குத் திட்டமாகத் தெரியவில்லை. பல சரித் திர ஆராய்ச்சியாளர்கள், பலவிதமாக அதன் தோற்றக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். அவர்களுக் கிடையே ஒருமித்த முடிவைக் காண்பது அரிதாயிருக் கின்றது. எவ்வாறாயினும், அது புத்தர் காலத்திலேயே (கி. மு. 6-ஆம் நூற்றாண்டு) இருந்திருக்கவேண்டுமென் பதற்குச் சான்றுகள் உள்ளன. புத்தரது வரலாற்றில், அவர் தம் சீடரான ஆனந்தர் என்பவருடன் சென்ற பல இடங்களுள் நாளந்தாவும் ஒன்று என்பது கூறப்பட்டுள்

ளது. அங்கு அவர் தங்கி, அங்கிருந்த பல பேராசிரியர்களோடு பல பொருள்களைப்பற்றி விவாதித்தார் என்பதும், தம் கொள்கைகளையும் பரப்பினார் என்பதும் தெரிகின்றன. அன்றியும், புத்தரின் முக்கிய சீடர்களுள் ஒருவராகிய **சாரிபுத்தா** காலத்தில் அது பெயர் பெற்றிருந்தது என்பதையும் நாம் அறிகிறோம். சாரிபுத்தர் நாளந்தாவில் பிறந்தவர். அதனருகில் உள்ள ராஜகிருகம் என்னுமிடத்திலேதான் புத்தர், சாரிபுத்தரைத் தம் சீடராகப் பெற்றார். சாரிபுத்தர் வைதிக மதத்தைச் சார்ந்த பிராமணர். அவரைப் புத்தர் தம் ஞானத்தினால் ஆட்கொண்டார். பிறகு சாரிபுத்தர் நாளந்தாவில் தம் 80000 சீடர்களுடன் நிருவாணம் (மோட்சம்) அடைந்தார் என்று கூறப்படுகிறது. கி. பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை அது இருந்த நிலைமையைச் சீனா, திபேத்து முதலிய நாட்டு ஆசிரியர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புக்களிலிருந்து நாம் அதிகமாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது. அவ்வாசிரியர்கள் நாளந்தாவிற்கு வந்து, அதை நேரில் கண்டு, பல விரிவான செய்திகளை எழுதி வைத்திருக்கின்றார்கள். அச் செய்திகளே அன்றி, நாளந்தாவைப்பற்றி நமக்கு மிகப் பழமையான வரலாற்றுச் சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை; ஆகவே, அதன் பழமையைப்பற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொள்ள இயலாமலிருக்கிறது.

**இருந்த இடம் :**

நாளந்தா பல்கலைக் கழகம் பீகார் மாகாணத்தில் கங்கை நதி அருகில் உள்ள **பார்கான்** (Bargon) என்னும் கிராமத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அஃது அக்

கால மகத நாட்டின் தலைநகராகிய ராஜகிருகத்திற்கு எட்டு மைல் தொலையில் இருந்தது. அது பாடலிபுரத்தி லிருந்து (பாட்னு) தென் மேற்கே நாற்பது கல் தூர மாகும். இப்பொழுது அவ்விடம் பாழடைந்து கிடக் கிறது. அவ்விடத்தை இன்னும் முற்றிலும் விரிவாகத் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்தப் பெறவில்லை. இப் பொழுது தோண்டியுள்ள அளவில், ஒருவர் தங்கியிருக்கக் கூடிய சிறிய அறைகளும், இருவர் தங்கியிருக்கக்கூடிய சற்றுப் பெரிய அறைகளும் அங்குக் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அவ்வறைகளில் படுத்துறங்குவதற்குக் கற் பலகைகளும், விளக்கு வைப்பதற்குப் பிறைகளும் இருந் தன. இச் செய்திகளையன்றி இப்பொழுது நமக்குப் புதை பொருட் சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை.

நாளந்தா இருந்த இடம் இப்பொழுது மேடுகளும் மரங்களும் நிறைந்து காணப்படுகின்றது. தொலைவி லிருந்து பார்த்தால் அவை தொடர்ச்சியான குன்றுகள் போலத் தெரிகின்றன. 1861-ஆம் ஆண்டில் **ஜெனரல் கன்னிங்ஹாம்** என்னும் ஆங்கிலேயர் அவற்றின் கீழ் ஒரு புதைபட்ட பல்கலைக் கழகம் இருப்பதாக அறிந்து கூறி ஞர். பிறகு 1915-ஆம் ஆண்டில் அம்மேடுகள் தோண்டி யெடுக்கப்பட்டன. அவற்றின் பரப்பு, சுமார் 1600 அடி நீளம், 800 அடி அகலத்திற்கு உட்பட்ட இடமாகும். ஒன்றின் கீழ் ஒன்ருக ஐந்து அடுக்குக் கட்டிடங்கள் அங்கே காணப்படுகின்றன. அவை முழுதுமே எட்டு நூற்ருண்டுகளில் கட்டப்பட்டவை. ஒரு அடுக்குக் கட்டிடம் அழிந்த பிறகு அதன் மேல் மற்ருெரு அடுக்கு கட்டப்பட்டது. இவ்வாறே ஐந்து அடுக்குக் கட்டிடங் களை நாம் அங்கே பார்க்கலாம்.

### பெயர்க் காரணம் :

நாளந்தா என்ற பெயர் தோன்றியதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. நாகர்களுடைய அரசன் **நந்தன்** என்பவன் அங்கு ஆண்டு வந்ததால் அது நாளந்தா (நாக + நந்தா) எனப்பட்டது என்பர் ஒரு சாரார். சக்ராதித்தியன் என்னும் முதலாம் குமாரகுப்தன் அங்கு ஒரு பல்கலைக் கழகத்தைக் கட்ட நிலத்தை அகழ்ந்தபோது தற்செயலாக ஒரு நாகப்பாம்பு வெட்டுண்டு இறந்துவிட்டதால் அதற்கு இப்பெயர் வந்தது என்றும் கூறுவர் சிலர். மற்றொரு சாரார் அங்கு ஆண்டு வந்ததாகக் கூறப்படும் **தாதகட்டர்** என்னும் போதிசத்துவர் இடைவிடாது தருமம் (கொடை) செய்து வந்தமையால் (நா + அளம் + தா), பிராகிருத மொழியில் அப்பொருள் தரும் சொல்லை அதற்குப் பெயராக வைத்தனர் என்பர். அது இடைவிடாது அறிவைக் கொடுத்து வந்ததால் உருவகமாக, அப்பெயர் பெற்றது எனினும் பொருந்தும். அறிவுப் பசியை இடை விடாமல் உண்டாக்கி, அதற்கு ஏற்ற உணவையும் அது கொடுத்து வந்தது என்று கூறும் பொருளில் அமைந்தது இப்பெயர் என்பதே அதற்கு மிகவும் பொருத்தமாகும்.

### தோற்றுவித்தவர்கள் :

வரலாற்றுச் செய்திகளை ஆராயும்போது, முதல் முதலாக **அசோகர்**, கி. மு. மூன்றும் நூற்றாண்டில் அங்கு ஒரு புத்த விகாரத்தைக் கட்டினார் என்பதை அறிகிறோம். அதற்கு **நாளந்தா விகாரம்** என்ற சிறப்புப் பெயர் பிறகு உண்டாயிற்று. பிற்காலத்தில் நாளந்தாவைத் தொடர்ச்சியாக ஆறு அரசர்கள் உருவாக்கினதாகக் கூறப்படுகிறது.

அவர்களுள் முதல்வன் **சக்கராதித்தன்** என்பவன். அவனே **முதலாம் குமார குப்தன்** என்றும் கருதப்படுகிறான். அவன் அங்கு முதல்முதலில் பௌத்தத் துறவிகள் தங்குவதற்காக ஒரு பௌத்த மடத்தைக் கட்டினான். அதுவே பிறகு பல்கலைக் கழகமாக மாறியது. அம் மடத்தை அவன் கட்டும்போது, அது பிற்காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் என்று ஒரு நிமித்திகன் கூறி அவனை ஊக்கப்படுத்தினான் என்று ஒரு செய்தி உளது. அவனுக்குப் பிறகு அவன் மகன் **புத்த குப்தன்** என்பவன் மற்றும் ஒரு மடத்தைக் கட்டினான். பின்னர் அவன் மகன் **தாதகட்டன்** மேலும் ஒரு மடத்தைச் சமைத்தான். **பாலாதித்தியன்** என்னும் அவன் மகன், அங்கு 300 அடி உயரமுள்ள கோபுரம் கொண்ட கோயில் ஒன்றைக் கட்டினான். அவனது காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. மற்றும் **வச்சிரன்** என்னும் அவன் மகன், அதனருகிலேயே வேறொரு மடத்தைத் தோற்றுவித்தான். மத்திய இந்தியாவைச் சேர்ந்த மற்றோர் அரசன் ஆறாவது மடத்தை அமைத்தான். இங்ஙனம் தொடர்ச்சியாக ஆறு அரசர்கள் நாளந்தாவை உருவாக்குவதில் பங்கு கொண்டார்கள். அவர்களுள் முதல் ஐந்து பேரும் குப்த வமிசத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, குப்தர்கள் காலத்தில் நாளந்தாவிற்கு மிக்க ஆதரவும் சிறப்பும் இருந்து வந்தன என்பதை நாம் அறிகிறோம். குப்தர்கள் காலத்தில் மகத நாட்டில் அது ஒரு காலத்தில் **தர்மகஞ்சம்** என்னும் பெயரால் பிரபலமாய் விளங்கியது. பிறகு பீகாரில் ஆண்டுவந்த **பால** வமிச அரசர்களது ஆதரவும் அதற்கு மிகுதியாய் இருந்தது.

**அமைப்பும் பெருமையும் :**

நாளந்தாவின் அமைப்பு, **புத்தகயா** (புத்தர் ஞானம் பெற்ற இடத்தில் உள்ள கோயில்), **சாரநாத்** என்னும் இடங்களின் அமைப்பை ஒத்திருக்கிறதென்று கூறுவர். நாளந்தாவில் இருந்த விகாரங்கள், மடங்கள் அனைத்தும் ஒரு பெரிய செங்கல் மதிலால் சூழப்பட்டிருந்தன. அங்கு ஒரு பெரிய தலைவாயில் இருந்தது. விகாரங்களின் கோபுரங்கள் யாவும் மேகங்களைக் கடந்து மேலே உயர்ந்திருந்தன. கட்டிடங்கள் மிக அழகிய வேலைப்பாடுகளுடன் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பெற்றிருந்தன. அவற்றுள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை மூன்று பெரிய கட்டிடங்கள். அவை **இரத்தினசாகரம், இரத்தினததி, இரத்தினரஞ்சகம்** என்று பெயரிடப் பெற்றிருந்தன. அவை மூன்றும் முறையே புத்தமதத்தின் உயிர் நாடிகளாகிய **புத்தர், தருமம். சங்கம்** என்னும் மூன்றையும் குறிக்கும். அவற்றுள் இடையில் இருந்த இரத்தினததி ஒன்பது அடுக்குகளை (நிலைகளை) உடைய மிக உயரமான கட்டிடம். அதில் புத்தர் அருளிய தருமம் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் வைக்கப்பெற்றிருந்தன. அதைப் பெரும்பாலும் பூட்டியே வைத்திருப்பார்கள். எப்போதாவது ஒரு பெரிய மனிதர் வந்தால், அல்லது ஏதாவது ஒரு முக்கியமான காலத்தில், அதைத் திறப்பார்கள். மீண்டும் உடனே பூட்டி விடுவார்கள். அம்மூன்று கட்டிடங்களும் சேர்ந்து நாளந்தாவின் நூல் நிலையங்களாய் விளங்கின. இந்தியா முழுவதிலும் அக்காலத்தில் அதை விடப் பெரிய நூல் நிலையம் எங்கும் இருந்ததில்லை. மேலும், அங்குப் பெரிய கூடங்கள் எட்டும், அறைகள் முந்நூறும்

இருந்தன. நடுவில் ஒரு பெரிய கல்லூரி இருந்தது. அக் கல்லூரியிலும் கூடங்களிலும், விவாதக் கூட்டங்கள், வகுப்புக்கள் முதலியன நடைபெறும்.

**புகழ்பெற்ற ஆசிரியர்கள் :**

நாளந்தாவின் ஆசிரியர்களுள், ஆசியா முழுவதும் புகழ்பெற்ற பலர் இருந்தனர். **நாகார்ஜுன சித்தர்** என்னும் பெரிய பண்டிதரும், **மகாசாரியர்** என்று சிறப்பிக்கப்பட்ட **ஆரியதேவர்** என்னும் மற்றொரு புகழ் பெற்ற ஆசிரியரும் நாளந்தா பல்கலைக் கழகத்தை உரு வாக்கி, அதற்குப் புகழை உண்டாக்கியவராவர். பிற் கூறப்பட்ட ஆரியதேவர் நாளந்தாவிற்கு வந்து, நாகார் ஜுனருடன் வாதிட்டுத் தோற்று, பிறகு அங்கேயே அவரி டம் சீடராய் இருந்து கல்வியை முற்றும் கற்றார்.

**தருமபாலர்** (கி. பி. 528—560) என்பவர் காஞ்சி புரத்திலிருந்து வந்த ஒரு மந்திரியின் புதல்வர். அவருடைய தந்தை அவருக்குத் திருமணம் முடிக்கவிருந்த சமயத்தில் அவர் துறவு பூண்டு, அவ்விடத்தை விட்டு வெளியேறி நாளந்தா பல்கலைக் கழகத்திற்கு வந்துவிட்டார். அவர் முதலில், புகழ்பெற்ற பௌத்த சமயத் தருக்க நூலாசிரிய ராகிய திக்நாகர் (தின்னுகர்) என்பவரிடத்தில் இலக்க ணம், தருக்கம் முதலியவற்றைப் பயின்று நாளந்தாவிலும் சிறிது காலம் கல்வி பயின்றார். கௌசாம்பி என்னும் இடத்தில் பௌத்த மதத்தாருக்கும் பிற மதத்தாருக்கும் நடந்த ஒரு பெரிய சொற்போரில், 'பௌத்த மதத்தார் தோற்றுப்போன பிறகு இவர் தனியாக நின்று பிற மதத் தாரை வாதில் வென்று புகழ் பெற்றார். பின்னர்த் தோற்ற

எதிரிகளையும் கௌசாம்பி மன்னனையும் இவர் பௌத்த மதத்திற்கு மாற்றினார். இதனால் இவர் புகழ் எங்கும் பரவியது. மற்றொரு முறை இவர் நூறு ஹீனயான பௌத்தர்களை ஏழுநாள் சொற்போரில் வென்று மகாயான பௌத்த கொள்கைகளை நிலை நாட்டினார். இவற்றால் இவர் நாளந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், பிறகு **குலபதி** (தலைமை ஆசிரியர்) ஆகவும் நியமிக்கப்பட்டார்,இவர் தமது 32-ஆம் வயதிலேயே காலமானார்.

சீலபத்திரர் (585—640) என்னும் குலபதி, கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒரு பிராமணர். இவர் தருமபாலனுடைய தலை மாணவர். இவர் தம் ஆசிரியர் கட்டளைப்படி தென்னிந்தியாவிலிருந்து வந்த ஒரு பெரிய பண்டிதரை வாதில் வென்று, அதற்குப் பரிசாக அரசனிடமிருந்து ஒரு சிற்றூர் முழுவதையும் பெற்றார் என்று கூறப்படுகிறது. அதனால் இவர் முதலில் நாளந்தாப் பேராசிரியராகவும், பிறகு தலைமையாசிரியராகவும் (குலபதி) நியமிக்கப்பெற்றார். கி. பி. 7-ம் நூற்றாண்டில் சீன தேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த யாத்ரிகர் **யுவான் சுவாங்** என்பவர் இவரிடமே ஐந்தாண்டுகள் வரை பாடங் கேட்டார். இவரிடம் பயின்ற மற்றப் பேர்பெற்ற மாணவர்கள், விசேஷமித்திரர், ஜினபுத்திரர், ஞானசுந்தரர் முதலியோராவர்.

மேலும் சாந்தரக்ஷிதர், சந்திரகோமின், பத்மசம்பவர், பிராபாமித்திரர், புத்தகீர்த்தி, ஜனமித்திரர், கமலசீலர், ஸ்திரமதி, குணமதி, முதலிய பல பேராசிரியர்களும் நாளந்தா பல்கலைக் கழகத்திற்குப் பெருமை தேடித் தந்தவ

ராவர். ஆசிரியர்களது பெருமையாலேயே நாளந்தாவிற்குப் புகழ் உண்டாகி எங்கும் பரவியது. அவ்வாசிரியர்களிடம் பயிலவேண்டுமென்பதற்காகவே நெடுந் தூரத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்தனர். அங்கிருந்த ஆசிரியர்களுக்குச் சிறந்த கல்விமட்டுமன்றி ஒழுக்கம், முதுமை ஆகியவையும் முக்கியத் தகுதிகளாகக் கருதப்பட்டன. அத்தகைய தகுதியுடையவர்களே அங்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவ்வாசிரியர்களது புகழைக் கேள்வியுற்று, ஆசியா முழுவதிலிருந்தும் மாணவர்கள் வந்து, அங்குத் தங்கிப் படித்தார்கள். இக்காலத்தில் பல்கலைக்கழகங்களில் இருப்பது போலவே, அக்காலத்தில் நாளந்தாவிலும் ஒவ்வொரு கல்வித் துறைக்கும் ஒவ்வொரு பேராசிரியர் தலைவரும் பொறுப்பாளருமாய் இருந்தார்.

**புகழ்பெற்ற மாணவர்கள் :**

அப் பல்கலைக் கழகத்தில், சீன, மங்கோலியா, கொரியா, போகரா, மத்திய ஆசியா, முதலிய பல அயல் நாடுகளிலிருந்தும், இந்தியா முழுவதிலுமிருந்தும், மாணவர்கள் வந்து கல்வி பயின்றார்கள். கி. பி. நான்காம் நூற்றாண்டில் **பாஹியான்** என்னும் சீன யாத்ரிகர் அங்கு வந்தார். அவர் வந்தபோது அப் பல்கலைக் கழகக் கட்டிட வேலைகள் முற்றுப்பெறாமல் இருந்தன என்று அவர் எழுதி வைத்திருக்கிறார். கி. பி. ஆறாம் நூற்றாண்டில், புகழ்பெற்ற பௌத்த தர்க்க நூல் வல்லுநராகிய ஆசாரிய **திக்நாகர்** (தின்னகர்) என்பவர் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்து கல்வி பயின்றார். அவரது மாணவராகிய **தருமபாலரும்** இங்குக் கல்வி

பயின்றவரே. தரும பாலருடைய சீடரே சீலபத்திரர் என்பவர் என்று முன்பே அறிந்தோம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் **யுவான்சுவாங், இத்சிங்**, என்னும் இரண்டு சீன யாத்திரிகர்கள் அங்கு வந்து தங்கியிருந்து படித்தார்கள். யுவான்சுவாங் ஐந்து ஆண்டுகளும் இத்சிங் பத்து ஆண்டுகளும் அங்கு மாணவர்களாய் இருந்தார்கள். அப்போது அங்கு அவர்கள் சம்ஸ்கிருதம், பௌத்த நூல்கள் முதலியவற்றைக் கற்றார்கள். யுவான் சுவாங் தம் கல்வியை முடித்துக்கொண்ட பின்னர், புத்த தருமத்தில் வல்லவர் (Master of Law) என்னும் பட்டம் பெற்றார். கொரியாவிலிருந்து வந்த **ஹ்றவிலுன்** என்னும் மற்றொரு மாணவரும் அங்குக் கல்வி கற்றார். நாளந்தாவில் படித்த மாணவர்களுக்கு அக்காலத்தில் எங்கும் அதிக மதிப்பு இருந்தது. அதனால், அங்குப் படிக்காதவர்கள்கூட, நாளந்தா மாணவர் என்று தம்மைக் கூறிக் கொண்டு எளிதில் பெருமையடைய முயன்றார்கள்.

**யுவான்சுவாங் குறிப்பு :**

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் யுவான்சுவாங் வந்த போது, நாளந்தா உலக முழுவதும் புகழ்பெற்ற ஒரு கல்வி நிலையமாய் இருந்தது. அவர் அங்குத் தாம் கண்டவற்றையும், தாம் அன்பாக நடத்தப்பெற்ற விதத்தையும் குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். அங்கு மாணவர்களுக்கு இலவசக் கல்வியுடன், உணவு, உடை, உறையுள், மருந்து முதலியவையும் கொடுக்கப் பெற்றன. நூற்றுக்கணக்கானவர்கள் ஒரே காலத்தில் குளிப்பதற்கு ஏற்ற மூன்று பெரிய குளங்கள் அங்கு

இருந்தன. குளிப்பதற்காக மணி அடித்தவுடன் மடங்களிலிருந்தும் அறைகளிலிருந்தும் ஆசிரியர்களும் மாணவர்களும் கூட்டம் கூட்டமாகவெளியே வந்து, வெவ்வேறு திசையில் சென்று குளங்களில் ஒரே சமயத்தில் குளிப்பார்கள். இடையிடையே இருந்த பல சிறு குளங்களின் நீல நிறமான நீரும், அவற்றைச் சுற்றியிருந்த அழகிய செடி கொடிகளும், நிழல்தரும் மரங்களும், நாளந்தாவின் அழகை மிகுதிப்படுத்தின. சரியான நேரத்தைக் காட்டுவதற்காக அங்கே ஒரு நீர்க்கடிகை (கடிகாரம்) இருந்தது. அப்போது உலகத்திலேயே அதைப் போன்ற கடிகாரம் வேறெங்கும் இல்லை. கட்டிடங்கள், இக்காலச் செங்கற்களை விட மிக உயர்தரமான செங்கற்களால் உறுதியாகக் கட்டப்பெற்றிருந்தன. யுவான்சுவாங்குக்கு நாளந்தாவில் அதிக வசதிகளும் மரியாதைகளும் கிடைத்தன என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அங்கு மிகவும் அன்பாகக் கவனிக்கப்பட்டார். சுமார் 10000 மாணவர்களும், 1150 ஆசிரியர்களும் அப்போது அங்கு இருந்ததாக அவர் கூறுகிறார். ஒவ்வொரு நாளும் ஆசிரியர்களால் நூறு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும். மாணவர்கள் அவற்றைக் கேட்டு மிகுந்த பயனடைந்தார்கள். நாளந்தாவின் வாயில் தோறும் பெரும் பண்டிதர்கள் நிலையாகத் தங்கியிருந்து அங்குக் கற்க வரும் மாணவர்களைப் பரீட்சித்துப் பார்ப்பார்கள். அப் பரீட்சையில் தேறியவர்களே, கல்வி கற்பதற்காக உள்ளே அநுமதிக்கப்படுவார்கள். அப்பரீட்சைகள் மிகவும் கடினமாய் இருந்தனவாம். அவற்றில் பத்துப் பேருள் இரண்டு மூன்று பேர்களே தேறமுடியும்.

**கல்வி முறை :**

அங்கு இடம் பெறுவதற்கு எல்லாத் தேசங்களி லிருந்தும் மாணவர்கள் திரண்டு வருவார்கள். ஆகவே, அங்கு எப்பொழுதும் பெரும்பாலும் இட நெருக் கடி இருக்கும். அங்குப் படிக்க வரும் மாணவர்களுக்குச் சிறந்த அறிவு நுட்பம் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க் கப்பட்டது. அதற்கு முன்பு அவர்கள் நல்ல அடிப் படைக் கல்வியைப் பெற்றிருக்கவேண்டும். பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களே அதில் சேர்க்கப்படுவார் கள். மாணவர்களாக அனுமதிக்கப்பட்டவர்கள் தங்கள் விருப்பம்போல் நான்கு ஆண்டுகள் முதல் பத்து ஆண்டு கள் வரை அங்குப் படிக்கலாம். அவர்களை ஆசிரியர்கள் தனித்தனியாகக் கவனித்துக் கொள்வார்கள். கூட்டம் கூட்டமாக மாணவர்களை வைத்துக் கல்வி கற்பிக்கும் இக் கால முறை அப்போது கிடையாது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அதனால் கல்விப் பயிற்சியும்மிகத் திறமையாகவும் உயர்தர மாகவும் இருந்தது. நாளந்தாவில் படிக்கும் மாணவர் களும் பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களும் சுவடிகளில், நூல்களுக்குப் பிரதி எடுக்கும் வேலையும் செய்து வந்தனர். அப்படி அங்குப் பிரதி செய்யப்பட்ட நூல்கள் இன்றும் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் வைக்கப் பட்டுள்ளன. இத்சிங் நாளந்தாவில் இருக்கும்போது 400 சம்ஸ்கிருத நூல்களுக்குப் பிரதி எடுத்ததாக அவரே கூறுகிறார்.

**ஆட்சி முறை :**

இப் பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவும் பொருளுதவியும் மிகுதியாகக் கிடைத்து வந்தன. இதற்கு ஏராளமான மானியங்கள் இருந்தன. அது புத்த சமயக் கல்வி நிலையமாயிருப்பினும் பல இந்து அரசர்களும் அதற்கு அதிக மானியங்களைக் கொடுத்து வந்தார்கள். ஒரு சமயம் ஓர் அரசன் நூறு கிராமங்களை அதற்காகக் கொடுத்தான். ஆகையாலேதான் ஆயிரக் கணக்கான மாணவர்களைப் பல வருடங்கள் வரை அங்கு வைத்து இலவசமாக உணவு, உடை முதலியவற்றைக் கொடுத்துக் கல்வியளிப்பதற்கு முடிந்தது. பல்கலைக் கழக நிருவாகத்தைக் கவனிக்க மூன்று பெரிய பௌத்தத் துறவிகள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் **அத்தி யட்சர்** எனப்படுவார். அவரே அப்பல்கலைக் கழகத்தின் தலைமைச் செயலாளர். அவருக்குக் கீழ், துணைச் செய லாளர் ஒருவர் இருப்பார். மூன்றுவதாக ஒரு தலைமைப் புரோகிதர் அல்லது மடாதிபதி உண்டு. இம்மூவரும் இணைப்பாகப் பல்கலைக் கழகத்தின் காரியங்களையெல்லாம் மேற்பார்வை செய்து வந்தனர். தனித்தனிக் கல்வித் துறைகளைக் கவனித்துக் கொள்வதற்குத் தலைமைப் பேரா சிரியர்கள் இருந்தார்கள்.

**கல்வியின் தன்மை :**

நாளந்தாவில் புத்த சமயக் கல்வியே சிறப்பாக அளிக் கப்பட்டு வந்தது என்பதை முன்பே கண்டோம். புத்த சம யத்திலும் மகாயானம் என்னும் பிரிவுதான் அங்கு ஆதரிக் கப்பட்டும் பின்பற்றப்பட்டும் வந்தது. புத்தரது சொந்த

உபதேசங்களின்படி உண்டாக்கிப் பின்பற்றப்பட்டு வந்த ஹீனயானக் கொள்கை, அவருக்குப்பின் சில நூற்றாண்டு களில் வலுக்குறையத் தொடங்கியது. ஆகவே, பிறகு தோன்றிய மகாயானக் கொள்கையே நாளந்தாவில் போற் றப்பட்டது. புத்த மதத்தின் பதினெட்டு உட் பிரிவுகளா கிய கொள்கைகள் அடங்கிய மதங்களும் அங்குக் கற்பிக் கப்பட்டன. அன்றியும், இந்து வேதங்களும் கலைகளுங்கூட அங்கு இடம் பெற்றன. இந்தியாவில் அக்காலத்தில் இருந்த வெவ்வேறு மதக் கோட்பாடுகளையும் தத்துவங் களையும் பற்றிய விவாதங்கள் அங்குச் சிறப்பாக நடை பெற்றன. அவற்றிற்காகத் தனித்தனி விவாதக் குழுக் கள் அமைக்கப்பெற்றன. இத்தகைய விவாதங்களினு லும், எப்பொழுதும் அறிவை வளர்ப்பதிலேயே நோக்கம் கொண்டிருந்ததாலும், அங்கிருந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொழுது போவதே தெரியாதாம்.

நாளந்தாவில் கற்பிக்கப்பட்ட கலைகளுள் முக்கிய மானவை பாணினி வியாகரணம் (இலக்கணம்), மருத்து வம், சட்டம், தத்துவம், மொழிநூல், வானநூல் முதலிய வையும் சாங்கியம், நியாயம், யோகம், முதலிய இந்து சாஸ்திரங்களும் ஆகும். மேலும், சம்ஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளும் அங்குக் கற்பிக்கப்பட்டன. யுவான் சுவாங் அங்குப் புத்த சமய சம்பந்தமான எல்லா நூல் களையும் இந்து சாஸ்திரங்களையும் கற்றார் என்று கூறப்படு கின்றது. இவற்றால் நாளந்தா, உண்மையிலே பலவிதக் கலைகளும் பயிலுதற்குரிய ஒரு பெரிய பல்கலைக் கழக மாய்த் திகழ்ந்தது என்பதை நாம் அறிகிறோம்.

**உண்மையான பல்கலைக் கழகம் :**

நாளந்தா, பல்கலைக் கழகம் என்னும் பெயருக்கு மிகவும் பொருத்தமாக, உண்மையாகவே பல் கலைகளையும் மிக விரிந்த மனப்பான்மையுடன் எல்லாருக்கும் கற்பித்து வந்தது. கல்வியில் யாவருக்கும் சுதந்திரம் (கட்டுப்பாடு அல்லது கட்டாயம் இன்மை) வழங்கப்பட்டது. அறிவு எங்கிருந்து, யாரிடமிருந்து கிடைத்தாலும், அதைப் பெறு வதற்கு அங்கு ஒருவிதமான தடையும் இல்லை. எல்லாப் பிரிவினரும் எல்லா வகுப்பினரும் தத்தம் கருத்துக்களைத் தாராளமாகத் தெரிவிக்கலாம். அங்கு நிலவி வந்த கல்விப் போதனை முறையும், மேற்படிப்புக்காக கையாளப்பட்ட விவாத முறையும், இன்றும் யாவருக்கும் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கத்தக்கவை.

**யுவான்சுவாங்கின் வெற்றிகள் :**

நாளந்தா பல்கலைக் கழகத்தில் எல்லாக் கலைகளையும் பழுதறப் பயின்ற யுவான் சுவாங்கின் உயர்தரமான புலமை, அங்குக் கற்பிக்கப்பட்ட கல்வியின் தரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. அதை வலியுறுத்த இங்கே ஒரு செய்தியைக் காண்போம் :

ஒருமுறை யுவான்சுவாங்கை ஒரு பிராமண வேதாந்தி தன்னோடு வாதிடும்படி அறைகூவினான். அந்தப் பிராம ணன் வேதக்கல்வி, இலக்கணம், சாஸ்திரங்கள் முதலிய வற்றை முற்றுறக் கற்றவன். அவன் நாளாந்தாவின் வாயிலில், தன் கொள்கைகளை மறுத்துக் கூறித் தன்னை வெல்பவருக்குத் தன் தலையைக் கொடுத்துவிடுவதாக ஒரு பலகையில் எழுதித் தொங்க விட்டிருந்தான்.

யுவான்சுவாங் அதைக் கண்டு, அவ் அறைகூவலை ஏற்று, அவனோடு வாதம் புரிந்தார். தம் ஆசிரியர் சீலபத்திரர் முன்னிலையிலும் மற்ற எல்லா ஆசிரியர்கள் மாணவர்கள் முன்னிலையிலும், யுவான்சுவாங் அந்தப் பிராமணனை வாதத்தில் தோற்கடித்தார்; பிறகு அவனது தலையைப் பரிசாகப் பெறாமல், அவனை மன்னித்துத் தம் சீடராக்கிக் கொண்டார். சில நாட்கள் கழித்து அந்தப் பிராமணன் காமரூபம் (அஸ்ஸாம்) என்னும் நாட்டுக்கு அரசனாகிய குமாரன் என்பவனிடம் சென்று, யுவான்சுவாங்கினால் தனக்கு நேர்ந்த தாழ்வைக் கூற, அவ்வரசன் யுவான் சுவாங்கின் புலமையைக் கேள்வியுற்று, அவரைக் காண வேண்டித் தன்னிடம் வருமாறு அழைப்பு விடுத்தான். அவ்வாறே யுவான்சுவாங் அங்குச் சென்று, சிலநாட்கள் அவனிடம் விருந்ினராய் இருந்தார். யுவான்சுவாங் கின் நண்பராகிய ஹர்ஷ சக்கரவர்த்தியார் பிறகு அவரைத் தம்மிடம் அனுப்புமாறு கேட்க, குமாரன் அங்ஙனமே அனுப்பிவைத்தான்.

**ஹர்ஷரும் யுவான்சுவாங்கும் :**

யுவான்சுவாங்கின் போதனையால் ஹர்ஷ சக்கரவர்த்தியார் மகாயான புத்த மதத்தைத் தழுவினார். அதற்கு முன்பு அவர் வைதிக மதத்தைச் சேர்ந்தவராய் இருந்தார். புத்த மதத்தைத் தழுவிய பின், ஹர்ஷர் அம் மதத்தைப் பரப்புவதற்குத் தம் தலைநகராகிய கன்னோசியில் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்ட ஏற்பாடுசெய்தார். அம் மாநாட்டில் யுவான்சுவாங், தொடர்ந்து பல நாட்கள் மகாயான புத்த மதத்தைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடாகி இருந்தது. அதனைக் கேட்க வருமாறு, பல அர

சர்களுக்கும் பல்லாயிரக் கணக்கான பிற மதத் தலைவர் களுக்கும் ஹர்ஷர் அழைப்புக்கள் விடுத்திருந்தார். அவ் வழைப்பை ஏற்று 18 மன்னர்களும், 3000 பௌத்தத் துறவிகளும், 3000 வைதிகப் பிராமணர்களும் வந்தார்கள். நாளாந்தாவிலிருந்து 1000 பண்டிதர்களும் வந்து அதில் கலந்துகொண்டார்கள். காமரூப நாட்டு அரசனும் பெரும் பரிவாரங்களோடு வந்திருந்தான். மகாநாட்டுப் பந்த லுக்கு வெளியே, "யாரேனும் நான் சொல்வதில் ஒருவார்த் தையாவது அறிவுக்குப் பொருத்தமற்றது என்று நிரூபித் தால், நான் என் தலையை அவர்களுக்குப் பரிசாகக் கொடுப்பேன்," என்று யுவான்சுவாங் ஒரு பலகையில் எழுதித் தொங்கவிட்டிருந்தார். அவரை ஒருவரும் எதிர்த்து வாதாடத் துணியாததால், அவர் வெற்றிக் கொடியை நாட்டிப் புகழ்பெற்றார். அவருக்கெதிராகச் சில சூழ்ச்சிக்காரர்கள் குழப்பம் விளைவிக்க எண்ணியிருந் ததை அறிந்த ஹர்ஷர், அவர்களைக் கடுமையாக எச்ச ரித்து வெளியேற்றினார். பிறகு ஹர்ஷர் நாளந்தா பல் கலைக் கழகத்திற்கு வெண்கலத்தினால் செய்யப்பெற்ற நூறு அடி உயரமுள்ள கோயில் ஒன்றைப் பரிசாக அளித்தார்.

### பிறநாடுகள் நாளந்தாவைப் பின்பற்றுதல் :

நாளந்தாவில் படித்த மாணவர்களுக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெரும் புகழ் இருந்ததால், பிற நாடு களிலிருந்து அவர்களுக்கு அழைப்புக்கள் வந்துகொண் டிருந்தன. யுவான்சுவாங் அவ்வாறு அஸ்ஸாம் அரச னாலும் ஹர்ஷராலும் அழைக்கப்பட்டதைப் பார்த்தோம். மற்றும் சில பண்டிதர்களுக்கும் சீனாவிலிருந்தும் திபேத் திலிருந்தும் அழைப்புக்கள் வந்தன. திபேத்து அரசன்,

பத்மசம்பவர், சாந்தரிக்ஷர், சந்திரகோமின் என்னும் பேராசிரியர்களைத் தன் நாட்டிற்கு வரும்படி அழைத்தான். அவர்கள் அங்குச் சென்று புத்தமதக் கொள்கைகளைப் பரப்பி, பௌத்த மடங்களையும் கல்வி நிலையங்களையும் தோற்றுவிக்க உதவினார்கள். நாளாந்தாவில் பிரதி செய்யப்பட்ட பல நூல்கள் அங்கு அனுப்பப்பெற்றன. ஜாவா, சுமத்திராத் தீவுகளை ஆண்டுவந்த பலபுத்திர தேவன் என்னும் அரசன், நாளந்தாவிலிருந்து சிலரைத் தருவித்து, அதைப் போலத் தன் நாட்டில் ஒரு மடத்தைக் கட்டினான்; அதற்கு வங்காள அரசனாகிய தேவபாலன் என்னும் தனது நண்பனிடமிருந்து ஐந்து கிராமங்களை மானியமாகவும் பெற்றான். நாளந்தாவைப் பின்பற்றி மற்றும் பல பல்கலைக் கழகங்கள் இந்தியாவெங்கும் தோன்றின. அதனருகிலேயே உள்ள விக்கிரமசீலம், ஓதண்டபுரி, ஜகத்தாலம் முதலியவையும், திபேத்தில் சாக்கிய மடமும் டியூபாங் மடமும், ஆந்திரப் பகுதியில் ஸ்ரீதான்ய கடகமும், தென்னாட்டில் திருஞானசம்பந்தர் (சைவ) மடம், காஞ்சிக் கல்லூரி, முதலியவையும் இங்ஙனம் தோன்றியவையே.

**நாளந்தாவின் அழிவு :**

இங்ஙனம் தன் புகழொளியை எங்கும் வீசி, அறிவைப் பரப்புவதில் இணையற்று அரசு செலுத்தி வந்த நாளந்தாவிற்கும் அழிவு வந்துவிட்டது. அதனை அதன் இறுதிக் காலத்திற்குமுன் சில நூற்றாண்டுகளாக ஆதரித்து வந்த பீகார் தேசத்துப் பாலவம்ச அரசர்கள் தங்கள் ஆதரவை, அதன் அருகில் எதிர்ப்பாகக் கிளம்பிய மற்றொரு பல்கலைக் கழகத்திற்கு மாற்றிவிட்டார்கள். அதுவே விக்

கிரமசீலப் பல்கலைக் கழக மாகும். அதனால், நாளந்தா விற்குப் பொருள் வருவாய் குறைந்து விட்டது. அதற் குப் போட்டியாகக் கிளம்பிய விக்கிரமசீலப் பல்கலைக் கழகம் அதன்மீது ஆணை செலுத்தவும் தொடங்கிவிட்டது. அதுவே நாளந்தாவிற்கு ஆசிரியர்களையும் புரோகிதர்களை யும் நியமித்து வரலாயிற்று. ஆகவே, அதன் புகழ் மங்கி, விக்கிரமசீலத்தின் புகழ் ஓங்கி விட்டது. அன்றியும், அதே சமயத்தில் இந்தியாவில் மீண்டும் வைதிக மறு மலர்ச்சி உண்டாகிவிட்டதால், புத்த சமயப் பிரசாரம் அதிக அளவில் நடக்கமுடியாது போய்விட்டது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், பன்னிரண் டாம் நூற்றாண்டின் இறுதியில் முகமதியர் படையெடுப் பும் நிகழ்ந்தது. அப் படையெடுப்பாளர், நாளந்தாவைத் தாக்கி அதன் கட்டிடங்களை அழித்துவிட்டனர். நாளந்தா மாணவர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்ட இரண்டு வைதி கப் பிராமணர்கள், நாளந்தா மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள, அதைத் தீக்கிரையாக்கிவிட்டதாகவும் ஒரு கதை கூறப்படுகிறது.

அந்தோ ! எங்ஙனமாயினும், ஆசியா முழுவதும் பல நூற்றாண்டுகளாகத் தனி அறிவாட்சி செலுத்திவந்த நாளந்தா பல்கலைக் கழகம், பன்னிரண்டாம் நூற்றாண் டின் இறுதியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து, மண் ணோடு மண்ணாகிவிட்டது ! அதன் எழிலும் பெருமையும் மண்ணுக்கடியில் மறைந்துவிட்டன ! எனினும் அது பரப் பிய அறிவுக்கு அழிவுண்டோ ?

# 4. விக்கிரமசீலம் முதலியவை

## தோற்றம் :

நாளந்தா பல்கலைக் கழகம் இருக்கும்போதே, கிழக்கிந்தியாவில் பீகாரை ஆண்ட பால வமிசத்து அரசர்களின் பேரரசில், பல சிறு சிறு பல்கலைக் கழகங்கள் தோன்றலாயின. பால அரசர்கள் புத்த மதத்தைப் பின்பற்றி அதை ஆதரித்தவர்கள். ஆகவே அவர்களது உதவி பெற்ற புத்த மதச் சார்பான பல மடங்கள் அங்குத் தோன்றின. அம்மடங்கள் துறவிகள் தங்கிக் கல்வியை வளர்ப்பதற்கு நிலைக்களங்களாய் விளங்கின. இப்படித் தோன்றிய மடங்களுள் சில, **விக்கிரமசீலம், ஜகத்தாலம் ஓதண்டபுரி** என்பவை. இவை பிறகு நாளந்தாவைப் பின்பற்றிப் பல்கலைக் கழகங்களாய் மாறின. பீகாரில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஆண்ட தர்மபாலன் என்னும் அரசனே, முதலில் விக்கிரமசீலப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவன். பிறகு ராமபாலன் என்பவன் ஜகத்தாலத்தைத் தோற்றுவித்தான். கோபாலன் அல்லது லோகபாலன் என்பவன் ஓதண்டபுரி மடத்தை நிறுவினான்.

## இவற்றின் தொண்டு :

இவை சுமார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல்12-ஆம் நூற்றாண்டு வரை, கிழக்கிந்தியாவில் கல்விக் கேந்திரங்களாய் விளங்கின; பெரும் புலவர்களை உற்பத்தி செய்தன; பல நூல்களை இயற்றின; புத்த மதத்தைப் பிரசாரம்

செய்து வந்தன. இவற்றில் கற்றுத்தேர்ந்த புலவர்கள் திபேத்திற்கும் சென்று புத்த மதத்தைப் பரப்பி, மடங்களையும் கட்டினார்கள். வங்காளம், மகதம், காஷ்மீரம், முதலிய நாடுகளில் வசித்து வந்த புத்த பிக்ஷுக்களையும் திபேத்து அரசர்கள் தம் நாட்டிற்கு வருமாறு அழைத்தார்கள். இப் பல்கலைக் கழகங்களில் திபேத்திய மொழியும் சம்ஸ்கிருதமும் கற்பிக்கப்பட்டு வந்தன. பல சமஸ்கிருத நூல்கள் திபேத்திய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுத் திபேத்திற்கு அனுப்பப் பெற்றன. அவை இன்றளவும் அங்கு வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**விக்கிரமசீலத்தின் அமைப்பு :**

இப் பல்கலைக் கழகம் மகத (பீகார்) நாட்டில், கங்கை நதிக் கரையில், ஒரு செங்குத்தான குன்றின் மீது இருந்தது என்று கூறப்படுகிறது. இப்போது பாகல்பூரிலிருந்து கிழக்கே இருபத்து நான்கு கல் தொலைவில் உள்ள பாதர்கட்டா பாறையே அக் குன்று என்பர். எனினும் அது இருந்த இடம் எது என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. விக்கிரமன் என்னும் பெயருடைய ஒரு இயக்கன் (யக்ஷன்) இதற்கு இப்பெயர் இட்டதாகக் கூறப் படுகிறது. விக்கிரமன் என்னும் பேரறிஞனை இயக்கன் ஒருவன் இங்கு அடக்கப்பட்டதால் இதற்கு விக்கிரம சீலம் என்று பெயர் வந்ததாகவும் கூறுவர். விக்கிரமசீலம் என்பதற்கு 'உயர்ந்த அறவொழுக்கம்' என்னும் பொருள் கொண்டு, இங்கு அத்தகைய ஒழுக்கம் கற்பிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்ததால், இப்பெயர் வந்தது என்றும் சொல்லுவார்கள். இதைத் தோற்றுவித்தவர் **தர்மபாலர் (தேவபாலர்)** என்பர். " இவர் முற்பிறவியில்

நாளந்தா பல்கலைக் கழகத்தில் ஆசாரிய கம்பளர் என்னும் பெயருடன் விளங்கினார்; அப்போதே அவர் இங்கு ஒரு பல்கலைக் கழகம் கட்டவேண்டுமென்று எண்ணினார்: ஆனால் அவ்வெண்ணம் கைகூடவில்லை; அவர் சித்தியடைந்த பிறகு மகதநாட்டில் தர்மபாலர் என்னும் அரசராகப் பிறந்து இதைக் கட்டினார்'' என்று செவிவழிச் செய்தி ஒன்று கூறுகின்றது.

அவர் அதை ஒரு சிறந்த விகாரமாகக் கட்டினார்; அதில் பிக்ஷுக்கள் தங்குவதற்குரிய மடங்களையும் கூட்டங்கள் நடத்துதற்குரிய கூடங்களையும் அமைத்தார். அதன் நடுவில் ஒரு பெரிய கோயிலும், அக்கோயிலுக்குள் மகாபோதி உருவங்களும் அமைக்கப்பெற்றிருந்தன. அதைச் சுற்றி இங்குமங்குமாக ஐம்பத்துநான்கு சாதாரணக் கோயில்களும், ஐம்பத்துமூன்று சிறிய கோயில்களும் கட்டப்பெற்றிருந்தன. ஆகமொத்தம் அங்கு நூற்றெட்டுக் கோயில்கள் உண்டு. அவையெல்லாம் ஓர் உறுதியான சுற்றுச் சுவர் சூழ்ந்த மதிலுக்குள்ளேயே இருந்தன. அம்மதிலில் நான்கு பெரிய வாயில்கள் அமைக்கப்பெற்று, அவ்வாயிலை ஒட்டி நான்கு பெரிய கல்லூரிகள் இருந்தன. ஒவ்வொரு வாயிலிலும் ஒரு பெரிய பண்டிதர் அமர்த்தப்பட்டிருந்தார். அப் பண்டிதர்களுக்குத் **துவாரபண்டிதர்கள்** என்று பெயர். மதிலுக்குள்ளே வேறு இரண்டு கல்லூரிகள் இருந்தன. அக்கல்லூரிகளில் சமயக் கல்வி போதிப்பதற்கு இரண்டு பேராசிரியர்கள் இருந்தார்கள். இந்த ஆறு கல்லூரிகளையன்றி, விஞ்ஞானக் கூடம் என்பது ஒன்றும் இருந்தது. அதில் துறவின் தத்துவ நூல்களைப் படிப்பதும் வாதம் புரிவதும் வழக்கம்.

**நிருவாகம் :**

மேற்கூறிய ஆறு கல்லூரிகளையும், அவ்வக் கல்லூரிக்குரிய தலைமைப் பேராசிரியர் அறுவர் அடங்கிய குழு ஒன்று மேற்பார்வை செய்து வந்தது. அவ்வறுவருக்கும் மேலாக ஒரு புரோகிதர் இருந்தார். அவருக்குக் **குலபதி** என்று பெயர். அவரே அப் பல்கலைக் கழகத்திற்கும் தலைவர். அக் கல்லூரிகளில் பலவிதமான பாடங்களையும் கற்பிப்பதற்கு 108 பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேலும், இப் பேராசிரியர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அக் குழுக்கள் தனித்தனியே கல்வி சம்பந்தமான சில அலுவல்களைச் செய்து வந்தன. அக் குழுக்களே அன்றிப் பொது நிருவாகத்திற்காக மற்றொரு தனிக் குழுவும் இருந்தது. அது புதியவர்களாக வரும் பிக்ஷுக்களுக்குத் தீட்சையளித்தல், அவர்களுக்கு வேலைகளைக் கொடுத்து மேற்பார்வை செய்தல் முதலிய அலுவல்களைக் கவனித்து வந்தது. நாளந்தா பல்கலைக் கழகத்தின் இறுதிக் காலத்தில், அக் குழுவே அதனையும் மேற்பார்வை செய்து,அதற்குப் புரோகிதர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களை அமர்த்தி வந்தது. சில பேராசிரியர்கள் இவ்விரண்டு பல்கலைக் கழகங்களிலும் வேலை பார்த்து வந்தார்கள். அப்பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கெல்லாம் இலவச உணவும்உறையுளும் வழங்கப்பட்டன. இச் செலவுகளுக்காக அரசாங்கம் தன் பண்டாரத்திலிருந்தே பொருளைக் கொடுத்து உதவியது. அரசாங்கத்தினுடைய ஆதரவு முற்றிலும் அதற்கு இருந்ததால், அது **அரசாங்கப் பல்கலைக் கழகம்** (Royal University of Vikramasila) என்றே வழங்கப்பட்டது.

**ஆசிரியர்கள் :**

அப் பல்கலைக் கழகத்திலிருந்த ஆசிரியர்கள், பாடங் கற்பிப்பது மட்டுமின்றி, முதலில் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுகளையும் நடத்துவார்கள். அதற்காகவே நான்கு வாயில்களிலும் துவார பண்டிதர்கள் என்ற பெரும் புலவர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் மாணவர்களை மிகவும் கடினமான கேள்விகளால் சோதித்து, அச் சோதனையில் தேர்ந்தவர்களை மட்டுமே கல்லூரியில் சேர்த்துக் கொள்வார்கள். அப் பல்கலைக் கழகத்தில் இருந்த துவார பண்டிதர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள்.

அதில் முதல் முதலில் இருந்த மிக்க புகழ்பெற்ற ஆசிரியர், **ஆசாரிய புத்த ஞானபாதர்** என்பவர். அவரே அப் பல்கலைக் கழகத்தை முதலில் உருவாக்கியவர். அவர் தர்மபாலரால் அரண்மனைப் புரோகிதராக நியமிக்கப்பட்டார் ; பிறகு விக்கிரமசீல பல்கலைக் கழகத்திற்குத் தலைமைப் பிக்ஷுவாக மாற்றப்பட்டார். அங்கு அவர் புதியவர்களாய் வரும் மற்ற பிக்ஷுக்களுக்கு ஞானோபதேசமும் துறவற ஆச்சிரமும் கொடுத்துத் தீட்சை அளிப்பவராய் விளங்கினார். அவரது தலைமையில் அப் பல்கலைக் கழகம் நல்ல பெயரும் புகழும் பெற்று நாளந்தாவோடு போட்டியிடும் நிலைமைக்கு வந்துவிட்டது அவர் பல நூல்களையும் இயற்றினார்.

**தீபங்கர ஸ்ரீஞானர்** அல்லது **அதீசர்** எனப்பட்ட ஒரு மிக்க புகழ்பெற்ற ஆசிரியர் இங்கே இருந்தார். அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். மகத நாட்டரசர் அவருக்குத் தர்மபாலர் என்னும் பட்டத்தை அளித்தார். அவர் விக்கிரமசீலத்தில் தலைமைப் புரோகிதராகித் திறம்படச் செயலாற்றினார். அவர் திபேத்து நாட்டரசனால்

அழைத்து நன்கு உபசரிக்கப்பட்டார். அவர் தாந்திரிகத் துறையில் மிகவும் வல்லவராக விளங்கி, அதைப் பற்றிப் பல நூல்களையும் எழுதினார். **வைரோசன ரக்ஷிதர்** என்ற மற்றோர் ஆசிரியர் மகாபண்டிதர் என்றும் மகாசாரியர் என்றும் சிறப்பிக்கப்பட்டவர். அவரும் பல சம்ஸ்கிருத நூல்களை எழுதியும் பழைய நூல்களைத் திபேத் மொழியில் மொழிபெயர்த்தும் தொண்டு புரிந்து வந்தார். அவர் நாளந்தா பல்கலைக் கழகத்தில் இருந்த பதுமசம்பவர் என்பவரின் சீடர். **ஆசார்ய ஜேதாரி** என்னும் மற்றொருவர் அப் பல்கலைக் கழகப் பட்டதாரி. அவர் அங்கேயே ஆசிரியரானார். அவரும் பல நூல்களை எழுதினார். அவை சுமார் 100 என்பர். அவர் தமது ஏழாவது ஆண்டிலேயே விஞ்ஞானத்தில் மிகவும் விருப்பம் கொண்டு படித்தார். **பிரக்ஞாகரமதி** என்பவர் அங்கிருந்த மற்றொரு பெரிய பண்டிதர். அவர் அதன் நான்கு வாயில்களில் ஒன்றில் இருந்த துவாரபண்டிதர். அவர் கடமை பல்கலைக் கழகத்தில் சேரவரும் மாணவர்களின் அறிவின் திறத்தைப் பரிசோதிப்பதாகும். அவர் மகா பண்டிதர் என்றும் வழங்கப்பட்டார். **ஆசார்ய ரத்னாகர சாந்தி** என்பவர் புத்த மத நூல்களை எழுதிய ஒரு பேராசிரியர். அவரும் ஒரு துவார பண்டிதர். அவர் முதலில் ஓதண்டபுரி பல்கலைக் கழகத்தில் இருந்தவர்: அங்கேயே தீட்சை பெற்றுப் பிறகு, இங்கு வந்து ஆசார்ய ஜேதாரியிடம் கல்வி கற்றுத் தேர்ந்தார். அவரும் மகா பண்டிதர் என்றும் மகாசாரியார் என்றும் சிறப்பிக்கப்பட்டவர். அவர் இலங்கை அரசனால் அழைக்கப்பட்டு அங்குச் சென்றார். மேலும் அப் பல்கலைக் கழகத்தில், அபயங்கர குப்தர், மஞ்சுஸ்ரீ, தர்மகீர்த்தி, ரத்னகீர்த்தி, என்ற பல புகழ்படைத்த ஆசிரியர்கள் இருந்தார்கள்.

கல்வி :

இப் பல்கலைக் கழகமும் நாளந்தாவைப் போலவே மகாயானக் கொள்கையையே சிறப்பாகப் போதித்து வந்தது. சம்ஸ்கிருதம், திபேத்தியம், என்னும் மொழிகளும் அதில் கற்பிக்கப்பட்டு வந்தன. விஞ்ஞானக் கல்விக் கென்று ஒரு தனிக் கூடம் அதில் இருந்ததாகவும் கண்டோம். இலக்கணம், தத்துவம், சடங்குகள், முதலியவை அங்குக் கற்பிக்கப்பட்டன.

அப் பல்கலைக் கழகத்தில், அதற்கு முன்பு வேறு எங்கும் இல்லாத புதுமுறை ஒன்று கையாளப்பட்டு வந்தது. அது யாதெனின், அங்குப் படித்துத் தேறியவர்களுக்குப் பட்டங்களை வழங்குதலே. அப் பட்டங்களை அரசரே வழங்குவார். நாளந்தாவை விடத் தான் குறைந்ததன்று என்பதைக் காட்டிக்கொள்வதற்காக அப் பல்கலைக் கழகம் இவ்வழக்கத்தை மேற்கொண்டது போலும்.

மறைவு :

அப் பல்கலைக் கழகம் சுமார் கி. பி. 1200-ஆம் ஆண்டில் பக்தியார் கில்ஜி என்னும் முகமதியப் படையெடுப்பாளனால் அழிக்கப்பட்டுவிட்டது. அப்போது அதில் இருந்த துறவிகளும் இறந்து விட்டார்கள். தலைமைப் பிக்ஷு மட்டும் தப்பித் திபேத்திற்கு ஓடிவிட்டார்.

ஜகத்தாலம் :

பதினோராம் நூற்றாண்டில் வங்காளத்தின் வட பகுதியில் ஆண்டு வந்த ராமபாலன் என்பவன் இதைத் தோற்றுவித்தான். இது சுமார் ஒரு நூற்றாண்டு தழைத்திருந்து சிறந்த பண்டிதர்களை உருவாக்கியது. அவர்



...RAI UNIVERSITY L...

களுள், **விபூதிசந்திரர், தனசீலர், சுபாகரர்** என்பவர் குறிப்பிடத்தகுந்தவர். இதில் தாந்திரிக முறைக்* கல்வி அதிகமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது.

**ஜேதவனம் :**

கி. பி. நான்காம் நூற்றுண்டில் குப்த அரசர் காலத்தில் பாடலிபுரத்தில் ஒரு பெரிய பௌத்த மடம் இருந்தது. அது அழகிய சோலைகளுக்கிடையே அமைக்கப் பெற்றிருந்தது. அங்கு ஒரு பெரிய நூல் நிலையமும் இருந்தது. அது புத்த மதக் கல்விக்குப் பெயர் பெற்ற இடமாய் இருந்தது. பாஹியான் அதை நேரில் கண்டார். அதுதான் ஜேதவனப் பல்கலைக் கழகம் எனப் படுவது.

**வல்லபி :**

குஜராத்தில் இப்போது **வாலா** என்று வழங்கும் வல்லபியில், கி. பி. 5-ஆம் நூற்றுண்டு முதல் 8-ஆம் நூற்றுண்டு வரை ஒரு பல்கலைக் கழகம் இருந்தது. சீன யாத்திரிகரான இத்சிங் என்பவர் அது மேற்கிந்தியாவில் இருந்த ஒரு முக்கியக் கல்வி நிலையம் என்று குறிப்பிட்டிருக்கின்றுர். யுவான்சுவாங்கும் அங்கு நூறு மடங்கள் இருந்ததாகக் கூறுகிறுர். நாளந்தாவில் இருந்த **ஸ்திரமதி, குணமதி** என்னும் இரு ஆசிரியர்கள் அங்கு வந்து சிலகாலம் தங்கியிருந்து அதைத் திறம்பட நடத்திஞர்கள், இது நாளந்தாவைப் போல் புகழ்பெற்று அதற்குப் போட்டியாக விளங்கியது.

முதலாம் துருவன் என்னும் அரசனின் தங்கை மகளாகிய **துத்தை** என்பவர் இதை முதலில் நிறுவினர்.

---

* சொற்களால் வெளிப்படையாகக் கூருமல் கை முதலிய உறுப்புக்களின் குறியீடுகளால் கருத்தை விளக்கும் முறை.

பிறகு வல்லபியில் ஆண்ட அரசர்கள் இதற்குப் பல கட்டி டங்களையும் சிற்றூர்களையும் மானியமாக அளித்தார்கள். இங்கே இருந்த மடங்கள், **சங்காராமங்கள்** எனப்பட் டன. புத்த சங்கத்தாரது சோலை அல்லது ஆசிரமம் என்பது இச் சொல்லுக்குப் பொருளாகும். 6000 துறவி கள் இதில் இருந்தார்களாம். எவ்வகையிலும் இது நாளந்தாவிற்கு இணையாக விளங்கியது என்று இத்சிங் கூறுகிருர். இங்கே மத சம்பந்தமான விவாதங்கள் நடைபெற்றன. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பண்டிதர்கள் இங்கு வந்து விவாதங்களில் கலந்து கொள் வார்கள். இங்கே ஹீனயான புத்த மதம் சிறப்பாகப் போதிக்கப்பட்டது. இதைப் போதிப்பதற்கு அக்காலத் தில் சிறந்த கல்வி நிலையம் அல்லது மடம் ஒன்றும் இல்லை. ஆகையால் தான் இது மகாயான புத்த மதத்தைப் போதித்த நாளத்தாவிற்குப் போட்டியாக விளங்கியது.

**ஸ்ரீதான்யகடகம் * :**

கிருஷ்ணா நதிக்கரையில் அமராவதி என்னும் இடத் தின் அருகில் இப்பெயருடைய ஒரு பல்கலைக் கழகம் தோன்றியது. அது வைதிகக் கல்விக்கும் புத்த சமயக் கல்விக்கும் பெயர்பெற்ற இடமாய் இருந்தது. நகார்ஜு னர் அங்குத் தங்கி அதை நடத்தி வந்தார். அங்கிருந்து பண்டிதர்கள் சிலர் திபேத்திற்குச் சென்ருர்கள்.

**ஓதண்டபுரி :**

நாளந்தா கீழ்நிலை யடையத் தொடங்கிய காலத்தில், பீகாரில் கோபாலன் என்னும் அரசனுல், 8-ஆம் நூற்றுண் டில் ஓதண்டபுரியில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தப் பட்டது. அதில் வைதிக சமய நூல்களும் புத்த சமய

*கொர்ன் (Kern) என்பவர் எழுதிய இந்திய புத்த மதத்தின் குறிப்புகள் (Manual of Indian Buddhism) என்னும் நூலில் 143-ஆம் பக்கத்தில் இதைப்பற்றி மேலும் காணலாம்.

நூல்களும் அடங்கிய ஒரு பெரிய நூல் நிலையம் இருந்தது. அதுவும் 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகமதியர்களால் தகர்க்கப்பட்டு அழிந்தது. அங்கிருந்த துறவிகளும் கொல்லப்பட்டு விட்டார்கள்.

**காசி :**

காசியில் மிகப் பழங்காலந் தொட்டே ஒரு பல்கலைக் கழகம் இருந்ததாகத் தித்திரம் முதலிய **ஜாதகக் கதை**களால் நாம் அறிகிறோம். அங்கு ஒரு பெயர் பெற்ற பேராசிரியர் 500 மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்ததாகவும், போதிசத்துவர் மூன்று வேதங்களையும் பதினெட்டுக் கலைகளையும் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் கற்பித்து வந்ததாகவும் ஒரு ஜாதகக் கதை கூறுகிறது. காசிப் பல்கலைக் கழகம், தட்சசீலத்தில் பயிற்சிபெற்ற மாணவர்களால் உருவாக்கப்பட்டது. அங்கு ஆசிரியர்களாய் அமர்ந்திருந்தவர்களும் அம்மாணவர்களே. அங்கே இசை, மந்திர வித்தைகள் முதலியவையும் கற்பிக்கப்பட்டன. பாணினி, தமது இலக்கணத்தை அங்கேதான் இயற்றினர். புத்தர் காலத்திலும் அது ஒரு சிறந்த கல்வி நிலையமாய் இருந்தது. ஆதலாலேதான் அவர் தமது பிரசாரத்திற்கு அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தார். கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **ஜகத்குரு ஆதி சங்கராசாரியார்** அங்கே சென்று வேதாந்தக் கல்வி கற்றதாகவும் கூறப்படுகிறது. ஆகவே காசி, பண்டைக் காலத்தில் சிறந்த கல்விக் களஞ்சியமாய் இருந்தது என்பது தெளிவு.

பண்டைக் காலத்தில் அறிவு ஒளி வீசிப் புகழ் பெற்றிருந்த இப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் இன்று மறைந்து விட்டன. ஆனால் இவற்றின் பெருமை குன்றின்மேல் இட்ட தீபம்போல் இன்றும் விளங்குகிறது.

# 5. தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள்

இதுகாறும் நாம் பழங் காலத்தில் வட இந்தியாவில் இருந்த பல்கலைக் கழகங்களைப் பற்றித் தெரிந்துகொண்டோம். இனித் தென்னிந்தியாவிலும் அவ்வாறே பழங் காலத்தில் சில பல்கலைக் கழகங்கள் இருந்தன என்பதை நாம் அறியவேண்டும். அத் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள், வட இந்தியப் பல்கலைக் கழகங்கள்போல அத் துணைப் பெரியவை அல்ல. ஆயினும் அவை, பொதுவாகப் பல்கலைகளையும் கற்பதற்கு இடமாயிருந்ததால் பல் கலைக் கழகம் என்னும் பெயருக்குப் பொருந்துவனவே. அவை பொதுவாகக் **கல்லூரிகள்** என்னும் பெயருக்கு மிகவும் பொருந்தும். அவற்றைப் பற்றிக் கல்வெட்டுக் களாலும் பழைய நூற் குறிப்புக்களாலும் நாம் ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது.

**காஞ்சிப் பல்கலைக் கழகம் :**

இந்தியாவின் எழு புண்ணிய நகரங்களாகிய அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பவற்றுள் காஞ்சியும் ஒன்றாக வைத்து எண்ணப் படும் பெருமை வாய்ந்தது. நகரங்களுள் காஞ்சியே சிறந்தது என்னும் ஒரு வழக்கும் உண்டு. அது மிகப் பழமை யான நகரம். சைவம் வைணவம் ஆகிய இரண்டு வைதிக மதங்களுக்கும் மிகப் பெயர் பெற்ற கோயில்கள் அமைந்த புண்ணியத்தலம் அது. அக்கோயில்கள் ஏகாம்பரநாதர் கோயிலும் வரதராசப்பெருமாள் கோயிலும் ஆகும். இக்

காரணத்தினாலேயே அங்கு இரு சமயக் கல்வியும் மிகப் பழங்காலம் தொட்டே சிறப்புற்றிருந்தது. புத்த பெருமான் அவ்விடத்திற்கு அடிக்கடி வந்து சொற்பொழிவு செய்து, சில வைதிகர்களைத் தம் கொள்கைக்கு மாற்றினார் என்று யுவான்சுவாங் தாம் எழுதி வைத்துள்ள குறிப்புக்களில் கூறுகின்றார். ஆகவே, அது கி. மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே சைவ வைணவ சமயக் கல்விக்கு முக்கிய நிலைக்களமாய் இருந்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது. பிறகு அசோகரும் அங்குச் சில ஸ்தூபிகளை நட்டதாகவும் கூறப்படுகிறது. அத்தகைய ஸ்தூபி ஒன்றைக் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் அங்கு வந்த யுவான்சுவாங் கண்டதாகக் கூறுகிறார். சுமார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிறுதியில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் **மணிமேகலை** என்னும் நூலில், காஞ்சியில் புத்த சைத்தியங்கள் (கோயில்கள்) இருந்ததாகக் கூறப்படுகிறது. அறவண வடிகளும் அங்கிருந்து உபதேசம் செய்ததாக அந்நூல் கூறுகிறது. மணிமேகலை அங்கிருந்த பல சமயக்கணக்கர்களோடும் பேசி அவர்கள் கொள்கைகளைத் தெரிந்து கொண்டாள் என்பதையும் நாம் அந் நூலிலிருந்து அறிகிறோம். ஆகையால், மிகப் பழைய காலத்திலிருந்தே, காஞ்சி, கற்றவர்க்கு இருப்பிடமாவும் கல்விக்கு உறைவிடமாகவும் இருந்த தென்பதை நான் அறிகிறோம்.

**பல்லவர் காலம் :**

கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்கு மேல் 9-ஆம் நூற்றாண்டு வரை, காஞ்சி பல்லவ அரசர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்போதும் அது கல்விக்குப் புகழ் பெற்ற இடமாகவே இருந்தது. அக்காலத்தில் அங்குக் கடிகை என்னும் பெயருடைய வடமொழிக் கல்லூரி

இருந்ததாகத் தெரிகிறது. இரண்டு கல் வெட்டுக்கள் இதைப்பற்றிப் பேசுகின்றன. வேலூர்ப்பாளையம் கல் வெட்டு, கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த இராஜசிம்மன் என்னும் பல்லவ அரசன் அக் கடிகையைப் புதுப்பித்தான் என்று அறிவிக்கிறது. கசக்குடி என்னு மிடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு, அக் கடிகை யில் எத்தகைய கல்வி போதிக்கப்பட்டது என்பதைப் பற்றிக் கூறுகிறது. அங்கு வேதங்கள், வியாகரணம், மீமாம்சை முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவை மேற்படிப்பாகிய ஆராய்ச்சிக் கல்வியே அன்றி அடிப்படைக் கல்வி அன்று.

பல்லவர் காலத்திலேதான் ஆழ்வார்களும் நாயன்மார் களும் தங்கள் தமிழ்ப் பாடல்களால் தங்கள் சமயத்தைப் பரப்பி வந்தார்கள். ஆகவே, அப்பொழுது அவ்வாழ் வார்களும் நாயன்மார்களும் காஞ்சியிலும் தங்கள் சமயத் தொண்டினைச் செய்தார்கள் ; அங்குத் தமிழ்மணங் கமழ்ந் தது. அவர்களுள் சிலர் பல்லவ அரசர்களால் போற்றப் பட்டும் வந்தனர்.

**இரு பெரு மாணவர் :**

காஞ்சிப் பல்கலைக் கழகத்தில் படித்ததாக இருவரைப் பற்றி நாம் கேள்விப் படுகிறோம். முதலாவதாக, **மயூரசர் மன்** என்னும் பிராமணன் மேல் படிப்புகளுக்காக அங்கு வேதங்களைப் படிக்க வந்ததாகத் **தாலகுண்டா** என்னு மிடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு* ஒன்று கூறு கிறது. அவன் அங்குப் படித்துக்கொண்டிருந்தபோது

* இக் கல்வெட்டு காகுத்ஸ வர்மன் என்பவனால் ஒரு தூணில் எழுதப்பட்டது.

(கி. பி. 4-ஆம் நூற்றாண்டில்) ஒரு பல்லவ வீரனுடன் சண்டையிட நேர்ந்தது. அவ் வீரன் அவனுடைய குலத்தை இழித்துப் பேசவே, அதற்காக அவன்மீது கோபங் கொண்டு பல்லவ அரசன் மீது வஞ்சம் தீர்க்க அவன் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு அவன் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு வந்து, பல்லவ அரசைத் தாக்கி அந்நகரைக் கைப்பற்றித் தானே அரசனானதாகக் கூறப்படுகிறது. இம் மயூரசர்மனே கடம்ப வமிசம் என்னும் அரச வமிசத்தை நிறுவினான். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தர்மபாலர் என்னும் ஒரு பிராமணரும் காஞ்சியில் கற்றுத் தேர்ந்து நாளந்தா பல்கலைக் கழகத்தில் ஆசிரியராய் விளங்கினார். அவர் இவ்விடத்தில் 109 ஹினயான புத்த மதவாதிகளை ஏழு நாள் வாதிட்டு வென்றார். யுவான்சுவாங் காஞ்சிக்கு வந்த போது, அது புத்த சமயக் கல்விக்குப் பெயர் பெற்ற இடமாய் இருந்தது என்பதை அறிகிறோம். யுவான்சுவாங் காஞ்சியில் நீண்டகாலம் தங்கியிருந்தவர். அங்கு இலங்கையிலிருந்து வந்திருந்த பிக்ஷுக்களிடம் அவர் சமய நெறிகளைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டாராம். காஞ்சிக்குத் தெற்கே இருந்த ஒரு பெரிய மடத்தில், மிக்க புகழ்பெற்ற அறிவாளிகள் தங்கியிருந்தார்கள் என்றும் தெரிகிறது.

சிறப்பு :

இத்துணைச் சிறப்புக்களையுடைய காஞ்சிக் கல்லூரியை மனத்துட்கொண்டே, திருநாவுக்கரசர். “கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்” என்று அதனைச் சிறப்பித்தார் போலும்! “கற்றவர் கூட்டம் இருக்கும் இடம்”

என்ற இந்நகரை ஒரு வடமொழி நூல்* கூறுவதும் ஈண்டுக் கருதத்தக்கது.

**கடிகாசலம் :**

வட ஆற்காட்டில் திருவல்லம் என்னுமிடத்தில் அகப்பட்ட கல்வெட்டு ஒன்றில், கடிகாசலத்தில் ஒரு வடமொழிக் கல்லூரி இருந்ததாகவும், அதற்கு மானியம் விடப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கடிகாசலம் என்பது, வடமொழியில் கடிகா எனப்படும்கல்லூரி இருந்ததாலேயே இப்பெயர் பெற்றிருக்க வேண்டும்† அங்கு கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் மலைமீதிருந்த கல்லூரியையே இது குறிக்கும். அக்காலத்திற்கு முன்பும்அக்கல்லூரி அங்கு நெடுங்காலமாய் இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. இப்பொழுது கடிகாசலம் என்பது **சோழங்கிபுரம் (ஆங்கிலத்தில், சோளிங்கர்)** என்று வழங்கப்படுகிறது. இது **சோழசிங்கபுரம்** என்பதன் மரூஉப் பெயராகும். அங்கு ஒரு குன்றின்மீது நரசிங்கப் பெருமாள் கோயில் இருக்கிறது. அது வைணவர்களுக்கு முக்கிய ஸ்தலம். ஆகவே, அவ்விடத்தில் ஒரு கல்லூரியும் இருந்தது பொருத்தமே.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இருந்த **திருமங்கை ஆழ்வாரும்** இதனைத் தான் கடிகை என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று ஊகிக்கலாம். இக் கல்லூரியை 8-ஆம் நூற்

*அவந்திசுந்தரி கதாசாரம் என்னும் பல்லவர் காலத்து நூல்.

†கடிகா + அசலம்—கல்லூரியுள்ள மலை என்பது பொருள். கடிகா என்பது கடகம் என்றும் திரிந்து கல்லூரியைக் குறிக்கும் பொருளில் வரும். ஸ்ரீதான்ய கடகம் என்று ஆந்திராவில் அமராவதி என்னும் இடத்தில் ஒரு கல்லூரி இருந்ததை முன்பே கண்டோம்.

ருண்டில் ஆண்ட பல்லவ மன்னனாகிய **இரண்டாம் நந்தி வர்மன்** ஆதரித்ததாகத் தெரிகிறது. கசக்குடி சாசனங்களில் நான்கு வேதங்களும் விரிவாகக் கற்றுக்கொடுக்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வந்த மற்றொரு கடிகை குறிக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் சில தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் வாயிலாக இத்தகைய பல கடிகைகள் ஆங்காங்கு இருந்ததாக அறிகிறோம்.

**பாகூர் வடமொழிக் கல்லூரி :**

தென்னாற்காட்டில் **திருப்பாதிரிப்புலியூர்** (இக்காலத்துக் கடலூர்) அருகில், **பாகூர்** என்னுமிடத்தில் ஒரு கல்லூரி இருந்தது என்பதைப் பல்லவர் வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம். பல்லவர் காலத்திற்கு முன்பே அது சிறந்த நிலையில் இருந்திருக்கவேண்டுமென்பது தெரிகிறது. அங்குப் பதினான்கு கலைகள் கற்பிக்கப்பட்டனவாம். அவற்றுடன் பதினெட்டு வகை வித்தைகளும் கற்பிக்கப்பட்டன, அவற்றுள் மருத்தும், வில்வித்தை, இசை, பொருள்நூல் என்பனவும் சிலவாகும். மற்றையவை பெரும்பாலும் மறைகள், சாத்திரங்கள், புராணங்கள் முதலியன. இச்செய்திகள் அங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டிலிருந்தே அறியப்படுகின்றன. இக் கல்லூரி நன்கு நடைபெறுவதற்காக, மூன்று சிற்றூர்கள் மானியமாக விடப்பட்டன. அப்பாகூர் இப்பொழுது **வாகூர்** என்ற ஒரு சிற்றூராய் மாறி இருக்கிறது. அது மிகவும் பழைமையானது என்பது அங்குச் சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களால் தெரிகின்றது. அக் கல்வெட்டுக்களில் உள்ள செய்திகளைக் காணும்போது, அங்கிருந்த கல்லூரி, பல்லவர் ஆட்சியில் தென்னாட்டிற்கே

ஒரு பெருங் கல்விக் களஞ்சியமாய் இருந்தது என்பதை அறியலாம். அக்காலத்துப் பாகூரும் மிகப் பெரிய ஊராய் இருந்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது.

**சோழர் காலம் :**

இதுகாறும் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டுவரை, தென்னாட்டில் தொண்டை மண்டலப் பகுதியில் ஆண்டுவந்த பல்லவ அரசர்கள் காலத்தில் இருந்த சில கல்லூரிகளைப் பற்றி அறிந்துகொண்டோம். இனி அங்குப் பல்லவர் ஆட்சி நீங்கிச் சோழர் ஆட்சி வலுப் பெற்றிருந்த காலத்தில் இருந்த சில கல்லூரிகளைப் பற்றி நோக்குவோம்.

**எண்ணாயிரம் :**

தென்னாற்காடு மாவட்டத்தில் பதினோராம் நூற்றாண்டளவில், **எண்ணாயிரம்** என்னும் இடத்தில் இருந்த கோயில் ஒன்றில் ஒரு பெரிய வடமொழிக் கல்லூரிஇருந்த தென்பது கல்வெட்டு ஒன்றினால்* தெரிகிறது. இது முதலாம் இராஜேந்திர சோழன் ஆட்சியில் (1018-1035) நாட்டப்பெற்ற கல்வெட்டாகும். இக் கல்லூரி, அவ்வூர்ச் சபையாரால் தோற்றுவிக்கப்பட்டதென்று அது கூறுகிறது. அது இக்காலக் கல்லூரிகளைப் போல, மாணவர்கள் அங்கேயே தங்கியிருந்து படிப்பதற்கு ஏற்ற விடுதிகளைக் கொண்டது. அதில் 340 மாணவர்கள் படித்ததாகத் தெரிகிறது. அதற்கு 300 ஏக்கர் நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது, மாணவர் அனைவருக்கும் இலவசக் கல்வி, உணவு, உடை, உறையுள் முதலியவை வழங்கப்பட்டன. அதில்

*South Indian Inscription No. 333 of 1917.

வேதங்கள், இலக்கணம், வேதாந்தம், மீமாம்ஸை முதலியவை கற்பிக்கப்பட்டன. இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் இத்தனை மாணவர்கள்தான் சேர்க்கப்பட வேண்டுமென்ற வரையறை இருந்தது. ஒவ்வொரு ஆசிரியரும் இருபத்தைந்து மாணவர்களுக்கு மேற்படாமல் தம் பார்வையின் கீழ் வைத்திருந்து கல்வி கற்பித்து வந்தனர். ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு அறிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ற முறையில், தனியாகக் கவனம் செலுத்திப் பாடம் சொல்லிக் கொடுக்க முடிந்தது. இக் கல்லூரி பல அமிசங்களில் இக்காலக் கல்லூரிகளைப் போலவே விளங்கிற்று என்பது புலப்படுகிறது, இது மிகவும் செம்மையாக நடைபெற்று வந்தது.

திருமுக்கூடல் :

செங்கற்பட்டு மாவட்டத்தில் வேங்கடேசப்பெருமாள் கோயிலில் ஒரு கல்லூரி இருந்ததாக மற்றொரு கல்வெட்டு* தெரிவிக்கிறது. இக் கல்லூரியில் மாணவர் தங்கிப் படிப்பதற்குரிய விடுதிகளும், அவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து தர ஒரு மருத்துவ நிலையமும் இருந்தன. இங்கும் ஒவ்வொரு துறைக் கல்விக்கும் இத்தனை மாணவர்தான் சேர்க்கப்படவேண்டும் என்னும் வரையறை இருந்தது. இதில் வேதங்கள், வியாகரணம் முதலியவை கற்பிக்கப்பட்டன. இது வைணவக் கோயிற் கல்லூரி ஆயினும், இங்குச் சிவாகமங்களும் கற்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, அக்காலத்தில் சைவமும் வைணவமும் கலந்து தழைத்திருந்த ஒரு சமரச நிலை

*South Indian Inscription No. 182 of 1915.

யையே இது காட்டுகிறது. இக் கல்லூரியில் சாதாரண மாணவர்களே அன்றித் துறவிகளும் தங்கியிருந்து படிப்பதற்காகத் தனியே ஒரு பிரிவும் இருந்தது. ஆதலால், இது உயர்தரக் கல்விக் கூடமாகவும் இருந்ததென்பது புலனாகிறது. இதில் முழு நேர ஆசிரியர்கள் அமையாமல் ஏதேனும் குறித்த ஒரு நேரத்தில் வந்து பாடம் கற்பித்து விட்டுச் செல்லும் ஆசிரியர்கள் (part-time teachers) நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பது தெரிகிறது. இதற்கு, எண்ணாயிரம் கல்லூரியைப் போல அவ்வளவு பொருள் வருவாய் இல்லாதிருந்ததால் இந்தமுறை கையாளப் பட்டது போலும் !

இதனை வீர ராஜேந்திரதேவன் என்னும் சோழ அரசன் கி. பி. 1062-ல் நிறுவியதாக அறிகிறோம்*

**தஞ்சைக் கல்லூரி :**

பதினோராம் நூற்றாண்டில் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த இராஜராஜ சோழனது ஆட்சியில் தஞ்சையில் ஒரு கல்லூரி இருந்தது. இது, நாம் இதுவரை பார்த்தது போன்ற கல்லூரி அன்று. இதில் வைதிகக் கல்வியோ அதன் தொடர்புடைய மற்றக் கலைகளோ கற்பிக்கப்படவில்லை. தமிழ், இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளைப் பயிலுவதற்கே இக் கல்லூரி அமைக்கப்பட்டிருந்தது. இராஜராஜன் ஒரு அருங்கலை விநோதனாய் இருந்தமையால் இத்தகைய கல்லூரியை அவன் நிறுவினான் ; இங்கு இக்கலைகளைப் பயிற்றுதற்கு மற்ற இடங்களிலிருந்த நடிகர்கள், நடன மாதர்கள், இசை வாணர்கள், குழலாசிரியர்கள், தண்ணுமை (மத்தளம்) ஆசிரியர்

* Madras Ephigraphical Report for 1916, p. 119.

கள் முதலியவர்களைக் கொண்டு வந்து அமர்த்தினன். இக் கலைகளைப் பயிலுவதற்கும் பயிற்றுவதற்கும் தனித்தனிக் கூடங்கள் இருந்தன. அவை இசைக் கூடம், நடனக் கூடம், நாடகக்கூடம் என்பனவாகும். மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்குக் கல்லூரியும் தனியே கட்டப் பட்டிருந்தது. நுண்கலைகளுக்கு இத்துணை ஆதரவளித்த இராஜராஜனுடைய கலையுணர்ச்சியையும் பெருங் குணத் தையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. இக் கல் லூரி, அவனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் (பிரகதீசுவரர்) கோயிலிலேயே அமைந்திருந்தது என்பது அறியக் கிடக்கிறது.*

**குடந்தைக் கல்லூரி :**

பதினோராம் நூற்றாண்டில் குடந்தை(கும்பகோணம்) யில் பல கல்லூரிகள் இருந்தன என்று தெரிகின்றது. அங் குள்ள பல கோயில்களிலும் கல்லூரிகள் இருந்தன. அவை வடமொழி தென்மொழிக் கல்லூரிகளாகவே இருந் திருக்கவேண்டும். அவற்றுட் சில, பெரிய கல்லூரிகளாய் இருந்தன ; பெரும்பாலானவை சிறிய கல்லூரிகளே.

**புன்னைவாயில் :**

தஞ்சை மாவட்டத்தில் புன்னைவாயில் என்னுமிடத் திலும் ஒரு கல்லூரி இருந்ததாக நாம் அறிகிறோம். அஃது இலக்கணக் கல்லூரி என்றே கூறப்படுகிறது. அதுவும் அங்குள்ள கோயிலைச் சார்ந்து உண்டான கல்லூரியே. அதற்கு நானூறு ஏக்கர் நிலம் மானியமாக அளிக்கப்பட் டிருந்தது என்றும், ஐந்நூற்றுவருக்கு மேற்பட்ட மாண

* தஞ்சையில் இப்போதுள்ள சரசுவதிமால் என்னும் சிறந்த புத்தக நிலையம் இந்நகரின் பண்டைய கல்வி வளர்ச் சிக்கு ஒரு சான்றாகும்.

வர்கள் அதில் படித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் தெரிவதால், அது மிகப் பெரிய கல்லூரியாகவே இருந்திருக்கவேண்டும்.

**திருவொற்றியூர்க் கல்லூரி* :**

இது பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த ஒரு கல்லூரியாகும். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருவொற்றியூர்க் கோவிலைச் சார்ந்த கல்லூரியாகும். இதை "**வியாகரணதான வியாக்கியான மண்டபம்**" என்று வடமொழியில் கூறுவர். இதன் பொருள் இலக்கணத்தைக் கற்பித்து அது சம்பந்தமான விரிவுரை நிகழ்த்தப்படும் மண்டபம் என்பது. ஆகவே, இஃது இலக்கணக் கல்லூரி என்பது விளங்கும். சிவபெருமான், **பாணினி** என்னும் இலக்கண நூலாசிரியருக்கு இங்கு இலக்கணத்தைக் கற்பித்ததாக ஓர் வரலாறு உண்டு. அதன் நினைவாகவே இங்கு இலக்கணக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. இக் கல்லூரியைத் தோற்றுவித்தவன் நெல்லூரை ஆண்ட சிற்றரசன் ஒருவனுடைய அதிகாரி. அவன் இதற்கு மானியமாகக் "**குலோத்துங்கன் காவனூர்**" என்ற ஒரு கிராமத்தை அளித்தான். அப்போது சோழ நாட்டை ஆண்டுவந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் என்பவன் அக்கிராமத்திற்கு வரி விலக்குச் செய்தான். மேலும் இதற்கு நானூறு ஏக்கர் நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது. இக் கல்லூரியில் நானூற்றுவருக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இது தென்னாற்காட்டில் இருந்த எண்ணாயிரம் கல்லூரியைவிட மிகப் பெரியது என்றும் எண்ண இடமுண்டு. சுமார் நூறு

* Epigraphical Report No. 201 of 1912.

ஆண்டுகளுக்கு மேல் இது நன்கு நடைபெற்று வந்தது. 20 அல்லது 25 ஆசிரியர்கள் இதில் இருந்தார்கள். பதின் மூன்ரும் நூற்ருண்டின் இறுதியில் இக்கல்லூரி மறைந்து விட்டதென்னலாம்.

இங்ஙனமாகத் தென்ஞட்டில் பல சிறிய ஊர்களிலும் பெரிய திருப்பதிகளிலும் இருந்த கோயில்களை ஒட்டி உண்டான கல்லூரிகள், கல்வித் தொண்டையும் கலைத் தொண்டையும் நெடுங்காலம் சிறப்பாகச் செய்து வந்தன. பன்னிரண்டாம் நூற்ருண்டுக்குப் பின் அவை அந்நிய அரசர்களது படையெடுப்பாலும், அரசியல் குழப்பங்கள் காரணமாகவும் தொழிற் படாது நின்றுவிட்டன. ஆனல் சில நூற்ருண்டுகள் கழித்துச் சைவ வைணவ மடங்கள் கல்விப் பணியை ஏற்று நடத்தலாயின.

பின்னை நூற்ருண்டுகளில் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் முதலிய பெரிய மடங்கள் சிறந்த இலக்கிய இலக்கண நூல்களையும் சமய சாத்திரங்களையும் கொண்ட பெரிய நூல் நிலையங்களை யுடையவையாய், மாணவர்களுக்கு அங்கேயே உண்டியும் உறையுளும் அளித்துத், தக்க ஆசிரியர்களைக் கொண்டு கல்வி பயிற்றுவித்து வந்தன. இம் மடங்களின் வாயிலாக வெளிவந்த தமிழ் இலக்கண இலக்கியங்களும் சமய நூல்களும் பலப்பலவாகும். இவை மிகுந்த செல்வ வருவாயும் பெரிய கட்டிடங்களும் உடையவையாய்ப் பல்கலைக் கழகங்கள் என்று சொல்லத்தகுந்த சிறப்புடன் விளங்கின.*

* டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்ட சங்க நூல்களுக்கும் பிற நூல்களுக்கும் மிக உதவியாயிருந்தவை இம் மடங்களின் நூல் நிலையங்களில் கிடைத்த பழைய ஏட்டுச் சுவடிகளே என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

# 6. தமிழ்ச் சங்கங்கள்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழ் நாட்டில் முதல் தமிழ்ச் சங்கம் தோன்றித் தழைத்திருந்தது என்றும், அதில் அகத்தியர் முதலான பெருந் தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழாராய்ந்து சிறந்த தமிழ் நூல்களை இயற்றினார்கள் என்றும் நாம் அறிகிறோம். இத் தலைச் சங்கத்திற்கு அகத்தியர் இயற்றிய அகத்தியம் என்னும் நூல் இலக்கணமாக இருந்து வந்தது.

இந்தத் தமிழ்ச் சங்கமும் இதன் பின்னர்த் தோன்றிய மற்ற இரண்டு தமிழ்ச் சங்கங்களும் இந் நூலில் முன்னர்க் கூறப்பட்டுள்ள பொருளில் பல்கலைக் கழகங்களாகவோ கல்லூரிகளாகவோ இருந்தன என முடிவாகக் கூற முடியாவிடினும், இவை சிறந்த கல்விக் கழகங்களாய் இருந்தன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இவற்றில் பழந் தமிழ்ப் பாடல்களை ஆராய்ந்து தொகுத்தும் புது நூல்களை இயற்றியும் வந்தமையான், இவை இணையற்ற கல்விக் கழகங்களாய் இருந்தன எனத் துணிவாகக் கூறலாம். அன்றியும் இவற்றில் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்று முத்திறமாய் வகுத்து அவற்றிற்குரிய நூல்களை இயற்றி வந்தார்கள். இச் சங்கங்களில், பல்கலைக் கழகங்களிற் போலக் கல்விப் பயிற்சி பெறவரும் மாணவர்கள் சேர்க்கப்பட்டனரா என்பது அறியக்கூடவில்லை. அவ்வளவின்றி இவை மற்றெல்லா அமிசங்களிலும் பல்கலைக் கழகங்களாகவே திகழ்ந்தன என்று கூறுவது மிகை

யாகாது. ஆகவே இச் சங்கங்கள் செய்த தொண்டினை ஈண்டுக் காணப் புகுவோம்.

**முதற் சங்கம் :**

இச் சங்கம் இருந்தது என்பதற்கு **இறையனார் அகப்பொருள் உரை** சான்று பகர்கின்றது. சிலப்பதிகாரத்திற்கு **அடியார்க்கு நல்லார்** எழுதிய உரையிலும் இதைப் பற்றிக் கூறப்படுகிறது. பிற்காலத்து நூல்கள் பலவும் இதை வலியுறுத்துகின்றன. இத் தலைச் சங்கம், இக்காலத்துக் குமரி முனைக்குத் தெற்கிலிருந்ததும், பிறகு கடல் கொள்ளப்பட்டதுமாகிய ஒரு பெருநிலப் பகுதியில் தென் மதுரைக்கண் இருந்ததென்று நாம் அறிகிறோம். இக் கடல் கோள் ஏறத்தாழ 10000 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததாக **ஹேக்கல் (Haekel)** முதலிய அறிஞர் கருதுவராகலின், முதற் சங்கம் அக்காலத்திற்கு முன்பே இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவு. இது மேற்கூறிய இறையனாரகப்பொருளுரையின்படி 4500 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது என்பதையும், 89 அரசர்களது ஆட்சியில் இருந்தது என்பதையும் அறிகின்றோம். இதனை முதலில் நிறுவியவன் **காய்சின வழுதி** என்னும் பாண்டிய மன்னனாவான். **கடுங்கோன்** என்னும் பாண்டியனது ஆட்சிக் காலத்தில் இது அழிந்தது. இச் சங்கத்திலிருந்து தமிழை ஆராய்ந்த புலவர் தொகை 4449 என்பர். இஃது இருந்த இடம் **தென் மதுரை** என்பர். இச் சங்கப் புலவர்கள் இயற்றிய நூல்கள், **பரிபாடல் முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை** முதலிய எண்ணிறந்தனவாகும். இச் சங்கத்தின் தலைமைப் புலவர் **அகத்தியர்**. அவர் இயற்றிய **அகத்தியம்** என்னும் நூல்

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழின் இலக்கணத்தையும் கூறுவது, இந்நூல்கள் எல்லாம் இறந்தொழிந்தமையால் இப்போது நமக்குக் கிடைத்தில. அகத்தியரோடு இச் சங்கத்தில் இருந்து தமிழாராய்ந்த புலவர்களுள், நிதியின் கிழவன், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலியவர்களும் இருந்ததாக இறையனுரைகப் பொருளுரையிலும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிலும் கூறப்படுகின்றது.

**இடைச் சங்கம் :**

இரண்டாம் சங்கம் அல்லது **இடைச்சங்கம்** எனப்படுவது, முதற்சங்கம் அழிந்த சில காலத்திற்குப் பிறகு **கபாடபுரம்** எனப்படும் பாண்டிய நாட்டுத் தலைநகரின் கண் தோன்றியது. இக் கபாடபுரத்தைப் பற்றி வான்மீகி ராமாயணத்திலேயே குறிக்கப்பட்டிருப்பதால் இதன் பழைமையும் பெருமையும் நன்கு விளங்கும். வால்மீகி இதைப்பற்றி, “ வானர வீரர்களே! பொன் நிறைந்ததாயும் அழகுடையதாயும், முத்து மணி இவற்றுல் அணி செய்யப்பட்டதாயும் பாண்டியர்களுக்குத் தக்கதாக உள்ளதுமான கபாடபுரத்தைப் போய்க் காண்பீர்கள் ” என்று சுக்கிரீவன் வானரர்களுக்குக் கூறுவதாக வருணிக்கிருர்.* இச் சங்கம் கி. மு. 3500-க்கும், கி. மு. 500-க்குக் இடையே நிலவியிருந்ததென்பர். இதில் 449 புலவர்கள் வீற்றிருந்து தமிழாராய்ந்ததாக வழக்கு உண்டு. இதனைத் தோற்றுவித்தவன் **வெண்டேர்ச்செழியன்** என்னும் பாண்டிய மன்னன். இச் சங்கத்தின் தலைவர் **தொல்காப்பியர்** என்பதும்

---

* கவாடம் என்னும் முத்திளுல் பெயர் பெற்றது இந் நகரம் என்பதும் பொருந்தும்.

அவரியற்றிய **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூலே அக்காலத்து நூல் என்பதும் அறியக் கிடக்கின்றன. இத் தொல்காப்பியர் அகத்தியரது மாணுக்கருள் ஒருவர் என்று கூறப்படுகிருர். தொல்காப்பியம் ஒன்றே, இன்றளவும் நிலைத்துள்ள சங்க நூல்களுள் மிகப் பழைமையானது. இச் சங்கத்தில் இயற்றப்பெற்றனவாகக் கருதப் படும் சில பாடல்கள் கடைச் சங்கத்துத் தொகை நூல்கள் என்றழைக்கப்படுகின்ற **அகநானூறு. புறநானூறு** முதலியவற்றில் காணப்படுகின்றன. இச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் இருந்த **நிலந்தருதிருவிற்பாண்டியன்** காலத்தில் மீண்டும் கடல் பொங்கி வந்து, கபாடபுரத்தை அழித்து விட்டது. ஆகவே அப்பாண்டியனே இப்போதுள்ள மதுரையின்கண் மூன்ரும் தமிழ்ச் சங்கத்தை நிறுவினுன். இக் கடல் கோளால் எண்ணிறந்த தமிழ் நூல்கள் கடலுக்கிரையாயின. இச் சங்க காலத்தில் இருந்த நூல்கள் மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம், வியாழமாலை அகவல் எனப் பலவாகும். கடல் கோளால் எண்ணிறந்த கலை நூல்கள் அழிந்தொழிந் தமைக்குப் பரிந்து,

ஏரணம் உருவம் யோகம் இசை கணக்கு இரதம் சாலம்
தாரணம் மரமே சந்தம் தம்பம் நீர்நிலம் உலோகம்
மாரணம் பொருள் என்றின்ன மான நூல் பலவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள,''

என்று ஒரு புலவர் பாடுகிருர். இச் சங்கத்திலிருந்த புலவர்களாகக் கூறப்படுவோர் தொல்காப்பியர், இருந்தையூர்கருங்கோழியார், மோசியார், வெள்ளூர்க்காப்பியனுர், சிறுபாண்டரங்கனுர் முதலியோராவர்.

**மூன்றும் சங்கம் :**

கடைச்சங்கம் அல்லது மூன்றும் சங்கம் கி. மு. 500 ஆண்டு அளவில் தோன்றியது. இதன் தலைவர் நக்கீரர் என்றும், இதிலிருந்த தமிழ்ப் புலவர்கள் நாற்பத்தொன் பதின்மர் என்றும் இறையனுரைகப் பொருளுரையும் திரு விளையாடற் புராணமும் கூறும். இச்சங்கத்திலேதான் ஔவையார், திருவள்ளுவர், கபிலர், பரணர் முதலிய சான்றோர் இருந்தனர் என்று கூறப்படுகின்றது. அவர்கள் இயற்றிய நூல்களே இப்போது பொதுவாகச் சங்க நூல் கள் என்று கூறப்படுபவை. அவையாவன, எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சிலவும் ஆகும். அவை தமிழரது அரும் பெரும் பண்புகளையும் வாழ்க்கை நெறிகளையும் அறிவிக் கத்தக்க சிறந்த கருவூலங்கள் என்று போற்றப்படுகின் றன. கடைச் சங்க காலத்தில் இருந்து செய்யுட்களை இயற்றினோர் தொகை 49 என்பர். இச் சங்கத்திற்கும் தொல்காப்பியமே தலை நூலாக இருந்தது. இச் சங்கத் தின் இறுதிக் காலத்தில் கோவலன், கண்ணகி என்பவரது வாழ்க்கை பற்றிக் கூறும் சிலப்பதிகாரம், கோவலன் மகள் மணிமேகலையின் துறவைப் பற்றிக் கூறும் மணி மேகலை என்னும் பெருங் காப்பியங்கள் எழுதப்பெற்றன. அவை முறையே சமண, பௌத்த சமயங்களின் சார்பான நூல்களாகும். தமிழ் நாட்டில் சங்க காலத்தின் இறுதியில் இப்புறச் சமயங்கள் வேரூன்றி விட்டன என்பதனையே இவை காட்டுகின்றன.இவைமுறையேஇளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவர்களால் எழுதப்பெற் றவை.கி.பி. இரண்டாம்நூற்றுண்டளவில் எழுதப்பெற்ற இந்நூல்களோடு சங்க நூல்களின் காலம் முடிவடை கிறது. மூன்றும் சங்கமும் இக்காலத்தில் முடிவுற்றது.

**இருண்ட காலம் :**

அதன் பின்னர்த் தமிழ் நாட்டில் படையெடுப்பாளர் பலர் புகுந்து, அதனைக் குழப்பத்திற்குள்ளாக்கி விட்டனர். பிறகு பல நூற்றாண்டுகள் வரை தமிழ் நாட்டின் நிலை எவ்வாறிருந்ததென்பதைத் தெளிவாக அறியக்கூடவில்லை. ஆகவே இக்காலத்தைத் தமிழ் நாட்டின் இருண்ட காலம் என்பர். கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் 9-ஆம் நூற்றாண்டிற்கும் இடையே தொண்டை நாட்டில் பல்லவப் பேரரசு தோன்றி யிருந்தது. அக்காலத்தில் தமிழ் நாட்டு முடியுடை வேந்தராகிய சேர சோழபாண்டியரது நிலை எங்ஙனமிருந்ததென்பதுதெரியவில்லை. ஆனால் அவர்கள் வலிகுன்றி, அவர்களுள் சிலர் பல்லவர்களின் கீழ்ச் சிற்றரசர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும் இருந்தனர் என்பது தெரிகிறது. பல்லவர்கள் காலத்தில் சிறப்பாக வடமொழிப் புலவர்கள் ஆதரிக்கப் பெற்றனர்; தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் பல்லவர்கள் அவ்வளவாகப் போற்றிப் புரக்கவில்லை என்னலாம்.

**மறுமலர்ச்சி :**

கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தஞ்சை விஜயாலய சோழர் மரபு தலையெடுத்து மீண்டும் சோழப் பேரரசு தோன்றிய காலத்தில் வடமொழியும், சிறப்பாகத் தமிழ் மொழியும் பேணப்பட்டன. 10-ஆம் நூற்றாண்டில் இருந்த முதலாம் இராஜ இராஜ சோழன் காலத்தில் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்டுப் பயிலப்பட்டன. பிறகு வந்த சோழ மன்னர்கள் ஆட்சியில், கம்பர், சேக்கிழார், ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார் போன்ற பெருந் தமிழ்ப் புலவர்கள் தோன்றித் தமிழ் மொழியில்

இணையற்ற பெரு நூல்களைச் செய்து புகழ் பெற்றார்கள். இங்ஙனம் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையில் தமிழ் மொழி சோழராட்சியில் சிறப்புற்று விளங்கிற்று.

**சங்ககாலக் கல்வி முறை :**

சங்க காலத் தொடக்கம் முதல், நாம் இந் நூலில் ஆராய்தற்கு எடுத்துக்கொண்ட பண்டைக்காலப் பகுதி யாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிவரை, தமிழ் நாட்டில் கல்வி முறை எங்ஙனம் இருந்தது என்பதைப் பற்றி இனிக் காண்போம்.

தமிழ்ச் சங்கங்களில் மாணவர்கட்குக் கல்வி பயிற்று விக்கப்பட்டதா இல்லையா என்பதை அறிய ஏற்ற சான்று கள் நமக்குக் கிடைக்கவில்லை. அவற்றின் வரலாறுகளி லிருந்து அவை நூல்களை இயற்றுவதற்கும் ஆராய்வதற் கும் உரிய நிலையங்களாகவே இருந்தன என்று தெளிவாக அறிகிறோம். அவை உயர்தரக் கல்வியில் அல்லது ஆராய்ச் சியில் பயிற்சி அளிப்பதற்கு இக்காலக் கல்லூரிகள் அல் லது பல்கலைக் கழகங்கள்போலப் பயன்பட்டனவா அன்றா என்று முடிவாகக் கூற இயலவில்லை. ஆயின் அக் காலத் தில் கல்வி எங்கும் எப்படிப் பயிலப்பட்டது என்றகேள்வி எழுகிறது. இக் கேள்விக்கு இந் நூலில் முதற்கண் கூறப் பட்ட ஆசிரமக் கல்வி முறை போன்றதொரு முறையி லேயே அக் காலத்தில் கல்வி பயிலப்பட்டது என்னும் விடையே மிகவும் பொருந்துவது. இதனை **ஆசிரிய வழிபாட்டுக் கல்வி முறை** என்றும் கூறலாம்.

அக்காலத்தில் கல்விப் பயிற்சி வேண்டுவோர் தத்தம் சிற்றூர்களிலுள்ள புலவர்களை ஆசிரியர்களாகக்கொண்டு புலமை பெறுதற்குரிய நூல்களை வரன்முறையாகக் கற்

றுத் தெரிந்து, பின்னர் விரும்புவோர் மதுரைச் சங்கத்திற்கு வந்து புலவர்களை அணுகிச் சிறந்த இலக்கண இலக்கியங்களைப் பயின்றிருக்கக்கூடும் என்று கருதற்கு இடமுண்டு. இங்ஙனம் முதற் சங்கம் நிறுவிய அகத்தியரிடம் பன்னிரு மாணாக்கர் இருந்தனர் என்றும் கடைச் சங்கத் தலைவராகிய நக்கீரருக்கு மாணவர் பரம்பரைகள் இருந்தன என்றும் நாம் அறிகிறோம். புலவர்களை ஆசிரியர் என்று குறிப்பிட்டு அழைக்கும் பழங்கால வழக்கு இதனை மேலும் வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாகச் சீத்தலைச் சாத்தனாரை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் **தண்டமிழாசான் சாத்தன்** என்று குறிப்பிடுவதைக் காண்க. கடைச் சங்கப் புலவருள் ஒருவரான மதுரைப் பாலாசிரியனார் என்பவரது பெயரும் இதனையே காட்டுகின்றது. பிற்காலத்தும் இப்பெயர்வழக்கு தொடர்ந்து இருந்ததென்பதற்குப் **பேராசிரியர், மதுரையாசிரியர்** பாரத்துவாசி நச்சினார்க்கினியர் என்னும் பெயர்கள் சான்றாகும். ஒவ்வொரு சங்கப் பெரும் புலவர்க்கும் மாணாக்கர் பலர் இருந்திருக்கவேண்டுமென்று இவற்றால் அறிகிறோம்.

**கணக்காயர் :**

சங்க காலத்தில் ஆசிரியத் தொழில் புரிந்த சிலர் இருந்ததாகச் சங்க நூல்கள் வாயிலாக நாம் அறிகிறோம். எடுத்துக்காட்டாக நக்கீரனாரின் தந்தையார் ஓர் ஆசிரியர் என்று தெரிகின்றது. அவரைக் ***கணக்காயர் மகனார் நக்கீரனார்** என்று கூறுவது மரபு. "கணக்காயர் இல்லாத ஊர் நன்மை பயவாது" என்று "**திரிகடுகம்**" என்னும் கீழ்க்கணக்கு நூல் கூறுகிறது. இக் கணக்காயர்கள்

*கணக்கு + ஆயர் ; கணக்கு—நூல், ஆயர்—ஆராய்பவர்

பொதுப்பள்ளி ஆசிரியர்களாக அன்றித் தம் வீட்டிலேயே பள்ளிகளை வைத்து நடத்தியவர்களாக வேண்டும். அத்தகைய ஒவ்வொரு ஆசிரியர் வீடும் பலவகைக் கலைச் சுவடிகளையுடையதாய்க் கலைக் கோவிலாக விளங்க, அவ்வாசிரியரை மாணுக்கர் அணுகிப் புலமைக் கலையைக் கற்று வந்தனர்.

**ஆசிரிய வழிபாட்டுக் கல்வி முறை :**

தமிழ் நாட்டில் இக் கல்வி முறை இருந்ததற்கு நூல்களிலிருந்தும் நமக்குச் சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. புறநானூற்றில் **பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** என்னும் பாண்டிய மன்னன் பாடிய பாட்டு ஒன்றுளது. அதில் அவன் ஆசிரியரிடம் மாணவர் கல்வி கற்கவேண்டிய முறையைக் குறிப்பிடுகிறுன். இதுவே அக்காலத்தில் இருந்த கல்வி கற்கும் முறை என்று கொள்ளத்தகும்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்று தொடங்கும் அப்பாட்டின் இம் முதல் இரண்டு அடிகளில் அம்முறை சுட்டப்பெற்றுளது. "கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்", என்று முதுமொழிக் காஞ்சியும் கூறும். ஆகவே ஆசிரியரை வழிபட்டு, அவருக்குக் குற்றேவல் புரிந்து, இறுதியில் உரிய அளவினும் அதிகமாகக் கையுறை கொடுத்துக் கற்க வேண்டுமென்பது நம் நாட்டு வழக்கம்.

**ஆசிரியரிடம் தாழ்ந்து நிற்றல் :**

செல்வராயினும், நிலையில் உயர்ந்தவராயினும் ஆசிரியரிடம் கற்கும்போது, மாணவர் தம் பொய்யான மானத்தைக் கைவிட்டு, மெய்யான அறிவு பெறத் தாழ்ந்து நிற்

றல்வேண்டும். அங்ஙனம் ஆசிரியரிடம் தாழ்ந்து நின்று கல்வி கற்பதற்கு ஒருப்படாதவன், என்றும் கல்வியறிவு பெற முடியாது. இதனையே திருவள்ளுவரும்,

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா·தவர்,"

என்ற குறளில் சுட்டுகின்றார். செல்வம் உடையவர்முன்பு செல்வமில்லாத வறியவர், தம் மானத்தைத் துறந்து அவரிடம் பொருளைப் பெறவேண்டுமென்ற ஆசையால் தாழ்ந்து நின்று இரத்தல் போல, அறிவு வேண்டி நிற்கும் மாணவரும் அவ்வறிவுச் செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருக்கும் ஆசிரியரிடம் தாழ்ந்து நின்று கற்கவேண்டும். அங்ஙனம் கற்றவரே உயர்ந்தோர்: அல்லாதோர் கீழ்ப்பட்டவரே. ஆகவே கல்வி கற்குங்கால், ஆசிரியர் முன்னிலையில் மாணவன் பொய்யான மானத்தை விட்டுப் பணிவுடையவனாய் இருந்து கற்கவேண்டும் என்பதே முறை. இற்றைக்குச் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப் பெற்றதாகக் கருதப்படும் **நன்னூல்** என்னும் இலக்கண நூலில், அதன் ஆசிரியர் **பவணந்திமுனிவர்** இங்ஙனமே மாணவன் ஆசிரியரிடம் கல்வி கற்கவேண்டுமென்பதை விளக்கி,

"அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழி பாடே";
"கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகிஅவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்," என்றெல்லாம் அழகுறக் கூறியுள்ளார்.

இம் முறை, சென்ற நூற்றாண்டு வரையிலுங்கூட நம் தமிழ் நாட்டில் இருந்ததென்பதற்குக் காலஞ் சென்ற பேரறிஞர் **டாக்டர் உ. வே. சுவாமிநாதையர்** அவர்கள் வரலாறே நமக்குப் போதிய சான்றாகும். அவர் அங்ஙனமே கல்வி கற்றதாக "**என் சரித்திரம்**" என்னும் தமது வரலாற்றில் கூறியிருக்கிறார்.

ஆசிரியர்கள் நல்ல குடியிற் பிறந்தவர்களாய், தெய்வங் கொள்கையோடு தெளிவான கலைப் பயிற்சியும் கட்டுரை வன்மையும் உடையவராய் உலகியல் அறிவோடு உயர்குணமும் பெற்றிருப்பர். அவர்கள் மாணக்கர்களுக்குப் பாடம் சொல்லும்போது தக்க காலமும் இடமும் பார்த்துத் தெய்வத்தை வாழ்த்தித் தாம் சொல்லவேண்டிய பொருளை மனதில் நன்றாய் அமைத்துக்கொண்டு விரைவாகவும் முனிவுடனும் சொல்லாமல், விருப்பத்துடன் முகமலர்ந்து, மாணக்கனது ஆற்றலுக்கு ஏற்றவாறு அவனுடைய மனம் கொள்ளுமாறு சொல்லுவார்கள். ஆசிரியரிடம் பாடம் கேட்ட மாணவர் பிறகு கேட்ட பாடத்தைப் போற்றியும், கேட்டவற்றை நினைத்தும், ஐயங்களை ஆசானிடம் கேட்டுத் தெளிந்தும், தம்முடன் கற்கும் மாணவர்களை வினவியும், அவர்கள் வினவியவற்றுக்கு விடை அளித்தும் தம் ஐயம் திரிபுகளை அகற்றிக் கொள்வர்.

**பட்டி மண்டபம் :**

சங்க காலத்தில் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் அறிஞர்கள் கூடிக் கல்வி, கலைகள், முதலியவற்றைப் பயிலுவதற்குப் பட்டி மண்டபம் (வித்தியா மண்டபம்) என்னும் கல்வி நிலையங்கள் இருந்தன. இவற்றில் கலைகளை ஆராய்தல், பயிலுதல், வாதம் புரிதல் முதலிய கல்வி பற்றிய பல செயல்கள் நடைபெறும். இத்தகைய பட்டிமண்டபங்களைப் பற்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய சங்க நூல்களிலும், பிற்காலத்துத் திருவாசகத்திலும், கம்பராமாயணத்திலும் குறிப்புக்கள் உள்ளன. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் பட்டிமண்டபங்கள் இருந்தன.

"பகை புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" (சிலப்பதிகாரம்), "பட்டிமண்டபம் பாங்கறிந் தேறுமின்" (மணிமேகலை), "பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை" (திருவாசகம்). "பன்னருங் கலைதெரி பட்டிமண்டபம்" (கம்ப ராமாயணம்) என்ற அடிகள் இவ்வுண்மையை உணர்த்தும். பட்டிமண்டபத்தைக் கலையறி நிலையம் என்றும் ஆராய்ச்சிக் கூடம் என்றும் அறிஞர் கூறுவர்.

**தனிக் கலைகள் :**

இனிச் சங்க காலத்தில் **கணிதம், சோதிடம்,** மருத்துவம், **வான நூல், மண்ணியல், மரவியல், விலங்கியல், ஓவியம், இசை, நாடகம்** முதலிய பல அருங் கலைகளும் பயிலப்பட்டு வந்தன என்பது சங்க நூல்களால் அறியப்படும் உண்மையாகும். இவற்றில் தேர்ந்த பல புலவர்கள் சங்கப் பாடல்களை இயற்றிய சான்றோருள் காணப்படுகின்றனர். கணிதம், சோதிடம், வான நூல், முதலியவற்றில் தேர்ந்தவர்கள் கணி, கணியன், பெருங்கணி,

நிமித்திகன் என்ற பெயர்களால் குறிக்கப்படுவர். கணியன் பூங்குன்றனுர் என்ற பெயர் அப்புலவரது சோதிட நூற் புலமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அங்ஙனமே மருத்துவன் தாமோதரனுர் என்ற பெயரும் அப்புலவருடைய மருத்துவப் புலமையைக் காட்டுவதாகும். இனிப் புலவர் என்ற பெயரே பல்கலைகளிலும் தேர்ச்சியுடையவரையே குறிக்கும் சொல்லாக வழங்கப்பட்டது என்பது ஈண்டு அறியத்தக்கது. பழம் புலவர்கள் இலக்கிய இலக்கணப் புலமை மாத்திரம் உடையவர்களல்லர். ஒருவன் மருத்துவனுக இருக்கவேண்டுமாயின் அவன் அத் தொழிலுக்குத் துணையான சோதிடம், வான நூல் முதலியவற்றையும் கற்றிருப்பான். இலக்கியப் புலவன்கூட மக்கள் மனவியல், உலகியல், அரசியல், ·பொருளியல், இயற்கை நூலறிவு முதலிய பல கலைகளில் வல்லவனுக இருக்கவேண்டும். சுருங்கக் கூறின் ஒவ்வொரு புலவரும் ஒரு பல்கலைக் கழகமாகவும், கலைக் களஞ்சியமாகவும் நம் பண்டைத் தமிழகத்தில் விளங்கி வந்தார்கள் என்று கூறுவது தவருகாது. இந்தகைய பல்கலைப் புலமையாளர்களாகவே புலவர்கள் விளங்கினுர்கள் என்பதற்கு அவர்களுடைய பாடல்களே தக்க சான்ருக உள்ளன. புறநானூறு என்னும் சங்க நூலில் சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் என்னும் சான்ருேர் பாடிய பாட்டொன்றில்,

“ செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றறிந் தளந்தோர் போல என்றும்
இனைத்தென் போருமுளரே.”

என்று கூறி இருக்கிறார். சூரியனது வீதியையும், அதன் இயக்கத்தையும் அவ்வியக்கத்தால் சூழப்படும் பார்வட்டத்தையும் காற்று இயங்கும் திசையையும் வெறும் வெளியாகிய ஆகாயத்தையும் ஆங்காங்குப் போய் அளந்து அறிந்தவர்களைப் போல இவைநாளும் இத் துணையளவை உடையவை என்று சொல்லும் கல்வியை உடையோரு முளர் என்பது இப்பாடற் கருத்து. இதனால் இப் புலவரது வான நூற் புலமையுடன் அக்காலத்தில் கலை வளர்ச்சி எங்ஙனம் இருந்ததெனவும் அறியக்கிடக்கின்றது.

அக்காலத்தில் மருத்துவக் கலை வளர்ச்சிக்குத் தனியாகக் கழகங்கள் இருந்தன என்று தெரிகிறது. கடைச் சங்கப் புலவர்களுள் **இடைக்காடர்** என்பவர் மதுரையின் அருகிலுள்ள **இருங்குன்றம்** எனப்படும் அழகர் மலையில் மருத்து மன்றத் தலைவராயிருந்து வந்தார் என்று, அவர் இயற்றிய **மூவடி முப்பது** என்னும் நூலின் பாயிரத்தால் அறியப்படுகிறது. மற்றும் **அகத்தியர், தேரையர்** முதலிய பண்டையோர் எழுதிய மருத்துவ நூல்களில் இன்றும் நம் நாட்டு வைத்திய முறைகளுக்குப் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இனிச் சங்க நூற் புலவருக்கிருந்த **மரநூல்** அறிவு நுட்பம், இக்காலக் கலைஞர்களாலும் பாராட்டத்தக்கதாக உள்ளது. உள் வயிரம் உடையதை மரம் என்றும்வெளி வயிரம் உடையதைப் புல் என்றும் கூறவேண்டுமென்று தாவரங்களை இரு வகையாகப் பிரித்துக் கூறியுள்ள அருமையைத் தொல்காப்பிய மரபியலில்,

"புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப", என்ற சூத்

திரத்தால் அறியலாகும். குறிஞ்சிப் பாட்டில் கபிலர், குறிஞ்சி நிலச் செடிகளின் பூக்களில்மட்டும் தொண்ணூற்றென்பது வகைகளின் பெயர்களைத் தக்க அடை மொழிகளோடு விளக்கிக் கூறி இருப்பதும் இக்காலக் கலை அறிஞர்களின் அறிவிற்குப் பெரு விருந்தாகும். " வள்ளிதழ் ஒண் செங்காந்தள், எரிபுரை எறுழம், வான்பூங் குடசம், மணிப்பூங்கருவிளை, பல்லிணர்க்குரவம், தூங்கிணர்க் கொன்றை, சுடர்ப்பூந்தோன்றி", என்றெல்லாம் அவ்வாசிரியர் பூக்களின் இயல்பை எடுத்துரைத்திருப்பது இன்புறத் தக்கது. இவ்வாறே முல்லை, மருதம், நெய்தல், ஆகிய நிலங்கட்கும் உரிய தாவரங்களின் பெயர்களையும் அவற்றின் இயல்புகளையும் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். இவை யெல்லாம் அக்காலத்துப் புலவர்க்கிருந்த தாவர நூலறிவின் சிறப்பினை எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.

தொல்காப்பிய மரபியலில் விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன முதலியவற்றின் தன்மைகளை ஓர்ந்து அவற்றைக் குழுக்களாகப் பிரித்து அவற்றிற்கு வழங்க வேண்டிய மரபுப் பெயர்களை ஆசிரியர் கூறி இருப்பது, இக்கால உயிரியல் நூல் வல்லார் உயிர்களைத் தொகையாகவும் (General) வகையாகவும் (Species) பிரித்துக் கூறுதல்போன்ற நுட்பமான செய்தியாகும். உயிர்களின் பொது அமைப்பில் உள்ள ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டே,

" பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை",
" தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன",
" மூங்கா வெரு(கு)எலி மூவரி அணிலொ(டு)
ஆங்கவை நான்கும் குட்டிக் குரிய",

என்பன முதலாக வரும் சூத்திரங்களால் ஆசிரியர் உயிரினங்களை இங்ஙனம் வகைப்படுத்தியுள்ளமை விளங்கும்.

சங்க காலத்தில் ஓவியக்கலை வளர்ச்சி சிறந்தோங்கி இருந்தது என்பதற்கு **மதுரைக் காஞ்சி, மணிமேகலை** முதலிய நூல்களில் சான்றுகளைக் காணலாம். நடனக் கலையில் வல்லவளாக விளங்கிய மாதவி ஓவியக்கலையிலும் கைதேர்ந்திருந்தாள் என்பதை மணிமேகலை ஆசிரியர்,

> "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரை நூற் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை",

என்ற அடிகளால் குறிப்பிடுகிறார்.

மதுரைக் காஞ்சியில்,

> "எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
> நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
> கண்ணுள் வினைஞர்"

என்று ஓவியர்களது கைத் திறமையைப் பற்றி மாங்குடி மருதனார் வியந்து கூறுகிறார். **கண்ணுள் வினைஞர்** என்போர் ஓவியக் கலை வல்லுநர். நோக்கினார் கண்ணிடத்துத் தம் தொழிலை நிறுத்துவோர் ஆகையினால் அவர்கள் இப்பெயரால் அழைக்கப்பட்டனர்.

> "சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
> மையறு படிவத்து வானவர் முதலா
> எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
> வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
> கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்"

என்று மணிமேகலையும், கண்ணுள் வினைஞரது கைத்திறத்தால் கவரப்பட்டு மெய்ம்மறந்து நிற்கும் மாந்தரைப் பற்றிக் கூறியுள்ளது.

அக்கால இசைக்கலையின் வளர்ச்சிக்காகத் தமிழ்ச் சங்கத்தில் இசைச் சங்கம் என்று ஒரு தனிப்பிரிவு இருந்ததாகத் தெரிகிறது.

"உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச்
சூழல் புக்கோ"

என்று மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் கூறியிருப்பதாலும், ஒரு பாண்டியனை, "ஏழிசைநூற் சங்கத்திருந்தானும்" என்று புகழேந்திப் புலவர் சுட்டியிருப்பதாலும் இவ்வுண்மையை நாம் அறியலாம். அக்கால இசைக் கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அகநானூற்றுச் செய்தி ஒன்றைக் காணலாம். அஃது, ஒரு குறப்பெண் தான் காவல் காக்கும் தினைப்புனத்தில் தினையைத் தின்ன வரும் யானையைத் தடுத்து நிறுத்துவதற்கு இனிய குறிஞ்சிப் பண்ணைப் பாடினாள்; அதைக் கேட்ட யானை, தான் உண்ணவந்த தினைக் கதிரையும் மறந்து தன் நிலையினின்றும் பெயராது மெய்ம்மறந்து உறங்கிவிட்டது என்பது.

யானைகள் இசைக்குக் கட்டுண்டு நிற்கும் என்னும் செய்தி தமிழ் நூல்களில் பலவற்றிலும் காணப்படுவதொன்று. "காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல், யாழ்வரைத் தங்கி யாங்கு," என்று கலித்தொகையும் கூறும். பட்டினப்பாலையில் கருவி இசையின் இனிமையை அவ்வக் கருவிகளிலிருந்து உண்டாகும் இசைக்கேற்ற சொற்களால் அமைத்துக் கூறியிருக்கும் திறமை, நுண்ணிதின் நோக்கி யறியத்தக்கது. "குழலகவ யாழ் முரல, முழவதிர முரசியம்ப" என்ற அச் சொற்றொடர் எத்துணை இனிமையாய் அமைந்துள்ளது! சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் இளங்கோவடிகள் இசை

யாசிரியன் அமைதி, தண்ணுமையோனமைதி, குழலோனமைதி, யாழாசிரியனமைதி என அவ்வவ் விசைக்குரியாரது இலக்கணங்களை யெல்லாம் மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் கூறியிருக்கிறார்.

நாடகம் அல்லது நடனக் கலையும் அக்காலத்தில் எத்துணை உயர் நிலையில் இருந்ததென்பதைச் சிலப்பதிகாரத்தில் பரக்கக் காணலாம். அதில் ஆடலாசிரியன் அமைதி, கூத்தியதமைதி, அரங்கினமைதி, தலைக்கோலமைதி, அரங்கிற் புகுந்தாடும் முறைமை முதலியவை விரிவாகக் காணப்படுகின்றன. கூத்துக்களில் வேத்தியல்—பொதுவியல், சாந்திக் கூத்து—விநோதக் கூத்து, ஆரியம்—தமிழ், இயல்புக் கூத்து—தேசியக் கூத்து, எனப் பலவகை இருந்தன. இவற்றை விளக்க வந்த உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரே 'இவை விரிந்த நூல்களிற் காண்க' என்று குறித்துப் போந்தாரெனின், நடனக் கலையைப் பற்றிய விரிந்த நூல்கள் பல உண்டென்பது தெள்ளிதின் விளங்குகின்றதன்றோ? முதலிரண்டு சங்ககாலத்துத் தோன்றிப் பின் மறைந்துவிட்டனவாகக் கூறப்படும் பஞ்சபாரதீயம், பரதம், சயந்தம், முறுவல், பரதசேனபதீயம், மதிவாணன் நாடகத் தமிழ் நூல் என்னும் பெயர்கள் மட்டுமே நம்மை வியப்பில் ஆழ்த்துதற்குப் போதுமானவை. மாதவி நடனமாடத் தொடங்கியபோது, பலவகை இசைக் கருவிகளும் எங்ஙனம் ஒத்திசைத்தன என்றும், அவள் அதற்கேற்ப எங்ஙனம் பலவகையான நடனங்களை ஆடினாள் என்றும், சிலப்பதிகாரம் கூறுவது அக்கால நடனக் கலையின் சிறப்பைத் தெற்றென விளக்கும்.

இனிச் **சீவகசிந்தாமணி** என்னும் பெருங் காப்பியத்தில் எண்ணற்ற பெருங்கலைகளின் சிறப்புக்களை யெல்லாம் காணலாகும். அந் நூலாசிரியராகிய **திருத்தக்கதேவர்** சமண சமயத் துறவியாய் இருந்தும் பலவகைக் கலைகளிலும் கற்றுத் துறை போகியவராய் இருந்தார் என்பதை நாம் காண்கிறோம். அவர் கல்லாத கலையே இல்லை என்று சொல்லலாம். அரசியல், பொருளியல், போர் நூல், மருத்துவம், மந்திரம், இசைக் கலை, நடனக் கலை, ஓவியக் கலை, மரவியல், விலங்கியல், முதலிய பல்கலைகளிலும் அவர் வல்லவராய் இருந்தார்.

இங்ஙனம் பழந்தமிழ் நாட்டில் கல்வியும், பல கலைகளும் சிறந்திருந்தன என்று சங்க நூல்கள் வாயிலாக நாம் அறிவதால் இத்தகைய கலையறிவுகளை யெல்லாம் மக்கள் பெறுவதற்குரிய நிலையங்களாகத் தமிழ்ச் சங்கங்கள் விளங்கி யிருக்கவேண்டுமன்றோ ? தமிழ்ச் சங்கங்களில் புலவர்களுடன் அவர்களுடைய மாணாக்கர்களும் உடனிருந்து கலைகளை ஆராய்ந்தனர் என்று கூறுவது பொருந்துமென்றே தோன்றுகிறது.

# 7. புதுமையில் பழமை

## இந்தியா—உலகத்தாய் :

இக்காலத்தில் உலகில் உள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிற்கும் தாயாகவும் முன்மாதிரியாகவும் விளங்கியவை நம் பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்களே. மிகப் பழங்காலத்தில் இந்தியாவைப் போலக் கல்வி, கலைகள், பண்பாடு முதலிய பலவற்றிலும் சிறந்து விளங்கிய நாடுகள் இல்லை என்றே கூறலாம். கிரீஸ், மெஸபட்டோமியா முதலியவற்றின் நாகரிகமும் இந்தியாவின் நாகரிகத்தைப் போல எல்லா அமிசங்களிலும் அத்துணைச் சிறந்ததன்று. குறிப்பாகக் கல்வித் துறையில் அவை நம் நாட்டை விட மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. அக்காலத்தில் உலகத்தில் தட்சசீலத்தைப் போன்றதொரு பல்கலைக் கழகம் எங்கும் இருந்ததில்லை. அதற்கும் முன்பு நம் நாட்டில் காடுகளில் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு முனிவர்கள் கூட்டங் கூட்டமாக மாணவர்களுக்குக் கல்வி பயில்வித்தது போல எந்நாடுகளிலும் காணமுடியாது. நகரங்களில் வீடுகளில்கூட, நம் நாட்டில் இங்ஙனம் கல்வி பயிற்றப்பட்டு வந்தது. அக்காலங்களில் எல்லாம் மேனாடுகள் அனைத்தும் மிக மிக அநாகரிகமான நிலையிலேயே இருந்தன. அவை யெல்லாம் பிற்காலத்தில் அரேபியா, மெஸபட்டோமியா முதலிய நாடுகளின் தொடர்பால் சிறிது சிறிதாகக் கல்வியின் மணம் அறியலாயின. இக் கீழை நாடுகளும் இந்தியாவினிடமிருந்தே நாகரிகத்தின் கூறுகளைக் கற்றிருக்கவேண்டு

மென்பது ஆராய்ச்சியால் புலனாகிறது. இங்ஙனம் உலகம் முழுவதற்கும் கல்வி, நாகரிகம் முதலிய துறைகளில் தாயகமாய் விளங்கியது நம் இந்தியாவே.

**தாகூரும் சாந்திநிகேதனமும் :**

இத்தகைய இந்தியாவின் பண்பாட்டிலும் பழைமையிலும் பெருமை கொண்டவர் இரவீந்திரநாத தாகூர் என்னும் பேரறிஞர். அவர் வங்காள நாட்டில் **மகரிஷி தேவேந்திரநாத தாகூர்** என்னும் பெரியார்க்கு அருந் தவப் புதல்வராய் 1861-ஆம் ஆண்டில் பிறந்தவர். தம் தந்தையாரிடம் பெற்ற சீரிய நல்லொழுக்கப் பயிற்சியாலும் இயற்கையான நுண்ணறிவாலும், அவர் இளமை முதலே நம் நாட்டின் பழம் பெரும் பண்பாட்டிலும் இயற்கை அழகிலும் திளைத்து, ஞானியாராகவே விளங்கினார். இயற்கையையே ஆசானாகவும், பரந்த உலகத்தையே புத்தகமாகவும் கொண்டு இளமை முதல் அறிவு பெற்ற அவருக்குச் சாதாரணப் பள்ளிப் படிப்பு மிகக் குறைவாகவும் மனத்திற்கு ஒவ்வாததாகவும் இருந்தது. அதன் செயற்கையான கட்டுப்பாடுகள் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆதலால், அவர் பள்ளிப் படிப்பை வெறுத்துத் தம் விருப்பம்போல வீட்டிலேயே பல நூல்களையும் பயின்று, இயற்கையோடு உறவு கொண்டு, பேரறிஞராய் விளங்கினார் ; பின்னர்த் தம் பதினாறும் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் இங்கிலாந்திற்குச் சென்று, இலக்கியம் இசை முதலியவற்றைப் பயின்று தம் தாய் நாட்டிற்குத் திரும்பினார். இத்தகைய சிறந்த அறிஞருக்கு நம் பண்டைக் கல்வி முறையும் பண்பாடும், மேனாட்டுக் கல்வி முறையையும் பண்பாட்டையும் விட மிக உயர்ந்தனவாகத் தோன்றியதால், அவர் நம் நாட்டுக் கல்வி முறை

யைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதற்காக, போல்பூர் என்னும் இடத்தில் ஒரு கல்வி நிலையத்தை நிறுவினர். அதுவே **சாந்திநிகேதனம்** அல்லது **விசுவபாரதி** என்று வழங்கப்பட்டு, உலகப் புகழுடன் விளங்குவதாகும்.

கவிஞர் இரவீந்திரநாததாகூர் அவர்களின் தந்தை யாராகிய மகரிஷி தேவேந்திரநாததாகூர், அடிக்கடி காடுகளிலும் மலைகளிலும் சென்று தவம் புரிவதுண்டு. ஒரு கால் அவர் அப்படிச் சென்றிருந்தபோது, கல்கத்தாவிலிருந்து 100 மைல் தொலைவிலுள்ள போல்பூர் என்னும் ஊருக்கு அண்மையில் உள்ள அடர்ந்த காட்டில் அந்தி வேளையில் தம்மையும் மறந்து ஓரிடத்தில் தியானத்தில் ஆழ்ந்து இரவெல்லாம் தங்கிவிட்டார். மறுநாட் காலையில் அவர் விழித்தெழுந்து பார்த்தபோது, அவ்விடத்தின் அமைதியையும் இயற்கை எழிலையும் கண்டு வியந்தார். அங்கு அவருக்கு மன அமைதி கிடைத்ததால், அவர் அவ்விடத்தைச் 'சாந்தி நிகேதனம்' (அமைதி குடிகொண்டிருக்குமிடம்) என்று வழங்கினர். அதுவே பிற்காலத்தில் இரவீந்திரர் தம் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு இடமாயிற்று. அவ்விடத்தில் தோன்றிய பல்கலைக் கழகத்திற்கும் அதுவே பெயராயினமை மிகவும் பொருத்தமே. அப்பெயருக்கேற்ப அக் கழகத்தில் அமைதியும் இன்பமும் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையும் கல்வி முறையும் பொருந்தியிருக்கின்றன. அக் கழகம் உலகெங்கும் காணப்படாத ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது.

**தாகூரின் நோக்கம் :**

தாகூர் நம் இந்தியாவின் பழம் பெருமையிலும் பண்பாட்டிலும் தோய்ந்து திளைத்தவராகையால், அவைகளுக்கு ஏற்ப, இந்திய மக்களுக்கும் உலக மக்களுக்கும்

கல்வித் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் தொண்டு புரியவே அப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். நம் நாட்டில் மிகப் பெரிய ஆசிரியர் எல்லாரும் காடுகளில் ஆசிரமங்களில் வாழ்ந்தவர்களே என்றும், அவர்கள் இயற்கையான சூழ்நிலையில் பழகிக் கடவுளின் படைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பும் விரிந்த அன்பும் கொண்டு இருந்தவர்கள் என்றும் அவர் உணர்ந்தார். அன்றியும், அவர்களது வாழ்க்கை மிக எளியது; ஆனால் அறிவின் திறமோ மிக உயர்ந்தது. அவர்கள் தூய மனமும் சொல்லும் செயலும் உடையவர்கள்: ஆன்மிகத் துறையில் உலக முழுவதிலும் எக்காலத்திலும் யாவரும் அடைந்திராத அத்துணை உயர்வு அடைந்தவர்கள். அக்காலத்தில் நம் பெரியோர் வாழ்ந்த வாழ்க்கையே உலக முழுவதற்கும் எப்பொழுதும் எடுத்துக் காட்டாய் விளங்கவல்லது. அத்தகைய பெரியோர்கள் தம் ஆசிரமங்களில் தக்க மாணவர்களைத் தாம் கண்ட நெறியில் பயிற்றுவிப்பதற்குக் குருகுலங்கள் அமைத்துக்கொண்டு வாழ்ந்தது, நமக்கு மீண்டும் முன்மாதிரியாய் விளங்கவேண்டுமென்று தாகூர் துணிந்தார். இக்காலத்தில் மேனாடுகளிலும், அவற்றைப் பின்பற்றி நம் நாட்டிலும், தோன்றியிருக்கும் கல்வி நிலையங்களும் கல்வி முறையும் இந்த நோக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை. அது மட்டுமன்றி, அவை இந்த உயர்ந்த இலட்சியத்தை அழிக்கக்கூடியவை; அவை நம் பண்டைப் பெருமையையும் பண்பாட்டையும் மறந்து விடும்படி செய்பவை. ஆதலால், தாகூர் மேனாடுகளைக் பின்பற்றாமல், உலக முழுவதற்கும் சிறந்த உதாரணமாக விளங்கக்கூடிய முறையில் தம் சாந்திநிகேதனப் பல்கலைக் கழகத்தை நிறுவினார். இங்ஙனம் செய்ய வேண்டு

மென்று நெடுநாளாக அவர் மனத்தில் அவா உந்தியதால், அவர் அதற்குத் தக்க இயற்கையான சூழ் நிலைகள் உள்ள மேற்கூறிய இடத்தில் கல்வி நிலையத்தைத் தொடங்கினார்.

**சாந்தி நிகேதனப் பல்கலைக் கழகம் :**

இவ்விடத்தில் உயர்ந்த 'சால்' என்னும் மரங்களும் மற்ற இயற்கைச் செடி கொடிகளும் புதர்களும் நிறைந்து, இயற்கை யன்னையின் வனப்பை உள்ளது உள்ளபடியே காட்டுகின்றன. இவ்வியற்கையின் எழிலைத் திருத்தவோ அழிக்கவோ அவர் ஒருவிதமான முயற்சியும் செய்ய வில்லை. பிறர் அங்ஙனம் செய்வதற்கு அவர் உடன் படவும் இல்லை. இக்கழகம் மிகப் பரந்த ஓர் இடத்தில், இடையிடையே ஆறுகள், ஓடைகள், இயற்கையான நீர் நிலைகள், சோலைகள் முதலியவை அமைந்த ஒரு சூழலில் இருக்கிறது. ஊர்கள், நகரங்கள் முதலியவற்றின் ஆரவாரமும் சந்தடியும் அதன் அமைதியைக் குலைக்க முடியாதபடி, அது அவைகளினின்றும் விலகி நெடுந்தூரம் அப்பால் உள்ளது. இங்குப் பெரிய கட்டிடங்கள் எவையு மில்லை. சிறு சிறு குடிசைகள், பெரிய கொட்டகைகள் முதலியவையே இருக்கின்றன. இவற்றிலேதான் மாண வர்களும் ஆசிரியர்களும் தங்கி யிருப்பார்கள். பள்ளிக் கூடம், வகுப்பு அறைகள் முதலியனவும் அங்கு இல்லை. வகுப்புக்கள் மரங்களின் நிழலிலும், ஆசிரம வீடுகளின் தாழ்வாரங்களிலுமே நடத்தப்பெறும். இங்கு மாண வர்களும் ஆசிரியர்களும் சேர்ந்தே வசிப்பார்கள். பண் டைக்கால ஆசிரமக் கல்வி முறைப்படி, மாணவர்கள் தங் கள் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து கல்வி கற்கும் காலம் வரையில், ஆசியர்களுடனேயே வாழ்ந்திருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களுடன் நெருங்கிப் பழகி ஒரு குடும்பம்போல வாழ்வார்கள். கல்வி கற்க வரும் சிறு வர்கள் ஆசிரியருடைய வீட்டிலேயே தங்கியிருந்து, அவ ருடைய மனைவியால் பராமரிக்கப்படுவர். அச் சிறுவர் கள் அவ்வீடுகளைத் தம் வீடுகள் போலவே கருதி, எல்லா உரிமைகளும் பெற்று வாழ்வார்கள். அவர்களுக்குப் பெற்றோரைப் பிரிந்து வாழும் உணர்ச்சியே தோன்றாது.

**கல்வி கற்பிக்கும் முறை:**

இங்கு மாணவர்களுக்குத் திட்டமான வகுப்பு களோ பாடங்களோ பாடநேரங்களோ இல்லை. ஒவ்வொரு வகுப்பு அல்லது தர மாணவர்களுக்குக்கூடப் பாடத் திட் டங்களில் வரையறை அதிகமாய் இல்லை. மாணவர் தம் விருப்பப்படி எப் பாடத்தையும் எப்பொழுதும் படிக்க லாம்; நூல் நிலையத்தில் உள்ள பலதரப்பட்ட நூல்களைத் தாமே எடுத்துப் படித்துக் கொள்ளலாம்; மரத்தின் அடி யிலோ, ஓடையின் அருகிலோ, வீட்டின் தாழ்வாரத் திலோ, எங்கு வேண்டுமானாலும் இருந்து படிக்கலாம். ஆசிரியர்கள் அவர்களை வற்புறுத்தி ஓர் இடத்தில் அல் லது நேரத்தில் கூட்டிப் பாடம் கற்பிக்கமாட்டார்கள்; ஆனால், அவர்கள் எப்பொழுதும் பயனுள்ள பாடங்களைப் படிக்கிறார்களா என்பதை மட்டும் கண் காணித்து வரு வார்கள்; மாணவர்கள் வேண்டும்போது அவர்களுக்குத் தெரியாததை விளக்கி மறைமுகமாகப் பின்னால் இருந்து வழி காட்டுவார்கள். ஆசிரியர்கள் தங்களைக் கண் காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்னும் உணர்ச்சியும் மாணவர்களுக்கு இராது. இங்ஙனம் தாமே தம் விருப் பப்படி, தம் மனம் போனபடி, எவ்விடத்திலும் எந்த நேரத்திலும் பாடம் படிக்க மாணவர்களுக்கு முழு

உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் செய்வதால், மாணவர் தாமே தம் முழு ஆற்றலையும் வெளிப்படுத்திப் பல பொருள்களையும் தெரிந்துகொள்ள அவாவுற்று, நிறைந்த அறிவு பெறுவர்.

**பாடங்கள் :**

சாந்திநிகேதனத்தில் பலவிதமான பாடங்களையும் கலைகளையும் கற்க வாய்ப்பு உண்டு. இலக்கியம், இசை, நடனம், ஓவியம், விஞ்ஞானம், தத்துவம் முதலிய பல கலைகளையும் கற்க அங்கு வசதி உண்டு. ஆங்கிலம், சம்ஸ்கிருதம், வங்காளி, சீனம், ருஷ்யம், ஆகிய பல மொழிகளையும் கற்றுக் கொள்ளலாம். இவற்றில் எல்லாம் தேர்ந்த ஆசிரியர்கள், வேண்டும்போது மாணவர்களுக்கு உதவி செய்ய, அங்கே இருக்கிறார்கள். மாணவர் தாமாகக் கூடி ஒவ்வொரு துறைக் கல்வியையும் கற்றுத் தேறலாம். ஆறு வயது முதல் பதினெட்டு வயதுக்குட்பட்டபலதிறப்பட்ட மாணவர்கள் தத்தம் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப, ஆசிரியருடைய உதவிகொண்டு, இப்பாடங்கள் அனைத்தையும் கற்கலாம். இங்ஙனம் பாடங்களைக் கற்பதில் சுய முயற்சியும் தன்னம்பிக்கையும் மாணவர்கள்பால் உண்டாக்கப்படுகின்றன.

**அன்றாட வேலை :**

சாந்திநிகேதனத்தில் ஒரு நாள் வாழ்க்கை எங்ஙனம் உள்ளது என்பதைப் பார்ப்போம் : கதிரவன் தோன்றுவதற்கு முன்பே, வைகறைப் போழ்தில், சில மாணவர்கள் கூட்டமாகப் பாடிக்கொண்டு ஆசிரமங்களைச் சுற்றி வருவார்கள். இவ்வோசையைக்கேட்டு யாவரும் துயிலெழுவார்கள். பிறகு எல்லாரும் ஆறு, ஓடை, குளம், கேணி முதலியவற்றில் குளிக்கப் போவார்கள். குளித்த பின்பு

பதினைந்து நிமிட நேரம் ஒவ்வொருவரும் ஒரு தனியிடத்திலிருந்து அமைதியாகக் கடவுளைத் தியானம் செய்வார்கள். அவரவர் தத்தம் விருப்பப்படி எக்கடவுளையும் தியானிக்கலாம். பிறகு கூட்டங் கூட்டமாக மரங்களின் அடியில் இருந்து மாணவர்கள் தோத்திரப் பாடல்களைப் பாடுவார்கள். காலை 7 மணிக்குப் படிப்புத் தொடங்கும். திறந்த வெளியிலோ, தாழ்வாரங்களிலோ, யாவரும் தாம் விரும்பிய பாடங்களைப் படித்துக் கொள்ளலாம். நண் பகல் உணவு அருந்திவிட்டு, யாவரும் 2 மணி வரையில் ஒய்வு கொள்வர். மீண்டும் 5 மணி வரை பாடம் நடக்கும். அதன் பிறகு மாணவர்கள் விளையாடப் போவார்கள். மேனாட்டு முறைப்படி கால்பந்து முதலிய குழு விளையாட்டுக்களும், தேகப்பயிற்சிக்குரிய மற்ற விளையாட்டுக்களும் அங்குப் பயிலப்படும். மாலையில் சூரியன் மறையும் நேரத்தில் அனைவரும், மீண்டும் பிரார்த்தனை செய்வர். இரவு உணவுக்கு முன் ஏதேனும் சில வுகைக் கேளிக்கைகள் நிகழ்த்தப்பெறும். அவை நாடகம், கதைகள் சொல்லுதல், இசை, விருந்து, நடனம் முதலியவற்றுள் ஏதேனும் ஆகும். பிறகு உணவருந்திவிட்டு, 9-30 மணிக்கு யாவரும் உறங்கச் செல்வர். இங்ஙனம் மிக உற்சாகமாக ஒவ்வொரு நாளும் அங்குக் கழிகிறது.

**சிறப்பியல்புகள் :**

சாந்திநிகேதனத்தில் மாணவர்கள் நாள்தோறும் மேற்கூறிய ஒரே விதமாகப் படிப்பும் பொழுது போக்கும் செய்யவேண்டுமென்ற நியதி இல்லை. அடிக்கடி யாவரும் சேர்ந்து உல்லாசப் பயணம் செய்வர். அப்போது செல்லும் வழியிலேயே மேற்கூறிய முறைப்படி பாடங்களும்

பொழுது போக்குகளும் நிகழும். இரண்டு மூன்று கல் தொலைவிலுள்ள ஒரு குன்று அல்லது காட்டை அணுகி அவர்கள் இன்பமாகப் பொழுது போக்குவார்கள்: மாலை நேரத்தில் அடிக்கடி அத்தகைய இடங்களுக்குச் சென்று கதைகள் சொல்லுதல், பாட்டுக்கள் பாடுதல், நாடகங்கள் நடித்தல் முதலியவை செய்வார்கள். மாணவர்களுக்கு நல்ல பண்புகளும் ஒழுக்கமும் சுய முயற்சியும் உடல் உழைப்பும் ஏற்படுதற்கு நிறைய வாய்ப்புக்கள் அளிக்கப் படுகின்றன. அவர்கள் தாங்களே ஒழுங்கு தவறியவர் களைத் தண்டிப்பார்கள். அதற்காக மாணவர்களுடைய விசாரணை மன்றங்கள் உண்டு. ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளைத் தாமே செய்து கொள்வர். எந்த வேலையை யும் இழிவு என்றோ, செய்யத் தகாதது என்றோ அவர்கள் கருதுவதில்லை. இலக்கியப் பொழுது போக்கிற்காகவும் கற்பனைத் திறமையை வளர்ப்பதற்காகவும் கட்டுரை எழு தல், கவி புனைதல், கதை கூறுதல் முதலிய ஆக்கத்தொழில் களில் மாணவர்களை ஆசிரியர்கள் ஈடுபடுத்துவார்கள். ஒரு கண்காட்சிச்சாலையை ஏற்படுத்தி அதில் மாணவர்கள் தேடிக் கொணர்ந்த அரும் பொருள்கள், வரைந்த ஓவியங் கள் முதலியவற்றை வைத்திருப்பார்கள். இதனைக் கண் ணும் கருத்துமாய்ப் பேணி வளர்க்க மாணவர்களே முனை வார்கள். இப் *பல்கலைக் கழகத்திற்குத் தலைமை* ஆசிரியர் என்று ஒருவரும் இல்லை. ஆனால், ஓர் ஆசிரியர் குழு உண்டு. அது பொதுவான மேற்பார்வை வேலைகளையும் அமைப்பு வேலைகளையுமே கவனிக்கும். இயற்கையின் தூண்டுதலே மாணவர்களுச்கு ஆசிரியராய் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தினால், இவ்வாசிரியர்கள் மாண வர்களை வற்புறுத்தி ஒன்றையும் கற்பிப்பதில்லை. இங்கு ஒரு மருத்துவ நிலையமும், பல முதியோர் கல்வி நிலையங்

களும் இருக்கின்றன. அவற்றையும் மாணவர்களே நடத்துகிறார்கள். இவ்வாறாகப் பல துறைகளிலும் மாணவர்களது அறிவு, ஒழுக்கம், கற்பனை, ஆக்கத் திறமை, ஆன்மீக உயர்வு முதலிய பண்புகளை வளர்ப்பதே இப் பல்கலைக் கழகத்தின் நோக்கமும் தொண்டும் ஆகும். இதனைக் கோயிலும் வீடும் ஒன்றாகத் கலந்த ஒரு கலைக் கூடமாக்கவே தாகூர் முயன்று அதில் வெற்றி பெற்றார். அதனால், இதன் பெருமை உலகம் முழுவதும் பரவி, பல அயல் நாட்டு மாணவர்களும் இதில் வந்து சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறார்கள். பல மதத்தவர்களும் இனத்தவர்களும் வேறுபாடு இன்றி இங்கே கலந்து படிக்கிறார்கள். இதன் ஒப்புயர்வற்ற தன்மையையும் இலட்சியங்களையும் கண்டு உவந்து, இந்திய அரசாங்கம் இதனை மத்தியப் பல்கலைக் கழகமாக மாற்றித் தன் பொறுப்பில் ஏற்று நடத்தி வருகின்றது. **விசுவபாரதி** (பல்கலைப் பெருங் கல்வி நிலையம்) என்ற பெயருக்கேற்ப இது உலக முழுவதற்கும் ஒரு முன்மாதிரியாய் விளங்கிச் சிறந்த தொண்டாற்றி வருவது போற்றற்குரியது. இதில் கற்றுத் தேர்ந்தவர்கள் எல்லா அமிசங்களிலும் முழுத் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்குகிறார்கள் என்பது ஈண்டுக் குறிக்கத் தகுந்தது.

**காசி இந்து பல்கலைக் கழகம் :**

வாரணாசி (Benaras) என்று பழங்காலம் தொட்டுப் புராண இதிகாசங்களில் புகழ் பெற்று விளங்கும் காசி க்ஷேத்திரத்தில், **காசி இந்துப் பல்கலைங் கழகம்** என்னும் பெயருடன் இன்று ஒரு மாபெருங் கல்வி நிலையம் திகழ்ந்து வருவதும் ஈண்டுக் காணத்தக்கது. இதுவும் சாந்திநிகேதனத்தைப் போல் நம் இந்தியாவின் பழம் பெருமையிலும் பண்பாட்டிலும் நாட்டங் கொண்டு

அவற்றை உலகுக்கு எடுத்துக் காட்டவும் நம் இந்தியர்களுக்குத் தொண்டு புரியவும் அமைந்த ஒரு பல்கலைக் கழகமாகும். இதனைத் தோற்றுவித்தவர் **பண்டித மதன மோகன மாளவியா** என்னும் ஒரு பெருந் தேசத் தொண்டர். அவர் இந்து சமயக் கல்வியிலும், வேத சாஸ்திர புராணம் முதலியவற்றிலும் மேனாட்டுக் கல்வியின் சிறப்பியல்புகள் முதலியவற்றிலும் ஒருங்கே தேர்ச்சியடைந்தவர். ஆகவே, கீழ்நாடுகள், மேனாடுகள் என்னும் இரண்டின் பண்பாட்டிலும் உள்ள சிறப்பான கூறுகளைக் கொண்டு ஒரு புதுக் கல்வி நிலையத்தை அவர் உருவாக்க எண்ணினார். காசி மிகப் பழங்காலம் முதலே வைதிகக் கல்விக்குப் பெயர் பெற்ற இடமென்பதை நாம் முன்பே கண்டோம். அத்தகைய சிறந்த இடமே தாம் கருதிய பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு உகந்த இடம் என்று அவர் எண்ணி, அங்ஙனமே செய்தார். 1916-ஆம் ஆண்டில் அது தொடங்கப் பெற்றது.

**நோக்கங்கள் :**

மேனாட்டுக் கல்வி முறையிலும் வாழ்க்கை முறையிலும் காணப்படும் விஞ்ஞான வளர்ச்சி, பொருளாதாரச் சிறப்பு முதலியவற்றை, கீழ்நாட்டுக் கல்வி முறையிலும் வாழ்க்கை முறையிலும் காணப்படும் மெய்ஞ்ஞானக்கூறு, ஆன்மீக வளர்ச்சி, ஒழுக்கம் முதலியவற்றுடன் இணைத்து ஒரு புதுக் கல்வி முறையைப் புகட்ட வேண்டுமென்பதே காசி இந்து சர்வகலாசாலையின் பொதுவான நோக்கமாகும். இதன் முக்கியமான அடிப்படை நோக்கம் பழைய வைதிக மதத்தின் சிறப்பியல்புகளைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதே. அதற்காக இந்து வேதங்கள் சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள், சம்ஸ்கிருத இலக்கிய இலக்கணக் கல்வி முதலியவை இங்

குப்போதிக்கப்படுகின்றன. இந்துக்களின் மிக உயர்ந்த சிந்தனைகளும் பண்பாடும் இவற்றிலேதான் அடங்கியிருக்கின்றன என்பது இக்கழகத்தை நிறுவியவர்களின் கருத்தாகும். இவையன்றி உலகத்தில் மற்றெந்த மொழியிலும், நாட்டிலும் உயர்ந்தனவாகக் காணப்படும் எல்லா அமிசங்களும் இங்கே தழுவிப் போற்றப்படும். மாணவர்களிடம் நல்ல பண்புகளையும் ஒழுக்கத்தையும் உண்டாக்குவது இதன் மற்றொரு சீரிய நோக்கமாகும். அதற்காகச் சமயக் கல்வியும் ஒழுக்க நூல்களும், இங்கு அளிக்கப்படும் எல்லா வகைக் கல்வியினுள்ளும் இணை பிரியாத பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் இப் பல்கலைக் கழகம் பல்லாற்றானும் சிறந்து விளங்கி, நாட்டுக்கு உயர்ந்த தொண்டு புரிவதையே தன் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. பண்டைப் பெருங் கல்வி நிலையங்களாகிய தட்சசீலம், நாளந்தா ஆகியவற்றிற்குரிய பெருமையை இது மீண்டும் நமக்கு நினைவுறுத்துகின்றது என்னலாம்.

**கழகத்தின் அமைப்பு :**

இக் கழகம் கங்கை நதிக்கரையில் கிழக்கு நோக்கி 3000 ஏக்கர் பரப்புள்ள ஒரு விரிந்த சமவெளியில் கட்டப் பெற்றிருக்கிறது. இதில் இருநூற்றுக்கு மேற்பட்ட பல வகைக் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் மிகப் பெரியது. கல்வி போதனைக்கென்று எட்டுக் கல்லூரிகள் இதன்கண் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு வகைக் கல்வி பயில்பவருக்கும் தனித்தனிக் கல்லூரிகளும் மாணவர் விடுதிகளும் கட்டப்பெற்றுள்ளன. அக் கட்டிடங்களின் கோபுர அமைப்பும் மாடங்களும், நம் நாட்டில் உள்ள பெருங்கோயில்கள் பலவற்றை நமக்கு நினைவூட்டுகின்றன. இதனை ஒரு கலைக்கோயில் என்று

கூறுவது முற்றிலும் பொருந்தும். மொத்தம் சுமார் 4000 மாணவர்களும் 300 ஆசிரியர்களும் இப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்றார்கள். முப்பத்து மூன்று தனித்தனிக் கல்விப் பிரிவுகள் இருக்கின்றன. மாணவர்கள் விளையாடுவதற்குப் பரந்த வெளிகள் பல இருக்கின்றன. இது அகில இந்தியப் புகழ்பெற்ற ஒரு பெரும் பல்கலைக் கழகமாய் விளங்கி வருகிறது.

### தொழிற் கல்வித் துறைகள் :

இப் பல்கலைக் கழகத்தில் பல வகைக் கல்வித் துறைகள் இருக்கின்றன. அறிவுத் துறைக் கல்வியே அன்றி, தொழில் துறைக் கல்வியும் இங்கு அளிக்கப்படுகிறது. அறிவுத் துறையில் இலக்கியம், விஞ்ஞானம், மொழி, சமயம் முதலியவை பட்டப் படிப்பு வரையில் கற்பிக்கப் படுகின்றன. தொழில் துறையில், இயந்திரத் தொழில்கள், கைத் தொழில்கள், தொழில் நுட்பக் கல்வி முதலியவை போதிக்கப்படுகின்றன. தொழில் துறைக் கல்வியாலேதான் நம் நாடு பல தொழில்களிலும் முன்னேறிப் பொருளாதாரச் சிறப்படைய முடியும் என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, அத் துறையில் இங்குப் பல பிரிவுகளை வைத்துக் கல்வி கற்பிக்கின்றனர். இந்தியாவுக்கே உரிய மருத்துவக் கலைப் பிரிவாகிய ஆயுர்வேதக் கல்வி இங்குச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. அதனைப் பயில்வதற்கு ஒரு தனிக் கல்லூரியும் மருத்துவ நிலையமும் (ஆஸ்பத்திரி) இருக்கின்றன ; ஓர் ஆராய்ச்சிப் பிரிவும் இருக்கிறது. அவ்வாராய்ச்சிப் பிரிவில் மருந்துகளைச் செய்யும் முறையும் கற்பிக்கப்படுகிறது. மருந்துச் செடிகள் அல்லது மூலிகைகளை வளர்ப்பதற்கு அங்கு ஒரு பெரிய தோட்டம் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

விலங்குகளுக்கு வைத்தியம் செய்வதைக் கற்பிப்பதற்காக ஒரு விலங்கு மருத்துவச் சாலையும் அங்கே உளது. சோதிடப் பிரிவில், வான நூல், வானிலை ஆராய்ச்சி முதலியவை கற்பிக்கப்படுகின்றன. இதற்காகத் தனி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அர்த்த சாஸ்திரக் கல்லூரியில் பௌதிகம், செய்முறை இயந்திரக் கல்வி முதலியவை பயிலப் பெறுகின்றன. இதை யொட்டி ஒரு தொழிற் கூடமும் இருக்கிறது. இயந்திரத் தொழில் நுட்பக் கல்லூரியில், நில நூல், சுரங்கத் தொழில், உலோகத் தொழில் முதலியவை கற்பிக்கப்படும். இங்குக் கற்பிக்கப்படும் இத்துறைக் கல்வி, இந்தியா முழுவதிலுமே மிக உயர்ந்த தரமுடையதாகவும் தனிச் சிறப்புடையதாகவும் இருக்கிறது. இங்குள்ள விவசாயக் கல்லூரியில் நவீன உழவு முறைகளும் நுணுக்கங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**'காந்தர்வ வேதக் கல்லூரி'** என்னும் மற்றொரு கல்லூரி இங்கு உண்டு. அதில் இசை (கருவி இசை, மிடற்று இசை), ஓவியம், சிற்பம், நடனம், நாடகம் முதலிய இன் கலைகள் பயிலப் படுகின்றன. தொலிற்றியற் கல்லூரியில், இயந்திரத் தொழில், மின்சாரத் தொழில் முதலியவை போதிக்கப்படுகின்றன. கைத்தொழிற் கல்விப் பிரிவில், எண்ணெய் எடுத்தல், சோப்புச் செய்தல், பீங்கான் கண்ணாடிச் சாமான்கள் செய்தல், மருந்துகள் செய்தல், எனாமல் வேலை முதலியவற்றில் பயிற்சி யளிக்கப்படுகிறது.

**அறிவுக் கல்வித் துறைகள் :**

அறிவுக் கல்வித் துறையில் முதலாவதாக வேதக் கல்லூரி ஒன்று இங்கே இருக்கிறது. அதில் வேதங்கள், வேதாங்கங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், மந்திரங்கள் முதலியவை கற்பிக்கப்படுகின்றன,

இவற்றில் தேர்ந்தவர்களுக்குச் ‘ சாஸ்திரி ’ என்ற பட்டம் அளிக்கப்படுகிறது. மொழித் துறையில் ஆங்கிலம், ஜெர்மன், முதலிய அந்நிய மொழிகளுடன் இந்திய மொழி களாகிய சம்ஸ்கிருதம், இந்தி, முதலியவையும் போதிக் கப்படுகின்றன. தமிழ், தெலுங்கு முதலிய தென்னிந்திய மொழிகளும் அங்குப் பாடமாக உள்ளன. தென்னாட் டுக்கே உரிய சமயமென்று கருதப்படும் சைவ சித்தாந்த சமயக் கல்வியும் அங்குச் சிறப்பாகப் போதிக்கப்படு கின்றது. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர்களா கத் தொழில் புரிய விரும்புவோருக்கு வேண்டிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர் படைக்கலப் பயற்சி பெறு வதற்காகத் தனி வகுப்பும் அங்கு நடைபெறுகிறது. இறுதியாகப் பெண்கள் கல்வி கற்பதற்கென்று தனியாக உள்ள ஒரு கல்லூரியில், அவர்களுக்கு உகந்த பாடங்கள், கலைகள் முதலிய எல்லாம் கற்பிக்கப்படுகின்றன.

**தேசீயக் கல்வி :**

இங்ஙனம் மேற்கூறிய கல்வித் துறைகள் எல்லாம், நம் இந்தியப் பண்பாட்டின் அடிப்படையில் கற்பிக்கப் படவேண்டுமென்று, நம் நாட்டில் குடியேறி நமக்கு ஒப் பற்ற தொண்டுகள் செய்த **அன்னி பெஸண்டு** என்ற அயர்லாந்து நாட்டு அம்மையார், நெடுங்காலமாக வற் புறுத்திவந்து, தம் கனவை நனவாக்கக் கருதிக் காசியில் **மத்திய இந்துக் கல்லூரி** என்ற கல்வி நிலையத்தை முத லில் தோற்றுவித்தார். அது சிலகாலம் சிறந்த தொண் டாற்றி, இறுதியில் மாளவியா அவர்களின் சீரிய முயற்சி யால் ஒரு பெரும் பல்கலைக் கழகமாக விரிவடைந்தது. அதனையே இன்று நாம் காசி இந்து பல்கலைக் கழகமாக,

அறிவு வானத்தில் ஒளிவிட்டு மிளிரும் கதிரவனைக் காண்கிறோம். அதன் பயனை இன்று இந்தியா முழுவதும் துய்த்து வருகிறது.

**சென்னைப் பல்கலைக் கழகம் :**

இப்பல்கலைக்கழகம் 1857-ஆம் ஆண்டில் ஆங்கில அரசியற் காலத்தில் தோன்றியது. இந்தியா முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இஃது ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக மதிக்கப்பட்டு வருகின்றது. இதில் மேனாட்டுக் கல்வியும் கீழ்நாட்டுக் கல்வியும், பல துறைகளாகப் பிரிக்கப்பட்டுத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்பட்டு வருகின்றன. பல துறை விஞ்ஞான ஆராய்ச்சியும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, அராபியம், முதலிய மொழிகளின் நூல் ஆராய்ச்சியும் செய்யப்பட்டு, இவைபற்றிய நூல் வெளியீடுகளும் இப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வருகின்றன. இங்கு வடமொழி நீங்கலாக, ஏனைய கீழ்நாட்டுக் கல்வித் துறைகளுக்கு இல்லாத ஒரு சிறப்பிடம் தமிழுக்கு அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அஃதாவது தமிழ்த்துறைத் தலைவருக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்வரை இல்லாதிருந்த பேராசிரியர் நிலை (Professorship) அளிக்கப்பட்டிருப்பதேயாகும். பேராசிரியர் ரா. பி. **சேதுப்பிள்ளை** அவர்களே இந்நிலையை முதலில் அடைந்தவர்.

இக்கழகத்தில் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக, துணை வேந்தராக இருந்து அருந்தொண்டாற்றிவரும் உலகப் புகழ் பெற்ற **டாக்டர் ஏ. இலட்சுமண சுவாமி முதலியார்** அவர்களது சலியா உழைப்பினால், இக்கழகம் பல துறைகளிலும் வியக்கத்தகுந்த முன்னேற்றமடைந்திருக்கின்றது. இதனுடன் இணைக்கப்பட்டு, இதன் உறுப்

புக்களாக இருந்துவரும் சென்னை மாநிலக் கல்லூரிகளின் எண்ணிக்கை எழுபதுக்கு மேலாகும். அவற்றில் பயிலும் மாணவர்களின் தொகையும் பல்லாயிரக் கணக்கில் உள்ளது. 1957-ஆம் ஆண்டில் இப்பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா, சென்னையிலும் மற்றும் பல முக்கிய நகரங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம் :**

இக்கழகம் 1929-ஆம் ஆண்டில் செட்டி நாட்டு அரசரும் கொடைவள்ளலும் ராஜா சர். **அண்ணாமலைச் செட்டியார்** அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இதனைத் தமிழ்ப் பல்கலைக்கழகமாகவே நடத்தவேண்டும் என்னும் நோக்கம் அன்னாருக்கு நிரம்ப இருந்தது. இப்பொழுது அதன் புரவலராக இருந்துவரும் அவரது புதல்வர் ராஜா சர். **முத்தையா செட்டியார்** அவர்களும் இக்கருத்துடையவரே. ஆகவேதான் இக்கழகம், ஏனைய பல்கலைக் கழகங்கள் போல் ஆங்கிலக் கல்வியையே முதன்மையாகக் கொண்டு நடை பெறுமல், தமிழ்க் கலையை வளர்ப்பதனையும் முதன்மையாகக் கொண்டு அரும்பணி புரிந்து வருகின்றது. தமிழ்ப் புலமைக் கல்லூரி, தமிழ் ஆராய்ச்சிப் பிரிவு, தமிழிசைப் பகுதி, மொழி நூற் பகுதி, என இப்பல்கலைக் கழகத்தில் பல துறைகள் உண்டு. இதன் வாயிலாக வெளிவந்த தமிழ் நூல்களும், இசை நூல்களும் பல. இது மேனாட்டுக் கலை நூல்களையும் தமிழ் மொழியில் வெளியிட்டுத் தமிழில் கலைவளத்தை உண்டாக்கியும் வருகின்றது. அன்றியும் இக்கழகத்தில் பொறியியல், உழவுத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி, ஆசிரியப் பயிற்சிக்கல்வி, முதலிய பல தொழிற்றுறைக் கல்வியும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது.

இதன் சிறப்பான அமைப்புவிதி ஒன்று யாதெனின், ஆசிரியர்களும் மாணவர்களும் பல்கலைக்கழக எல்லைக்குள்ளேயே தங்கியிருக்க வேண்டு மென்பது. இத்தகைய அமைப்புடன் கூடிய பல்கலைக்கழகம் (Residential University) தமிழ் நாட்டில் இஃது ஒன்றேயாகும். இப்பொழுது இதன் துணை வேந்தராக இருந்துவரும் பேரறிஞர் **திரு. நாராயணசுவாமி பிள்ளை** அவர்கள் இக்கழகத்தின் ஆட்சியை முன்னேற்ற முறையில் திறம்பட நடத்தி வருகிறார்கள். இக்கழகத்தின் 25-ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வெள்ளிவிழாவும் 1955-ஆம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

**மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் :**

மதுரையில் இருந்த மூன்றும் தமிழ்ச் சங்கம் அழிந்த பிறகு பன்னூறாண்டுகளாக அங்குத் தமிழ்ச் சங்கம் இல்லாத குறையை நீக்கக் கருதி 1901-ஆம் ஆண்டில், இராமநாதபுரம் சேது மன்னர்களது வழித்தோன்றலான **பாண்டித்துரைத் தேவர்** அவர்களால், நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அது முதலாக இச்சங்கம் தக்க ஆசிரியர்களைக் கொண்டு, தமிழ்த் துறையில் ஆராய்ச்சி, நூல்வெளியீடு, செந்தமிழ்த் திங்கள் வெளியீடு மாணவர்க்குத் தமிழ்க் கல்வி பயிற்றல், புலமைத் தேர்வு நடத்தல், ஆகிய பல பணிகளை ஆற்றி வருகின்றது .இவற்றிற்காகத் தனித்தனிப் பிரிவுகள் இச்சங்கத்தில் உள்ளன. பல பழைய நூல்களும் ஏட்டுச் சுவடிகளும் நிறைந்த பெரிய நூல் நிலையம் ஒன்றும் இங்குள்ளது.

இச் சங்கத்தில் பல தமிழ்ப் புலவர்களும் ஆங்கிலத் தமிழ்ப் புலவர்களும் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். செயற் குழு ஒன்று இதனை மேற்பார்த்து வருகின்றது. இச்சங்கத்தின் தலைவராக திரு. **சண்முக ராஜேஸ்வர சேதுபதி** அவர்களும், துணைத் தலைவராக திரு. **தமிழவேள் பி. டி. இராசன்** அவர்களும் இருந்து, இதனை மேலும் உயர்நிலைக்குக் கொண்டுவர முயன்று செயல் புரிந்து வருகின்றார்கள்.

# 8. முடிவுரை

நம் பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்களைப் பற்றி நாம் இது காறும் இந்த நூலில் கண்டோம். அவற்றின் உயர்ந்த குறிக்கோள்களையும் சிறந்த தொண்டையும் நாம் மறத்தல் கூடுமோ? எக்காலத்திற்கும் உகந்த பல சீரிய அறிவுரைகளையும் அறவுரைகளையும் அவை நமக்கு வழங்கியிருக்கின்றன. அவை என்றும் நமக்கு ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் தந்து உயர்வடைவதற்கு வழி காட்டிகளாய் உள்ளன. அவ்வுரைகளுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**பிரிவுரை :**

பண்டைக் குருகுலங்களில் மாணவன் தன் கல்வியை முடித்துக்கொண்டு வீடு திரும்பும்போது ஆசிரியர் அவனுக்குக் கீழ்க்காணுமாறு பிரிவுரை பகர்வார்; "உண்மையையே பேசு; அறவழியில் நட; வேதங்களைப் படிப்பதை மறந்து விடாதே; பிறர்க்கென வாழ்; உடலைப் பேணு; உலக இன்பத்தை வெறுக்காதே; மணம் செய்துகொண்டு சந்ததியறுமல் பார்த்துக்கொள்; தாய் தந்தையரைத் தெய்வமாகப் பேணு: ஆசிரியனைத் தெய்வமாகக் கருது; விருந்தினரை உபசரிப்பாயாக." இவ்வுரை எத்துணை இரத்தினச் சுருக்கமாக நம் கடமைகளையெல்லாம் நமக்கு எடுத்து ஓதி, உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக",

என்னும் குறள் ஒன்றிற்கு மேற்கூறிய உரையை நாம் இணையாகச் சொல்லலாம். மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் இக் குறளில் தொனிப்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால் உணரலாம். மேலும் மேலும் நல்லவற்றைக் கற்க வேண்டுமென்றும், கற்ற நெறிப்படியே ஒழுக வேண்டுமென்றும், இவ்வுரையும் இக்குறளும் நமக்கு வற்புறுத்துகின்றன. சாதாரண அறிவுக் கல்வி பயில்பவனுக்கு இப் பிரிவுரை வழங்கப்படுவது மரபு.

தொழிற் கல்வி பயில்பவர்களுக்கும் அக் காலத்தில், கல்வி முடித்துத் தம் வீடு திரும்பு முன்னர் ஆசிரியர் அறிவுரை வழங்குவார். எடுத்துக்காட்டாக மருத்துவக் கல்வி முடித்துச் செல்லும் மாணவனுக்கு ஆசிரியர்கூறும் பிரிவுரையை இங்குக் காண்போம்: "நீ தொழில் செய்து வருவாய் பெறும்போது உன் ஆசிரியனுக்குரிய கையுறையை வழங்கு. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்களையும் பசுக்களையும் மற்ற எல்லா உயிர்களையும் காப்பாற்று. உன் உடல் நோயுற்றாலும் அஞ்சாது, உன்னிடம் வரும் நோயாளிகளின் நலத்தைப் பேணு. எளிய ஆடைகளையே அணிந்துகொள். இனிமையாகப் பேசு. உன் அறிவை வளர்த்துக்கொள். ஏழைகளிடமிருந்தும் பெண்களிடமிருந்தும் பணத்தைப் பெற்றுக்கொள்ளாதே. நோயாளிகளினுடைய நோயைப் பற்றி ஒருவருக்கும் சொல்லாதே. நோயாளிக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் அச்சத்தை உண்டுபண்ணாதே. எங்கிருந்து யாரிடமிருந்து கலையறிவு கிடைத்தாலும் பெற்றுக்கொள்."

இவ்வுரையிலும் எத்துணை உயரிய கருத்துக்களும் அனுபவ அறிவுச் செறிவும் இருக்கின்றன என்பதைக் கூர்ந்து பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இக்காலத் திற்கூட, இவ்வளவு உயர்ந்த முறையில் மருத்துவக் கல்விப்பட்டதாரிகளுக்கு ஒருவர் அறிவுரை வழங்க முடியுமா என்பது ஐயமே.

**பழந்தமிழ் அறிவுரை :**

இவ்வறிவுரைகளைப் போன்றே பழந் தமிழ்க் கருவூல மாகிய புறநானூற்றிலும் ஒரு சிறந்த அறிவுரை உளது. அது பொதுவாக யாவருக்கும் ஒப்ப அமைந்த ஓர் அறிவுரை. அதனைக் கடைப்பிடிப்பவர் உண்மையில் சான்றோராய் விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இறக்கும் தறுவாயில் இருக்கும் மூப்புடைய சான்றோரை நோக்கி நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர் பாடியதாக உள்ள அச் செய்யுளின் ஈற்றடிகள் பின்வருவன :

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் : அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்,
நால்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே."

சான்றோராகிய சிலர் அக்காலத்து வேறு வேறு பயனற்ற துறைகளில் செயலாற்றி வந்ததைக் கண்ட அப்புலவர் வருந்தி, அவர்களை நல்வழிப் படுத்துதற்காக இங்ஙனம் கூறினர். நல்லது செய்ய யாவருக்கும் ஆற்றல் இராமல் போகக்கூடும்; அதற்காக அவர்கள் தீமை செய்தல் கூடாது ; தீமை செய்யாமல் தம்மைத் தடுத்துப் பாது காத்துக் கொள்ளவேண்டும் ; அங்ஙனமிருந்தால் யாவரும் அவர்களைக் கண்டு மகிழ்வார்கள் ; யாவரையும் நல்ல

வழிப்படுத்தும் நெறியும் அதுவே, என்று நரிவெரூஉத் தலையார் நயம்படக் கூறியுள்ளார். கல்வி கேள்வி குணங்களால் நிறைந்தவராயின், அவர்கள் யாவருக்கும் இன்பம் தரும் செயல்களையே செய்யவேண்டும். நல்லது செய்தால், தாமும் பிறரும் இன்பமடையலாம். தீயது செய்தால், தாமும் பிறரும் வருந்தவேண்டியிருக்கும். தமக்கேனும் துன்பம் வாராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானல், மக்கள் பிறருக்குத் தீங்கு செய்யாதிருக்கவேண்டும். அதாவது, தன்னலங் கருதியேனும், தீங்கு செய்யாதிருக்கக்கடவர்.

"தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

என்ற குறள் இதனையே வற்புறுத்துகிறது. ஆகவே, யாவரையும் நல்வழிப் படுத்தக்கூடிய நெறி, ஒருவரும் பிறருக்குத் தீங்கு செய்யாமல் இருத்தலேயாம். நல்லது செய்தலை விடத் தீமை செய்யாமல் இருப்பது யாவருக்கும் இயைவதொன்று. அதனல் எல்லாரும் மகிழ்வர். தீமை செய்யாமலிருப்பதே, பிறகு நல்லது செய்து நன்மை பெறுவதற்குரிய நன்னெறியாகவும் அமையும். அதுவே நன்மை செய்வதற்கு முதற்படியுமாகும். ஆதலாலே தான் நரிவெரூஉத் தலையார் இங்ஙனம், உலக அனுபவத்தால் தாம் அறிந்த உண்மையை வற்புறுத்திக் கூறினர். இவ்வறிவுரையை ஒவ்வொருவரும் உளத்தில் பொன்னே போலப் பொதிந்து வைத்துப் போற்றக்கடவர். இது கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் ஒப்ப முடிந்த சிறந்த அறிவுரையாகும். பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவில் கூறத் தகுந்தது இவ்வறி

வுரை. நம் இந்தியப் பண்பாட்டினைத் தெற்றென விளக்கும் இக் குறிக்கோளை இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு ஏற்றதொரு நோக்கமாகக் கொள்ளலாம்.

நாளந்தா பல்கலைக் கழகத்தின் பொன்மொழிகளுள் ஒன்று கீழ்க் காணுமாறு அக் கழகத்தில் எழுதிவைக்கப் பெற்றிருந்ததாக நாம் அறிகிறோம் :

> "உலோபிக்கு நிறையப் பொருள் கொடுத்து அவனைத் திருத்துக. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க. இதுவே இவ்விருவரையும் வெல்லும் வழியாகும்."

எத்துணை உயர்ந்த குறிக்கோள் இது! வாழ்க நம் பண்டைப் பண்பாடு!

MADURAI UNIVERSITY LIB...
MADURAI.

---

*Book Presented by:*
Dr. T. P. MEENAKSHISUNDARAN
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

## BOOKS CONSULTED


1. Taxila (3 Vols.)—Sir. John Marshall
2. A Guide to Taxila
3. Univesity of Nalanda—Sankalia
4. History of Education in Ancient India Mazumd
6. The Imperial Age of the Guptas—Bhara Vidhya Bhavan
6. Pallavas of Kanchi—B. Gopalan
7. Education in Ancient India—Altakar
8. Educational System of the Ancient Hind – S. K. D
9. Indian Teachers of the Buddhist Universities—P. Bo
10. Man and Thought in Ancient India —R. Muker
11. Ancient India—K. A. Nilakanta Sastr
12. Early History of India—V. A. Smith
13. Santiniketan—Pearson
14. Benares Hindu University —V. A. Sundara